www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்ச் 2009
ரூ. 7.00



வழக்குரைஞர்கள் மீதான தாக்குதல்:

## அம்பலமானது

## போலீசின் உண்மை முகம்!
## தி.மு.க.வின் பொய் முகம்!

படிப்பகம்

www.padippakam.com






## ஈழத் தமிழ் மக்கள் மீதான இனவெறிப் போரில் சிங்கள பாசிச அரசுடன் கைகோர்த்து நிற்கும் இந்திய அரசைக் கண்டித்து

# தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் மறியல்-ஆர்ப்பாட்டங்கள்

ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆதரித்தும், சிங்கள பாசிச அரசு நடத்திவரும் இன வெறிப் போரை எதிர்த்தும், அந்தப் போரில் சிங்கள அரசுடன் கைகோர்த்து நிற்கும் மேலாதிக்க இந்திய அரசைக் கண்டித்தும் 26.01.09 'குடியரசு' தினத்தன்று ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகளும் மனித உரிமை பாதுகாப்பு மையமும் இணைந்து சென்னையில் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் வீச்சான பிரச்சாரத்தோடு கடந்த ஜனவரி 30, 31 ஆகிய தேதிகளில் போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் நடத்தியுள்ளன.

திருச்சியில் 30.01.09 அன்று இவ்வமைப்புகள் ஆர்ப்பாட்டம்-சாலை மறியல் போராட்டத்தை நடத்தியதோடு, காங்கிரசு கட்சியின் அலுவலக வாயிலின் முன்பாக மன்மோகன்சிங், ராஜபக்சே ஆகியோரின் உருவ பொம்மைகளைச் செருப்பால் அடித்து, விண்ணதிரும் முழக்கங்களுடன் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை மக்களின் பெருத்த வரவேற்போடு நடத்தின. திருச்சியிலும் தருமபுரியிலும் சாலைமறியல் போராட்டம் நடத்திய பெண்கள்-குழந்தைகள், சிறுவர்கள் உள்ளிட்ட முன்னணியாளர்கள் பிணை மறுக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். சென்னையில் பு.மா.இ.மு. தோழர்கள் வீதி நாடகம் நடத்தி மாணவர்களைத் திரட்டி பச்சையப்பன் கல்லூரி வாயிலில் நடத்திய சாலை மறியல் போராட்டம் தொடங்கி, தஞ்சை, திருச்சி, திருவாரூர், கடலூர், விழுப்புரம், புதுச்சேரி, பென்னாகரம் முதலான இடங்களில் இவ்வமைப்புகளின் முன்முயற்சியால் பல்வேறு பள்ளி-கல்லூரிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் திரட்டப்பட்டு ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

தீக்குளித்து மாண்ட முத்துக்குமாரின் இறுதி ஊர்வலத்தை, மவுன ஊர்வலமாக நடத்த முற்பட்ட ஓட்டுப்பொறுக்கி பிழைப்புவாதிகளைத் தனிமைப்படுத்தி, இந்த ஊர்வலத்தை இந்திய மேலாதிக்கத்தை திரைகிழிக்கும் அரசியல் முழக்கங்களுடன் போர்க்குணமிக்க அரசியல் கிளர்ச்சியாக மாற்றியமைத்ததில் இவ்வமைப்புகள் முக்கிய பாத்திரமாற்றியுள்ளன. இதே போல, சீர்காழியில் தீக்குளித்து இறந்த காங்கிரசுக்காரின் உடலை 'காங்கிரசு கொலைகாரர்கள்' கைப்பற்ற விடாமல் விரட்டியடித்து, அவரது மரணத்தை இந்திய மேலாதிக்கவாதிகளுக்கு எதிரான அரசியல் பிரச்சாரமாக மாற்றியதில் இவ்வமைப்புகள் முதன்மைப் பங்காற்றியுள்ளன.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்







படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 5**

மார்ச் 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## ஈழப் போர்:

# இந்திய மேலாதிக்கத்தை மூடிமறைக்கும் திராவிடக் கட்சிகளின் கபடத்தனம்

ஈழத் தமிழ் மக்கள் மீது மிகக் கொடிய இன அழிப்புப் போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை எச்சரித்து வெளியேற்றி விட்டு, ஊடகங்களுக்கும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களுக்கும் உள்ளே நுழையத் தடை விதித்து விட்டு, புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக் கொண்டு, முல்லைத் தீவு மக்கள் அனைவரின் மீதும் குண்டுமாரி பொழிந்துள்ளது, சிங்கள இராணுவம். முல்லைத் தீவின் பெரும்பகுதியைச் சுடுகாடாக்கி, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள புதுக்குடியிருப்பு பகுதியில் தற்போது மூர்க்கமான இறுதித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. உயிரிழந்தவர்களை அப்புறப்படுத்த இயலாதோடு, காயமடைந்த மக்கள் மருத்துவ வசதியின்றிச் சித்திரவதையை அனுபவித்து மெல்ல மெல்லச் சாகும் கொடூரம் நடந்து கொண்டிருக்கிறது.

ஐ.நா. பொதுச்செயலரும் மேலைநாடுகளும் சம்பிரதாயமாக போர்நிறுத்தக் கோரிக்கையை வைத்துள்ள போதிலும், இதை அலட்சியப்படுத்திவிட்டு ஆணவத்தோடு போரைத் தொடர்கிறது சிங்கள இனவெறி அரசு. போருக்கு எதிராகக் குரல் கொடுத்து, சிங்கள அரசை அம்பலப்படுத்திய சிங்களப் பத்திரிகையாளர்களையும் அறிவுத்துறையினரையும் இரகசிய கொலைப்படையை ஏவிக் கொன்றொழித்து வருகிறது, ராஜபக்சே அரசு.

இலங்கை அரசின் இந்த ஆணவத்துக்கும் திமிருக்கும் முக்கிய காரணம், இந்திய அரசு இலங்கை அரசுக்குத் தைரியமூட்டித் துணையாக நிற்பதுதான். மூர்க்கத்தனமான இக்கொடிய போரை நடத்திப் புலிகளைத் துடைத்தொழிப்பது; ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டாலும், எத்தனை கண்டனங்கள் எழுந்தாலும் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவதென்பது ராஜபக்சே அரசின் 'கொள்கையாக' மட்டும் இல்லை. அதுவே இந்திய அரசின் கொள்கையாகவும் இருக்கிறது.

போர் முடிந்த பின்னர், இலங்கையில் மேற்கொள்ளவிருக்கும் அரசியல் - பொருளாதார மறுநிர்மாணப் பணிகளில் இந்தியாவின் பங்கைப் பற்றி பேசுவதற்குத் தான் பிரணாப் முகர்ஜி இலங்கைக்குச் சென்று வந்தார் என்பது, அண்மையில் அவர் விடுத்துள்ள அறிக்கையின் மூலம் நிரூபணமாகியுள்ளது. போருக்குப் பின் இலங்கையின் மீது தனது அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தை உறுதி செய்து கொள்வது; இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, சிங்கள அரசின் ஈழத் தமிழின அழிப்புப் போரைத் தனது சொந்தப் போராகக் கருதி நடத்துவது என்பதே இந்திய அரசின் கொள்கை.

இருப்பினும் நெடுமாறன் போன்றோர், ஈழப் பிரச்சினையில் இந்தியா தவறான நிலை எடுக்கக் காரணம் இந்திய அரசின் வெளியுறவுத் துறையைச் சேர்ந்த பார்ப்பன மற்றும் மலையாள அதிகாரிகள்தான் என்றும், அவர்களது தவறான வழிகாட்டுதல் காரணமாகவே சிங்கள அரசை சோனியாவும் மன்மோகனும் நம்புகின்றனர் என்றும் வாதிடுகின்றனர். வேறு சிலர், தனது கணவரைக் கொன்ற புலிகளைப் பழிவாங்கவே, சோனியா ராஜபக்சேவுக்கு உதவுகிறார் என்கின்றனர். இத்தகைய வாதங்கள் அனைத்துமே மையமான பிரச்சினையிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்கும், இந்திய மேலாதிக்கத்தின் பின்னே உள்ள ஆளும் வர்க்க நலனை மூடிமறைப்பதற்கும்தான் பயன்பட்டிருக்கின்றன.

ஈழ மக்களுக்குத் தமிழகத்தில் நிலவும் ஆதரவு என்பது இன்னமும் ஒரு மனிதாபிமான அடிப்படையிலும், இன உணர்வின் அடிப்படையிலும்தான் இருக்கிறதேயன்றி, இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பது, ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது என்ற நோக்கில் மக்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில், ஈழப்பிரச்சினை தமிழக மக்களிடம் அரசியல் ரீதியான கொந்தளிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் ஆளும் வர்க்கங்களும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் மிகக் கவனமாக இருக்கின்றனர்.

காங்கிரசுடனான கூட்டணியை இறுகப் பற்றிக் கொண்டு, தனது வாரிசுகளின் எதிர்காலத்தையும் அவர்களது அரசியல் அதிகாரத்தையும் உத்திரவாதப்படுத்திக் கொள்வதையே தனது முதல் நோக்கமாகக் கொண்டிருக்கும் கருணாநிதி, அந்த நோக்கத்தை

படிப்பகம்

www.padippakam.com



குண்டுவீச்சில் காயமடைந்த ஈழத் தமிழ் சிறுவர்கள் போதிய வசதிகள் அற்ற மருத்துவமனையில் 'சிகிச்சை' பெறும் அவலம்.

நிறைவேற்றும் வகையில் ஈழப் பிரச்சினையைத் தந்திரமாக நீர்த்துப் போக வைக்கிறார். யாராலும் எதுவும் செய்ய முடியாது, நம் கையில் ஏதுவுமே இல்லை என்பதைப் போன்றதொரு பிரச்சினையாக இதனைச் சித்தரித்துக் காட்டுகிறார். தமிழர்கள் தன் தலைமையில் ஒன்றுபடாமல் பிரிந்து இருப்பதனால்தான் எதுவும் செய்ய இயலாத நிலைக்குத் தான் தள்ளப்பட்டிருப்பதைப் போன்றதொரு பொய்த் தோற்றத்தையும் உருவாக்குகிறார்.

பார்ப்பன பாசிஸ்டான ஜெயலலிதாவோ, 'கொள்கை ரீதியாகவே' ஈழத் தமிழின அழிப்புப் போரை ஆதரிக்கிறார். ஈழ மக்கள் போரில் கொல்லப்படுவதை வெளிப்படையாகவே ஆதரித்துப் பேசிய ஜெயலலிதா, இப்போது தேர்தல் ஆதாயத்தை மனதிற்கொண்டு தந்திரமாக மவுனம் சாதிக்கிறார்.

ஜெயலலிதாவைப் போலவே சி.பி.எம். கட்சியினரும் இப்பிரச்சினையில் 'கொள்கை ரீதியாகவே' சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையையும், அதற்கு இந்திய அரசு துணை நிற்பதையும் ஆதரிக்கின்றனர். இதனால் தமிழக மக்கள் மத்தியில் மிகவும் அம்பலப்பட்டுப் போனதன் காரணமாக, இப்போது பேரணி-ஆர்ப்பாட்டம் என்று நாடகமாடுகின்றனர்.

சவடால் அடிக்கும் விஜயகாந்த், சரத்குமார் ஆகியோர் சிங்கள இனவெறிப் போருக்கு எதிராக அறிக்கை வெளியிட்டு அடையாள எதிர்ப்பு நாடகமாடுவதைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை. இவர்கள் எவரையும் ஊடகங்கள் அம்பலப்படுத்துவதுமில்லை. இவர்களது தந்திரமான மவுனம் குறித்துக் கேள்வியும் எழுப்புவதில்லை. பார்ப்பன ஊடகங்கள் அனைத்தும் சிங்கள இனவெறிக்கு ஆதரவாக நின்று நஞ்சைக் கக்குகின்றன. சிங்கள அரசின் பாசிச அடக்குமுறை பற்றிய செய்திகளைத் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்து வருகின்றன.

இத்தகைய சூழலில் வைகோ, நெடுமாறன், ராமதாசு, திருமா, தா.பாண்டியன், பா.ஜ.க. ஆகியோர் ஒன்று சேர்ந்து மிகவும் படாடோபமாக அறிவித்திருக்கும் ''இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்'', ஆபாசமான சந்தர்ப்பவாதத்தின் முழு வடிவமாகவே இருக்கிறது. வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா அணிக்குத் தாவுவதற்குத் தோதாக, ராமதாசு தயாரித்திருக்கும் உந்துபலகையாகவே இந்த அணி அமைந்திருக்கிறது. தன்னுடைய மகனை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகச் சொல்லி, கடைசி இரண்டே மாதங்களில் அன்புமணி கல்லா கட்டக் கூடிய தொகையைக் கூடத் 'தியாகம்' செய்யத் தயாராக இல்லாத மருத்துவர் ஐயா, கருணாநிதியை மட்டும் விமர்சிப்பதை பாமர மக்கள்கூட எள்ளி நகையாடுகின்றனர். ஏதோ அதிபயங்கரமான போராட்டங்களைக் கைவசம் வைத்திருப்பதைப் போலவும், கருணாநிதிதான் அதைத் தடுத்துக் கொண்டிருப்பதைப் போலவும் பேசிய ராமதாசும், தா.பாண்டியனும், இப்போது கருணாநிதி கூறும் வகையில் போராட்டம் நடத்தத் தயாராக இருப்பதாக அறிவிப்பதெல்லாம், இது நாடாளுமன்ற நாற்காலி பேரத்துக்காக நடத்தப்படும் நாடகம் என்பதையே நிரூபித்துக் காட்டுகின்றன.

காங்கிரசின் காலை நக்குவதற்கென்றே யு.சி.பி.ஐ. என்றொரு கட்சியை ஆரம்பித்து, ராஜீவ் காந்திக்கு கூஜா தூக்கி, சிறீபெரும்புதூரில் ராஜீவ் கொல்லப்பட்ட நிகழ்வையொட்டி புலிகளுக்கு எதிராக காங்கிரசுடன் சேர்ந்து வெறிக்கூச்சல் போட்ட தா.பாண்டியனுக்கு இப்போது திடீர் தமிழுணர்வு வந்து புலி வேசம் கட்டி ஆடுகிறார். மைய அரசுக்கு எதிராக வீரதீர சவடால் அடிக்கும் பாண்டியனாரின் அனைத்திந்திய 'கம்யூனிஸ்ட்' கட்சி, மைய அரசை எதிர்த்து நாடு தழுவிய அளவில் ஒரு பிரச்சார இயக்கத்தைக் கூட நடத்தவில்லை. தமிழகத்தின் மாணவர்-இளைஞர்களும் வழக்குரைஞர்களும் வணிகர்களும் போராடிக் கொண்டிருக்கும் சூழலில், தனது தொழிற்சங்கங்களை இத்தகைய போராட்டங்களில் இக்கட்சி ஈடுபடுத்தவுமில்லை.

கருணாநிதியையும் காங்கிரசையும் எதிர்த்து அனல் கக்கும் இந்தப் 'பாதுகாப்பு இயக்கத்தினர்' சிங்கள பாசிச அரசின் தமிழின அழிப்புப் போரை நேரடியாகவே ஆதரிக்கும் ஜெயலலிதாவுக்கு எதிராக மட்டும் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. ''துப்பாக்கி ஏந்துவேன்; ஈழத்துக்குப் போவேன்; இதனால் என் அரசியல் வாழ்க்கையே முடிந்தாலும் அதைப் பற்றிக் கவலைப் படமாட்டேன்'' என்று நெருப்பைக் கக்குகிறார், வைகோ. கருணாநிதியைப் பேடி என்றும் துரோகி என்றும் அர்ச்சிக்கிறார். ஆனால், 'அம்மா'வைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. நெடுமாறன், தா.பாண்டியன், ராமதாசு ஆகிய அனைவருமே 'அம்மா' விசயத்தில் மட்டும் அர்த்தமுள்ள மவுனம் சாதிக்கிறார்கள். அதேபோல, 'புலி ஆதரவாளர்' என்று கருணாநிதியைச் சாடும் ஜெயலலிதா, வைகோவையோ, ராமதாசையோ அவ்வாறு விமர்சிப்பதில்லை. இவர்களுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கும் திருமாவளவனோ, கருணாநிதியையும் விமர்சிக்க விரும்பாமல், ஜெயலலிதாவையும் விமர்சிக்க முடியாமல், எந்த அணியில் தன்னுடைய எதிர்காலம் என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல, இந்தத் 'தமிழர் பாதுகாப்பு' அணியில் இந்துவெறி பாரதிய ஜனதாவையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள், இந்த சந்தர்ப்பவாதிகள். தனது


படிப்பகம்

www.padippakam.com

பிறப்பிலேயே தமிழ் விரோதியும், புலி பூச்சாண்டி-தீவிரவாத பூச்சாண்டி காட்டி அரசியல் நடத்துவதில் ஜெயலலிதாவின் கூட்டாளியுமான பாரதிய ஜனதாவையும் தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டிருப்பதன் மூலம், அந்தப் பார்ப்பன பாசிஸ்டுகளுக்குத் தமிழக மக்கள் மத்தியில் ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுத் தருகிறார்கள், இந்தச் சந்தர்ப்பவாதிகள். காங்கிரசுக்குப் பதிலாக பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இலங்கையில் தலையிடும் என்பது போன்றதொரு பிரமையை மக்களிடம் உருவாக்குகிறார்கள்.

ஆனால், வாஜ்பாயி பிரதமராக இருந்த காலத்தில், புலிகளுடைய முற்றுகையில் யாழ் கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட ஏறத்தாழ 20,000 சிங்கள சிப்பாய்களை மீட்கும் பொருட்டு சிங்கள அரசின் சார்பில்தான் பா.ஜ.க. கூட்டணி அரசு இலங்கையில் தலையிட்டிருக்கிறது. அன்று பாரதிய ஜனதா கூட்டணி அரசில் ம.தி.மு.க.வும், பா.ம.க.வும் பங்கேற்று அமைச்சர்களாகவும் அங்கம் வகித்தனர் என்பதும் நெடுமாறன் உள்ளிட்டோரின் முழு ஆதரவோடுதான் சிங்கள அரசுக்கு ஆதரவான இந்தத் தலையீட்டை வாஜ்பாயி அரசு நடத்தியது என்பதும் மறுக்கவியலாத உண்மைகள்.



போர் நிறுத்தம் கோரி 'குடியரசு'த் தலைவர் பிரதிபா பாட்டீலிடம் மனு கொடுக்கும், தி.மு.க. அமைத்துள்ள இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் துணைக்குழு அமைப்பாளர்கள்.

'அரசியல் வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு தமிழர் நலன் என்ற ஒரே நோக்கத்துக்காகத்தான், அடிப்படையிலேயே கொள்கை வேறுபாடுகள் கொண்ட வலது கம்யூனிஸ்ட் கட்சி முதல் பாரதிய ஜனதா வரை அனைவரும் ஒரே அணியில் நிற்பதாக'க் கூறி, தங்களது அருவெறுக்கத்தக்க அயோக்கியத்தனத்தையே 'மாபெரும் பெருந்தன்மை' போலவும், தமிழர் மீதான அக்கறை போலவும் இவர்கள் சித்தரித்துக் கொள்கின்றனர். ஒருவேளை மைய அரசை பாரதிய ஜனதா கைப்பற்றக் கூடும் என்பதும், அத்தகையதொரு வாய்ப்பு கிடைத்தால் கூட்டுச் சேர்ந்து பொறுக்கித் தின்னலாம் என்பதுமே இவர்களின் திட்டம்.

இதன்படியே, இந்த இயக்கத்தில், ''எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் நோக்கம் இருக்கக் கூடாது; எந்தவொரு தேசியக் கட்சியைப் பற்றியோ, மாநிலக் கட்சியைப் பற்றியோ விமர்சிக்கக் கூடாது; மைய அரசு, மாநில அரசு மீது கண்டனங்களையோ, விமர்சனங்களோ கூறக் கூடாது; உருவ பொம்மை எரிப்பு, சிலைகள் அவமதிப்பு, கொடி எரிப்பு போன்றவை கூடாது'' எனப் பத்துக் கட்டளைகள் போட்டு, இந்தச் சந்தர்ப்பவாதிகள் போராட்டம் நடத்தக் கிளம்பியுள்ளார்கள். மன்மோகன் சிங்கும், ஜெயலலிதாவும், கருணாநிதியும், சுப்ரமணிய சாமியும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள இக்கட்டளைப்படி 'அதிதீவிர போராட்டம்' நடத்தப் போவதாக இவர்கள் கூறுவதைக் கேட்டு, மானமுள்ள தமிழன் எவனும் பின்வாயால் கூடச் சிரிக்கமாட்டான்.

மொத்தத்தில், ஈழத் தமிழ் மக்களின் பிணங்கள் மாலையாகக் குவிந்தாலும், காங்கிரசைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதன் மூலம் தனது பதவி நாற்காலியையும், தனது வாரிசுகளின் எதிர்காலத்தையும் காப்பாற்றிக் கொள்வது என்பதே கருணாநிதியின் நோக்கம்! ஈழத் தமிழ் மக்களின் பிணங்களைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற நாற்காலிகளை முடிந்த மட்டும் கைப்பற்றிக் கொள்வதே ராம்தாசு அணியினரின் நோக்கம்!

அருவெறுக்கத்தக்க சந்தர்ப்பவாதம்:
தில்லியில் போர் நிறுத்தம் கோரி ம.தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தில் உரையாற்றும் பா.ஜ.க. தலைவர் அத்வானி.



இத்தகைய ஓட்டுப் பொறுக்கிகள் மற்றும் பிழைப்புவாதிகளின் கையில் சிக்கியதன் காரணமாக, ஈழப் பிரச்சினையின் அரசியல் உள்ளடக்கம் இன்று சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டு விட்டது. இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது, ஒடுக்கப்பட்ட தேசிய இனமான ஈழத்தமிழினத்தின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்குக் குரல் கொடுத்து, அதனை அங்கீகரிக்குமாறு இந்திய அரசை நிர்பந்தித்துப் போராடுவது; - இவ்விரு மையமான ஜனநாயகக் கடமையிலிருந்து தமிழக மக்களைத் திசை திருப்பியுள்ளன, இந்த ஓட்டுக் கட்சிகள். இச்சமரச - சந்தர்ப்பவாத ஓட்டுப் பொறுக்கிகளையும் பிழைப்புவாதிகளையும் தமிழக மக்களிடம் இனங்காட்டி, அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி முடமாக்குவதன் மூலம்தான், இந்திய மேலாதிக்க அரசுக்கும் சிங்கள இனவெறி பாசிச அரசுக்கும் எதிரான பிரச்சாரத்தையும் போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடியும்; ஈழத் தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை வெற்றி பெறச் செய்ய முடியும். இது, ஈழ விடுதலையில் அக்கறை கொண்டுள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் முதன்மைப் பணி; நம் பணி. ●



படிப்பகம்

www.padippakam.com

### வழக்குரைஞர்கள் மீதான தாக்குதல்:

# அம்பலமானது போலீசின் உண்மை முகம்! தி.மு.க.வின் பொய் முகம்!

பிப்ரவரி 19 - காக்கி உடை ரவுடிகளின் லத்திக் கம்புகள் சென்னை உயர்நீதிமன்றத்தை இரத்தத்தில் முக்கி எடுத்தன. ஜனநாயகத்தின் மற்ற தூண்களெல்லாம் உளுத்து உதிர்ந்து விட்ட நிலையில், நீதிமன்றம் என்ற ஒற்றைத் தூண்தான் அதனைத் தாங்கி நிறுத்திக் கொண்டிருக்கிறது என்றும், இந்திய ஜனநாயகத்தின் மீதான மக்களின் இறுதி நம்பிக்கையே நீதித் துறைதான் என்றும் ஆளும் வர்க்க அறிஞர்களால் போற்றிப் புகழப்பட்ட நீதிமன்றத்தின் வாயிற்கதவுகளை இழுத்து மூடி விட்டு, லாக் அப்பில் சிக்கிய கைதியை அடித்துத் துவைப்பதைப் போல வழக்குரைஞர்களைத் தேடித்தேடி அடித்து நொறுக்கியது போலீசுப்படை. இதனைத் தடுத்து நிறுத்த முயன்ற நீதிபதிகளும் போலீசின் தடியடிக்குத் தப்பவில்லை. புனிதக் கருவறையின் போற்றுதலுக்குரிய தெய்வங்களைப் போல பாவிக்கப்பட்ட செங்கோல் தாங்கிய நீதிபதிகளை விரட்டியடித்துவிட்டு, 'நானே அரசு, நானே நீதி' என்று போலீசின் தடிக்கம்பு பிரகடனம் செய்து கொண்டது.

நீதிபதிகளை போலீசார் ஓட ஓட விரட்டியதையும், அவர்கள் மீது விழுந்திருக்க வேண்டிய அடியைத் தாங்கள் வாங்கிக் கொண்டு, நீதிபதிகளின் உயிரை வழக்குரைஞர்கள் பாதுகாத்ததையும் நேரலை ஒளிபரப்பில் நாடே கண்டது. நீதிபதிகளின் அதிகாரம் செல்லாக்காசாகிவிட்டதை உச்ச நீதிமன்ற நீதிபதிகளும்தான் கண்டனர். எனினும் தமது அதிகாரம் அரசியல் சட்டப் புத்தகத்தில் இன்னமும் பாதுகாப்பாகவே இருக்கின்றது என்று உச்சநீதிமன்றம் கருதுவதால், இப்பிரச்சினையில் தலையிட்டிருக்கிறது.

''யாருடைய உத்தரவின் பேரில் உயர்நீதி மன்றத்துக்குள் போலீசார் நுழைந்தார்கள்?'' என்ற ஒரேயொரு கேள்விக்கு மட்டும் பதிலளிக்குமாறு கோரியது உச்சநீதிமன்றம். தமிழக அரசு அளித்த பதிலில் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் இல்லை. சேது சமுத்திரம் பிரச்சினையில் அரசுக்கு எதிராகச் சீறி வெடித்த உச்சநீதிமன்றம், தன்னைத் துச்சமாகக் கருதும் தமிழக போலீசின் அலட்சியத்தையும் திமிரையும் கண்டு கொதித்திருக்க வேண்டும். மாறாக, ''உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. சொல்ல மறுக்கிறீர்கள்'' என்று முனகிவிட்டு, ''நடந்த சம்பவங்களை நாங்களே விசாரித்துக் கொள்கிறோம்'' என்று கூறி நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவை இந்தப் பணிக்காக நியமித்திருக்கிறது.

''தாக்குதலுக்குப் பொறுப்பான போலீசு அதிகாரிகளைப் பணிநீக்கம் செய்யவேண்டும்'' என்ற வழக்குரைஞர்களின் கோரிக்கையை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. மாறாக, அவர்களில் நால்வரை இடமாற்றம் செய்ய மட்டுமே உத்தரவிட்டிருக்கிறது. ''ஒரு உறைக்குள் இரண்டு வாட்கள் இருக்கலாகாது'' என்பதைப் பட்டுத் தெரிந்து கொண்டதால், உயர்நீதி மன்ற வளாகத்தினுள் இருக்கும் போலீசு நிலையத்தையும் காலி செய்யச் சொல்லியிருக்கிறது. போலீசோ ''வெளியே வா பாத்துக்கிறேன்'' என்று காத்திருக்கிறது.

இத்தகைய சூழலில் ''வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு நீதி மன்றத்துக்கு உள்ளே செல்லுங்கள்'' என்ற உச்ச நீதிமன்றத்தின் கோரிக்கையை வழக்குரைஞர்கள் யாரும் பொருட்படுத்தக்கூட இல்லை. ''நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடர்வோம்'' என்று 25-ஆம் தேதி மாலையே அறிவித்து விட்டார்கள் வழக்குரைஞர்கள். தனது அதிகாரம் மதிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தபோதும், உச்ச நீதிமன்றம் உணர்ச்சிவயப்படவில்லை. தன் முன்னால் விரிந்து கொண்டிருக்கும் நெருக்கடியின் தன்மை நீதிபதிகளுக்குப் புரிந்திருக்கிறது. சிக்கலான வழக்குகளுக்கு 'வாய்தா' மூலமே தீர்வு கண்டிருக்கும் இந்திய நீதித்துறை, தன்னுடைய சொந்த அதிகாரம் குறித்த வழக்குக்கும் 'வாய்தா' போட்டிருக்கிறது.

மக்கள் உரிமைக்காகப் போராடும் வழக்குரைஞர்களை போலீசார் கொலை செய்வதும், தங்களது குற்றங்களை அம்பலப்படுத்தும் வழக்குரைஞர்களைக் குறி வைத்துத் தாக்குவதும் நமக்குப் புதிய செய்திகளல்ல. குர்கானின் தொழிலாளி வர்க்கத்தின் மீதும், நந்திகிராம் மக்கள் மீதும், ஒரிசாவின் பழங்குடியினர் மீதும், மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களும் புதிதல்ல. ஆனால், அதே அளவு மூர்க்கத்துடன் வழக்குரைஞர்கள் மீது போலீசு பாய்வதற்கான காரணம் என்ன என்பதே கேள்வி. பிப்ரவரி 17 அன்று நீதிமன்ற அறையில் சுப்பிரமணியசாமி மீது முட்டை வீசப்பட்டதுதான் இப்பிரச்சினைக்கு முதற்காரணம் என்று ஊடகங்கள் கூறுவதால் அதிலிருந்தே தொடங்குவோம்.

•••

பார்ப்பன ஆதிக்கத்தைக் கட்டிக்காப்பது என்ற பொது நோக்கத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் தனக்குத் தொடர்பில்லாத சிதம்பரம் கோயில் பிரச்சினையில் மூக்கை நுழைத்தார் சு.சாமி. கோயிலை அறநிலையத்துறை மேற்கொள்ளலாமென சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தீட்சிதர்கள் செய்திருந்த மேல் முறையீட்டு மனுவில் ''தன்னையும் ஒரு மனுதாரராகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்'' என்று கோரி உயர் நீதி மன்றத்தை அணுகினார். இதே வழக்கில் தீட்சிதர்களுக்கு எதிராகத் தன்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கோரி ஒரு வைணவப் பெரியவரும் மனுச்செய்திருந்தார். பிப்ரவரி 17 வரை ஈழப்பிரச்சினைக்காக நீதி மன்றப் புறக்கணிப்பில் வழக்குரைஞர்கள் ஈடுபட்டிருந்ததால், தனது வழக்கைத் தானே முறையிடுவதற்காக எதிர் மனுதாரரான ஆறுமுகசாமியும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

வைணவப் பெரியவரும், 80 வயதான ஆறுமுகசாமியும் ஒரு ஓரமாக நின்றிருக்க, நீதிமன்றத்தின் உள்ளே ஆர்ப்பாட்டமாக நுழைந்த சு.சாமி, நேரே வழக்குரைஞர்களுக்காகப்


படிப்பகம்

www.padippakam.com

போடப்பட்டிருந்த நாற்காலியில் சென்று தெனாவெட்டாக அமர்ந்தார். தீட்சிதர்களின் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை அன்றைய பட்டியலில் 56-வது இடத்தில் இருந்தது. அந்த மேல் முறையீட்டு மனுவே இன்னும் அனுமதிக்கப்படாத நிலையில், அந்த வழக்கில் தன்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையுடன் வந்திருந்த சு.சாமி, தன்னுடைய வழக்கை முதல் வழக்காக எடுத்துக்கொள்ள வேண்டுமென நீதிபதியைக் கோரினார். நீதிபதி நிராகரித்தார்.



அழுகிய முட்டை வீசித் தாக்கப்பட்ட நிலையில் அரசியல் மாமா சுப்பிரமணிய சுவாமி.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வழக்குரைஞர்கள் முழக்கமிட்ட படியே வந்து நீதிமன்றத்தினுள் நுழைந்தனர். சிறிது நேரத்துக்குப் பின் எங்கிருந்தோ வந்த முட்டை ஒன்று சு.சாமியின் முகத்தில் மோதி உடைந்தது. சு.சாமிக்கு எதிரான முழக்கங்கள் நீதிமன்ற அறையெங்கும் எழுந்தன. நீதிபதியின் மேசைக்கு அருகே ஓடி ஒளிந்தார் சு.சாமி. வெளியில் நின்றிருந்த போலீசு உள்ளே நுழைந்தது. இந்தச் சம்பவம் குறித்த விசாரணை நடைபெறும் என அறிவித்தனர் நீதிபதிகள். நீதிமன்றத்துக்கு வெளியே வந்த சு.சாமி புலி ஆதரவாளர்கள்தான் தன்னைத் தாக்கிவிட்டார்கள் என்றும் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டதால் கருணாநிதி ஆட்சியைக் கலைக்கக் கோரி தான் உச்ச நீதி மன்றத்துக்குப் போகப் போவதாகவும் ஊடகங்களிடம் அறிவித்தார்.

''முட்டையடிக்கெல்லாம் ஆட்சிக்கலைப்பா?'' என்று ஊடகங்கள் எள்ளி நகையாடவில்லை. சு.சாமியின் முகத்தில் முட்டை வழிவதைக் காணப்பொறுக்காத இந்து நாளேடும் தினமணியும் நீதிமன்றத்தின் புனிதம் கெட்டுவிட்டதாக அலறின. வழக்குரைஞர்களைக் கண்டித்துத் தலையங்கம் எழுதின. உடனே முட்டையடித்தவர்களைப் பிடிக்க 6 தனிப்படைகளை அமைத்தது கருணாநிதி அரசு. தனிப்படைகள் அன்று நள்ளிரவே பல வழக்குரைஞர்களின் வீடுகளுக்குச் சென்று குடும்பத்தினரை மிரட்டத் தொடங்கின.

'அரசாங்க முட்டை அம்மியையும் உடைக்கும்' என்பது முதுமொழி. அழுகிய முட்டை அரசாங்கத்தையும் உடைக்கும் என்பது புதுமொழி. சுப்பிரமணியசாமி என்ற பார்ப்பனத் தரகனின்மீது முட்டை வீசப்பட்டவுடனே, கருணாநிதி அரசு துடித்து எழுந்து நின்றது. பிப்ரவரி 19-ஆம் தேதியன்று சிதம்பரம் வழக்கின் அடுத்த வாய்தாவுக்கு வந்தார் சு.சாமி. அந்த ஒரு நபரின் 'ஜனநாயக உரிமையை' பாதுகாப்பதற்காக கமாண்டோக்கள், அதிரடிப்படைகள், ஆயுதப்படைகள் என எல்லாவிதமான படைகளும் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டன. இத்தனை ஏற்பாடுகளுக்குப் பிறகும் வழக்கை மீண்டும் 25-ஆம் தேதிக்குத் தள்ளிவைத்தார் தலைமை நீதிபதி. இந்த அதிபயங்கரமான 'முட்டை வீச்சு சம்பவம்' குறித்து ஆராய்வதற்கு 5 நீதிபதிகள் கொண்ட ஃபுல் பெஞ்சும் அமைக்கப் பட்டது.

17-ஆம் தேதியன்று முட்டை வீச்சு சம்பவத்துக்கு முன்னதாக 'வழக்குரைஞர்களை இழிவாகவும், தரக்குறைவாகவும், ஆத்திரத்தைத் தூண்டும் வகையிலும் சு.சாமி பேசியதாக' ரஜினிகாந்த் என்ற வழக்குரைஞர் உயர்நீதிமன்றக் காவல் நிலையத்தில் 19-ஆம் தேதி மதியம் 1.30 மணி அளவில் புகார் கொடுத்தார். முதலில் புகாரைப் பதிவு செய்ய மறுத்தது போலீசு. பின்னர் வழக்குரைஞர்கள் திரளாகச் சூழ்ந்து கொண்டு போராட்டம் நடத்தவே, சு.சாமி மீது தீண்டாமைக் குற்றம் உள்ளிட்ட பல குற்றப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய ஒப்புக் கொண்டது. ஆனால் அதற்குப் பிணையாக ''முட்டை வீச்சு வழக்கில் நாங்கள் தேடிக் கொண்டிருக்கும் வழக்குரைஞர்களை ஒப்படைக்க வேண்டும்'' என்று நிபந்தனை விதித்தது. போலீசின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்று எதிர்த்தார்கள் வழக்குரைஞர்கள். காவல் நிலைய வாயிலிலேயே மறியல் செய்தார்கள். சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது இந்தப் போராட்டம். இதன் ஊடாக ஏற்கெனவே நீதிமன்ற வளாகத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த போலீசு படை தாக்குதலுக்குத் தயாராகி விட்டது. மென்மேலும் போலீசு படைகள் குவிக்கப்பட்டன.

மறியல் போராட்டத்தில் முன்நின்ற வழக்குரைஞர் பார்த்தசாரதியைக் குறிவைத்துத் தாக்கி வேனில் ஏற்றினர். அவருடன் மேலும் 16 பேர் போலீசு வேனுக்குள் தூக்கி வீசப்பட்டனர். எல்லா நீதிமன்றங்களும் இயங்கிக் கொண்டிருந்ததால், பல்வேறு இடங்களில் சிதறியிருந்த வழக்குரைஞர்களை செய்தியைக் கேள்விப்பட்டு பதற்றத்துடன் ஒன்று குவியத் தொடங்கினர். போலீசின் தாக்குதல் தொடங்கியது.

தொலைக்காட்சிக் காமெராக்களில் நாம் கண்ட போலீசின் வெறியாட்டம் மிகவும் குறைவு. வழக்குரைஞர்கள் போலீசின் மீது கல்லெறிவதைப் போலவும், அதற்குப் பதிலடியாகப் போலீசும் கல்லெறிவதைப் போலவுமே பல தொலைக்காட்சிகள் இந்தச் சம்பவத்தைச் சித்தரித்தன. கூடுதலாக அதிரடிப்படையினர் கார்களையும் இருசக்கர வாகனங்களையும் அடித்து நொறுக்கும் காட்சியும் ஒளிபரப்பப் பட்டது. போலீசு வன்முறையைப் படம் பிடித்த மக்கள் தொலைக்காட்சியின் காமெராவை உடைத்து, அந்த நிருபரையும் அடித்து அறையில் வைத்துப் பூட்டியது போலீசு. காமெராக்கள் தங்களை நோக்கித் திரும்பவே கூடாது என்பதை போலீசு உத்திரவாதம் செய்து கொண்டது. தப்பித் தவறி பதிவு செய்யப்பட்ட போலீசு வெறியாட்டம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படாமல் இருப்பதை அரசு உத்திரவாதம் செய்து கொண்டது.

சுமார் 3 மணிக்குத் தொடங்கிய போலீசின் கொலைவெறித் தாண்டவம் இரவு 8 மணி வரை நீடித்தது. அகப்பட்ட வழக்குரைஞர்கள் அனைவரும் அடித்துத் துவைக்கப் பட்டனர். பெண் வழக்குரைஞர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தலைமீது இறங்கிய தடிக்கம்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தலைமேல் கையை வைத்து மறைத்துக் கொண்ட வழக்குரைஞர்கள் பலருக்கும் விரல்கள் சுக்கல் சுக்கலாக நொறுங்கின. கால் எலும்பும் பாத எலும்புகளும் முறிக்கப்பட்டவர்கள், மண்டை உடைந்தவர்கள் ஏராளம். போலீசை எதிர்த்து நின்றவர்கள் மட்டும் தாக்கப்படவில்லை. வழக்குரைஞர்களின் அலுவலகங்களுக்குள்ளும், நீதிமன்ற அறைகளுக்குள்ளும், பார் கவுன்சிலிலும், நூலகத்திலும் புகுந்து தாக்கியது போலீசு. நீதிமன்றத்தின் அலுவலக ஊழியர்களும் தாக்குதலுக்குத் தப்பவில்லை. நூலகம், மேசைகள், சன்னல்கள், வழக்குரைஞர் சங்கத்தின் தொலைக்காட்சிப் பெட்டி, குழல் விளக்குகள், மின்விசிறிகள் அனைத்தும்


படிப்பகம்

www.padippakam.com

அடித்து நொறுக்கப்பட்டன. கறுப்பு பாண்ட் - வெள்ளை சட்டை போட்ட யாரும் அடிக்கு தப்ப வில்லை. அவர்கள் பொதுமக்களா, நீதிபதிகளா என்ற என்ற கேள்விக்கே இடமில்லை. வளாகத்திற்குள் இருக்கும் கீழமை நீதிமன்றங்களில் தங்கள் அறைக்குள் அமர்ந்திருந்த நீதிபதிகளும் இழுத்துப் போட்டு அடிக்கப்பட்டனர்.

வெறிக்கூச்சலும், அலறலும், அழுகையும், கண்ணா டிகள் நொறுங்கிச் சிதறும் சத்தமும் நீதிமன்ற வளாகத் தில் நிரம்பியிருந்த அந்த நேரத்தில் தலைமை நீதிபதி முகோபாத்யாயா, தனது அறையில்தான் அமர்ந்திருந் தார். சுற்றிலும் பிற நீதிபதிகள். சட்டத்தின் ஆட்சி தம்மைச் சுற்றிலும் நொறுங்கிக் கொண்டிருப்பதை அவர் களால் கேட்க முடிந்தது. ஆனால் பேச முடியவில்லை. தலைமைச் செயலரையோ, உள்துறைச் செயலரையோ, முதலமைச்சரையோ, டி.ஜி.பி யையோ, காவல் துறை ஆணையரையோ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச தலைமை நீதிபதியால் இயல வில்லையா அல்லது பேசிய பின்னும் தாக்குதல் நிற்க வில்லையா என்ற கேள்விக்கு வழக்குரைஞர்களுக்கு விடை கிடைக்கவில்லை.



போலீசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட வழக்குரைஞர்கள்.

கைகள் நடுங்க, உதடுகள் துடிக்க தமது அறைக்குள் பதுங்கியிருந்த அந்த அதிகாரப் பொம்மைகளை வழக்குரை ஞர்கள் வெளியே அழைத்து வந்தனர். சமாதானம் பேச வந்த நீதிபதி ஆதித்தனின் தலையில் லத்தி இறங்கியது. அவரது உயிரைப் பாதுகாத்து அழைத்துச் சென்றார்கள் வழக்குரைஞர் கள். போலீசு வேன்களில் கற்கள் வந்து இறங்குவதைத் தன் கண்ணால் பார்த்தார் நீதிபதி சுதாகர். எனினும் யாரும் எது வும் செய்ய இயலவில்லை.

''செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் தான் அதிரடிப்படையினர், நீதிபதியைத் தாக்கிவிட்டார்கள் போலும்'' என்று கருதிய தலைமை நீதிபதி உள்ளிட்ட நீதிபதி கள், தமது அங்கிக்குள் புகுந்துகொண்டு நீதிபதிக்குரிய செங் கோலை ஏந்திய வண்ணம் வெளியே வந்தனர். நீதித்துறையின் அதிகாரம் குறித்து ஆளும் வர்க்கம் உருவாக்கி வைத்திருக் கும் மாயைக்கு ஆட்பட்டிருந்த சில வழக்குரைஞர்கள், சிலுவை யைக் கண்ட டிராகுலா போல செங்கோலைக் கண்டவுடன் லத்திக்கோல் ஓடிப் பதுங்கிவிடும் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் அத்தகைய அதிசயம் எதையும் தலைமை நீதிபதியால் அங்கே நிகழ்த்த முடியவில்லை.

தங்களது தடிக்கம்பைக் காட்டிலும் பெரிய தடிக்கம்பை ஏந்தி வரும் 'வக்கீல்களை' கண்டவுடன் அதிரடிப்படையின் ஆவேசம் மேலும் கூடியது. நிலைமையைப் புரிந்து கொண்ட நீதிபதிகள், தமது செங்கோலின் அதிகாரம் செல்லுபடியாகும் இடமான நீதி மன்ற அறைக்கே திரும்பினர்.

மாலை 6 மணிக்கெல்லாம் உயர்நீதி மன்ற வளாகத்தில் இருந்த காவல் நிலையம் எரியத் தொடங்கியது. தயாராக வெளி யில் காத்திருந்த கூடுதல் படைகள் நீதிமன்ற வளாகத்தை நிரப் பின. தாக்குதல் நீதிமன்றத்துக்கு வெளியேயும் நீண்டது. நீதி மன்ற வளாகம் அமைந்துள்ள பாரிமுனைப் பகுதியில் சுற்றி யுள்ள சாலைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு, அறிவிக்கப் படாத ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தியது போலீசு. நீதி மன்றத்துக்கு எதிரில் உள்ள தெருக்களில் இருக்கும் வழக்கு ரைஞர்களின் அலுவலகங்கள் தேடித்தேடி நொறுக்கப்பட்டன.

வழக்குரைஞர்கள் மீது மட்டுமல்லாமல், நீதிமன்றம் என்ற நிறுவனத்தின் மீதே போலீசுத்துறையின் நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் கொலைவெறி, இந்தத் தாக்குதலில் பட்டவர்த் தனமாகத் தெரிந்தது. நீதிமன்ற வளாகத்தின் எல்லா வாயிற்கத வுகளையும் அடைத்துவிட்டு தேடுதல் வேட்டையைத் தொடங்கி யது போலீசு. ரத்தக் காயங்களுடன் தப்பி ஓடிய வழக்குரைஞர் கள் தவிர மற்றவர்கள், நீதிமன்ற அறைகளுக்குள் சரண டைந்தனர்.

தலைமை நீதிபதியின் தலைமையில் அவசர அமர்வு தொடங்கியது. களத்தில் செல்லுபடியாகாத தமது அதிகாரத்தை காகிதத்தின் மீது செலுத்துவதைத் தவிர நீதிபதிகளுக்கு வேறு வழி இருக்கவில்லை. அன்றிரவுக்குள் நீதிமன்ற வளாகம் முழு வதையும் போலீசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. நீதிமன்றத்துக்கு 'விடுமுறை' அறிவித்தார் தலைமை நீதிபதி. உயர்நீதி மன்றத்தில் 'அமைதி' நிலைநாட்டப்பட்டு விட்டது என்று அறிவித்தார் காவல்துறை ஆணையர்.

பிப்ரவரி 19 தாக்குதல் பற்றி அறிந்தவுடனேயே தமிழக மெங்கும் வழக்குரைஞர்களின் போராட்டங்கள் தொடங்கின. நீதிமன்றங்கள் முடங்கின. கிரிமினல்களுடனும் ரவுடிகளுடனும் மாமன்-மச்சான் உறவு கொண்டுள்ள போலீசு, ஆங்காங்கே பேருந்து எரிப்புகளையும் பெட்ரோல் குண்டு வீச்சுகளையும் அரங்கேற்றி வருகிறது. உச்ச நீதிமன்றம் கூறியுள்ளபடி மார்ச் 2-ஆம் தேதிக்குள் நீதிமன்றப் புறக்கணிப்பைக் கைவிடா விட்டால், இதனை தி.மு.க. ஆட்சிக்கு எதிரான போராட்டம் என்றே கருத வேண்டியிருக்கும் என்று வழக்குரைஞர்களுக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார் கருணாநிதி. நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா வின் விசாரணையும் தொடங்கியிருக்கிறது.

•••

**போ**லீசு நடத்தியிருக்கும் இந்தக் கொலைவெறியாட் டத்தை ''தன் ஆட்சியைக் கலைக்க நடந்த சதி'' என்கிறார் கருணாநிதி. ஈழப்போராட்டத்தை ஆறப்போட்டிருக்கும் ராமதாசோ, ''இது ஈழப்போராட்டத்தைத் திசைதிருப்ப நடந்தி ருக்கும் சதி'' என்கிறார். ''தி.மு.க. ஆட்சியைக் கலைக்க போலீசு நடத்தும் சதி'' என்கிறார் திருமா.

ஊடகங்களோ இதனை 'வக்கீல் - போலீசு மோதல்' என்றே சித்தரித்து வருகின்றன. ''சட்டத்தை மீறுவதையே வாடிக்கை


படிப்பகம்

www.padippakam.com

யாகக் கொண்டுள்ள வழக்குரைஞர்களின் மீது சட்டத்தை நிலை நாட்டுவதற்காக, போலீசார் வேறு வழியின்றி எடுத்த நடவடிக் கைதான் இந்த தடியடி; சில வரம்புமீறல்களை வேண்டுமானால் போலீசார் தவிர்த்திருக்கலாம். சட்டக்கல்லூரி பிரச்சினையில் கடமையைச் செய்யாமல் வேடிக்கை பார்த்தவர்கள், இப்போது சட்டத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். இரண்டுமே செய்யக் கூடாது என்றால், போலீசார் வேறு என்னதான் செய்யமுடியும்?'' என்று போலீசுக்கு வக்கீல் வேலை பார்க்கின்றன ஊடகங்கள். வழக்குரைஞர்களுக்கு எதிரான பொதுக்கருத்தை ஊடகங்கள் திட்டமிட்டே உருவாக்கி வருவதால் இந்தத் தாக்குதலின் பின் புலத்தைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது.

ஒரு முதல் தகவல் அறிக்கையைப் பெறுவதற்காகப் போராடிய சில வழக்குரைஞர்களின் கூட்டத்தைக் கலைப் பதற்கு மேற்கொள்ளப்பட்ட தடியடியல்ல இது. முட்டை வீச்சு சம்பவத்தில் தான் கைது செய்ய விரும்பிய வழக்குரைஞர்களை நீதிமன்ற வளாகத்தில் வைத்தே கைது செய்வது, அதற்கு வழக்குரைஞர்கள் எதிர்ப்பு காட்டினால், இனி அவர்கள் ஒரு நாளும் மறக்கவியலாத வகையில் பாடம் புகட்டுவது என்ற நோக்கத்தில் முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் இந்த வன்முறை அரங்கேற்றப் பட்டிருக்கிறது.

இந்த வன்முறை களத்திலிருந்த சில போலீசு அதிகாரிகள் மட்டுமே முடிவு செய்து அரங்கேற்றியதல்ல. தி.மு.க. அரசின் முழு ஒப்புதலுடன், தலைமை நீதிபதியின் தலையசைப்புடன் தான் இது நடந்திருக்கிறது. ஜனவரி இறுதியிலிருந்து ஈழத்தில் போர்நிறுத்தம் கோரி, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் கள் புறக்கணிப்புப் போராட்டம் அறிவித்ததைத் தொடர்ந்து, பிப்ரவரி துவக்கத்திலிருந்தே உயர்நீதி மன்றக் காவல் நிலை யத்தில் கூடுதல் போலீசு குவிக்கப்பட்டிருக்கிறது. தலைமை நீதி பதி அல்லது பதிவாளரின் ஒப்புதலின்றி இது நடந்திருக்க சாத் தியமில்லை. சு.சாமி மீது முட்டை வீசப்பட்ட விவகாரத்தை அங் கிருந்த நீதிபதிகள் கையாண்ட முறையும், மறுநாள் நடைபெற்ற தலைமை நீதிபதி - டி.ஜி.பி சந்திப்பும், இன்னும் நாம் அறிந்து கொள்ள முடியாத அவர்களுக்கிடையிலான ரகசியப் பரிமாற் றங்களும் இந்தத் தாக்குதலுக்குப் பின்புலமாக அமைகின்றன.

தாக்குதல் நடைபெற்றவுடனே, ''அனுமதி பெற்றுத்தான் உள்ளே நுழைந்தோம்'' என்று ஆணையர் அறிக்கை விடுகிறார். ''நாங்கள் அனுமதிக்கவில்லை'' என்று தலைமை நீதிபதி அறிக்கை விடுகிறார். இந்த முரண்பாடுகளும், ''5 மணி நேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறையை தலைமை நீதிபதி யால் தடுக்கவியலவில்லை'' என்ற கூற்றும் இவர்களுக்கிடை யில் கள்ளக்கூட்டு இருந்திருப்பதையே காட்டுகின்றன. தங்க ளுடைய திட்டத்தை நிறைவேற்ற அவர்களுக்கு ஒரு முகாந் திரம் தேவைப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

கடந்த சில மாதங்களாக கருணாநிதி அரசைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் ஈழப்பிரச்சினையில், வைகோ - ராமதாசு அணியினரின் போராட்டங்கள் மெல்ல நீர்த்துப் போய் அடங்கி வரும் நிலையில், தமிழகத்தின் வழக்குரைஞர்கள் அதனைத் தொடர்ச்சியாகவும் உணர்வுபூர்வமாகவும் முன்கொண்டு சென் றனர். வழக்கமாக மிகவும் கொடூரமான முறையில் போலீசால் ஒடுக்கப்படும் சாலை மறியல் உள்ளிட்ட பல போராட்டங் களை 'தமிழர் பிரச்சினை' என்ற காரணத்துக்காக கருணாநிதி அரசு சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும் இத்தகைய 'வரம்பு மீறிய போராட்டங்களை' வழக்குரைஞர்கள்தான் துவக்கி வைக்கிறார்கள் என்பதை அரசு கவனிக்காமல் இல்லை.

ராஜபக்சே கொடும்பாவியைக் கொளுத்துவதை தி.மு.க. அரசால் சகித்துக் கொள்ள முடியும். சோனியா, மன்மோகன், பிரணாப் முகர்ஜி போன்றோரின் கொடும்பாவிகளும் காங் கிரசு கொடியும் தமிழகம் முழுவதும் எரிவதையும், ராஜீவ் சிலைக்கு செருப்பு மாலை விழுவதையும், காங்கிரசுக்காரர் களின் அலுவலகங்கள் தாக்கப்படுவதையும், காங்கிரசு 'பிரமுகர்கள்' கேட்பாரின்றி ரோட்டில் ஓடவிட்டு அடிக்கப்படு வதையும் கருணாநிதியால் எவ்வாறு சகிக்க முடியும்?

## போலீசின் திமிர்

சென்னை அருகேயுள்ள பொன்னேரியில் புதிய ஜன நாயகத் தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் ஏறத் தாழ 20 பேர், இந்திய மேலாதிக்க அரசின் துணையோடு நடந் துவரும் ஈழத் தமிழின அழிப்புப் போரை எதிர்த்தும், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞர்களைத் தாக்கிய போலீ சின் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்தும், கடந்த 20.2.09 அன்று தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இப் பிரச்சாரத்தின் போது, ''வினவு'' இணையதளத்தில் வெளி யான போலீசை வெறிநாயாகச் சித்தரிக்கும் கருத்துப்படத்தை (இவ்விதழின் அட்டைப்படத்தை) பெரிய டிஜிட்டல் தட்டி யாக்கி காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த பொன்னேரி போலீசு, தோழர்களின் பிரச்சாரத்தைத் தடுத்து நிறுத்தி, டிஜிட்டல் தட்டி, ஒலிபெருக்கி, துண்டுப் பிரசுரம் உள்ளிட்ட அனைத் தையும் பறிமுதல் செய்து முன்னணியாளர்கள் 5 பேரைக் கைது செய்துள்ளது. பின்னர், கூட்டம் கூடி கலகம் விளை வித்தல், அரசுக்கு எதிராக கலகம் செய்தல், பொது அமைதிக் குப் பங்கம் விளைவித்தல் முதலான பிணையில் வெளிவர முடியாத பல பிரிவுகளில் பொய்வழக்கு சோடித்து நீதிபதி யின் முன் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்துள்ளது.

வழக்குரைஞர்களின் போராட்டம் நடைபெறுவதால், நீதி மன்றங்கள் செயல்படாத நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, பழிவாங்கும் வெறியோடு கொடிய பிரிவுகளில் பொய்வழக்கைச் சோடித்துள்ளது. போலீசு. உயர்நீதி மன்றத் திலேயே வழக்குரைஞர்களின் மண்டையை உடைத்து விட் டோம்; பொன்னேரியில் இவர்களால் என்ன செய்துவிட முடி யும் என்ற திமிரோடு கொக்கரிக்கிறது போலீசு.

போலீசின் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து கேலிச் சித் திரங்கள் - கருத்துப்படங்களுடன் உழைக்கும் மக்கள் போரா டுவதன் மூலம் மட்டுமே, போலீசின் திமிரை முறியடிக்க முடி யும். போலீசின் கொட்டத்தை ஒடுக்க, தமிழகமெங்கும் வழக் குரைஞர்களோடு இணைந்து உழைக்கும் மக்களின் போராட் டங்கள் பெருகட்டும்!

## சுப்பிரமணிய சுவாமியின் பார்ப்பனத் திமிர்

பிப். 17 மாலை 5 மணிக்கு, வழக்குரைஞர்கள் இரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கப்படும் காட்சிகளை ஒளிபரப்பிய சி.என்.என்; ஐ.பி.என், சு.சாமியின் தொலைபேசி பேட்டியை ஒளிபரப்பியது. அதில் சு.சாமி வாயிலிருந்து தெறித்த கொழுப் புத் துளிகள் வருமாறு: ''இவர்கள் வக்கீல்களே அல்ல, மாமாப் பயல்கள், புலிகளிடம் காசு வாங்கிக்கொண்டு கத்துபவர்கள். வக்கீல் சமூகத்தை இவர்கள் பிளாக் மெயில் செய்கிறார்கள். போலீசு நடவடிக்கை நியாயமானது, தேவையானது. சட் டத்தை நிலைநாட்ட நீதிமன்றம் உள்ளிட்டு எங்கே வேண் டுமானாலும் போலீசு நுழையலாம்.''

தமிழகத்தின் நீதிமன்றங்களில் சொறிநாய் நுழைவதைக் கூட அனுமதிக்கலாம். சு.சாமி எனும் இந்தப் பிராணியை அனு மதிக்கலாமா?



படிப்பகம்

www.padippakam.com

''தனது வாரிசுகளும் குடும்ப சாம்ராச்சியத்தினரும் கோடிக்கணக்கான ரூபாய் சொத்தையும், தி.மு.க. சமஸ்தானத்தையும், ஆட்சியையும் எவ்வித வில்லங்கமும் இன்றி வழிவழியாக ஆண்டு அனுபவித்து வருவதற்கு, காங்கிரசுடனான கூட்டணியை காருள்ளளவும் நீருள்ளளவும் உறுதி செய்து வைக்க வேண்டும்; அதன் பின்னர்தான் கண்ணை மூடவேண்டும்'' என்ற கொள்கைப் பிடிப்போடு செயல்பட்டு வரும் கருணாநிதியால் காங்கிரசாரின் புலம்பலை எவ்வாறு சகிக்க முடியும்? ஜெயலலிதாவின் எலும்பைக் கவ்விய தமிழக காங்கிரசார் தருணம் பார்த்துக் குரைக்கும் போது, அதை எப்படிப் புறக்கணிக்க முடியும்?



எப்படி இருந்தாலும், தி.மு.க.வின் தேசபக்தியும் ஒருமைப்பாட்டு உணர்ச்சியும் ஈழப்பிரச்சினையில் டெல்லிக்குக் காவடி எடுக்கும் திசையில்தான் அதனை நகர்த்தியிருக்கும் என்ற உண்மை ஒருபுறமிருக்க, ஈழப்பிரச்சினை கருணாநிதியின் சொந்தப் பிரச்சினையாக மாறியதற்கு இப்படியொரு காரணமும் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் சு.சாமியின் முகத்தில் வீசப்பட்ட முட்டை, கருணாநிதியின் முகத்தில் வழிந்ததில் வியப்பில்லை. சு.சாமிக்கும் தி.மு.க.வுக்கும் பதினெட்டுப் பொருத்தம்தான் என்றபோதிலும், முட்டை வீசப்பட்ட உடனே, சு.சாமியிடம் போய் போலீசு அதிகாரிகளை வருத்தம் தெரிவிக்கச் சொன்னாராம் கலைஞர். தினகரன் அலுவலகத்தில் உயிரோடு எரிக்கப்பட்ட ஊழியர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து, அந்த எரிப்பு நடவடிக்கையை வேடிக்கை பார்த்த அதிகாரிகள் யாரும் மன்னிப்பு கேட்கவில்லை என்பதை இங்கே நினைவுகூர வேண்டும்.

சந்தர்ப்பத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு சாமியாடின தமிழகத்தின் பார்ப்பனப் பத்திரிகைகள். தமிழ் வெறுப்பு, ஈழத் தமிழர் போராட்டம் குறித்த வெறுப்பு, பார்ப்பனர்களுக்கே உரிய 'கவுரவமான' வழக்குரைஞர் தொழிலில் கோட்டா பேர்வழிகள் நுழைந்து நீதித்துறையின் கவுரவத்தையே பாழ்படுத்தி விட்டதால் வழக்குரைஞர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு, அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையில் முன்நிற்பதால் ஏற்பட்ட கூடுதல் ஆத்திரம், ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டங்கள் இந்திய தேசியத்தையும் தேசியத் தலைவர்களையும் கட்சிகளையும் மென்மேலும் இழிவு படுத்துவதால் அவர்களது உள்ளத்தில் வெடித்த தேசபக்தி குமுறல்... அனைத்தையும் முட்டைக்குள் திணித்து எழுதின பத்திரிகைகள்.

போலீசின் ஆத்திரமோ வேறு விதமானது. ஆளும் வர்க்கத்துக்கு சேவை செய்யும்பொருட்டு பயிற்றுவிக்கப்பட்ட தனிவகைச் சாதி என்ற முறையில் அது ஆளும் வர்க்கக் கருத்துகளைத் தனது சொந்தக் கருத்துகளாகவே கொள்வதற்குப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை போலீசின் கீழ்நிலை ஊழியர்களுக்கு ஈழத்தமிழர் பிரச்சினையில் அனுதாபம் இருந்தாலும், அது தொடர்பான போராட்டங்கள் போலீசு வகுத்த எல்லையை மீறுவதை அவர்களும் விரும்புவதில்லை. பிரச்சினை எத்தனை நீதியானதாக இருந்த போதிலும், அதற்காக நடைபெறும் போராட்டம் தங்களது அதிகாரத்தை எள்ளளவுக்குக் கேள்விக்குள்ளாக்கினாலும், அத்தகைய போராட்டத்தை அவர்கள் தங்களுக்கெதிரான போராட்டமாகவே பார்க்கிறார்கள்.

நீதிமன்றத்தில் ஒரு போலிப் பணிவுடன் அடங்கி நிற்கும் நிலையைத் தமது தொழிலின் தவிர்க்கவியலாத இடர்ப்பாடாகக் கருதி அவர்கள் சகித்துக் கொள்கிறார்கள். ஆனால் வழக்குரைஞர்கள் வீதியில் தங்களுக்கு சவால் விடும்போது அதனை அவர்களால் சகிக்க முடிவதில்லை. அது, ஈழப்பிரச்சினையாக இருந்தாலென்ன, வெறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலென்ன? பிரச்சினையின் தன்மை கருதி ஈழம் தொடர்பான போராட்டங்களில் நடந்த 'அத்து மீறல்களையெல்லாம்' சகித்து சகித்து ஒரு கொதிநிலைக்கு வந்திருந்தது போலீசு.

''போலீசார்தான் சட்டம் -ஒழுங்கின் காவலர்கள், எனவே அவர்கள் சொல்வது தான் சட்டம், சட்டத்துக்குப் பணிந்து நடப்பது என்பது போலீசுக்குப் பணிந்து நடப்பதுதான்'' என்ற சுருக்கமான சூத்திரம் ஒரு பொதுக்கருத்தாகவே மக்கள் மத்தியில் பதிய வைக்கப்பட்டுள்ளது. ஆளும் வர்க்க நலன் பேணும் பத்திரிகைகள் இதனை வழிமொழிகின்றன. தமது கொள்ளைகளுக்கும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கும் போலீசையே சார்ந்திருக்கும் ஓட்டுக் கட்சிகளும் இதனை வழிமொழிகின்றன. தமது அதிகாரத்தையும் அன்றாடச் சொகுசுகளையும் போலீசின் மூலமாகவே பெற்றுக் கொள்ளும் நீதியரசர்களும் இந்த உண்மையை உணர்ந்தே இருக்கிறார்கள்.


அதனால்தான் உயர்நீதிமன்றப் பிரச்சினையில் போலீசு கடைப்பிடிக்கத் தவறிய சட்ட வழிமுறைகள் குறித்து கட்சிகளோ ஊடகங்களோ கேள்வி எழுப்பவில்லை. அதனால்தான் அடிபட்டு எலும்பு நொறுங்கிய வழக்குரைஞர்களின் பேட்டிகளை தொலைக்காட்சிகள் ஒளிபரப்புவதில்லை. அதனால்தான் சேது சமுத்திரம் பிரச்சினைக்கு சாமியாடிய உச்சநீதி மன்றம், தன் தலையிலேயே அடி விழுந்த போதும் அடக்கி வாசிக்கிறது. ஈழத்தில் போர்நிறுத்தம் ஏற்படவில்லையென்றாலும், அதனை முன்னிட்டு நடத்தப்பட்ட போராட்டங்கள் இங்கே ஒரு போருக்குத் துவக்கவுரை எழுதியிருக்கின்றன. லத்திக் கம்புக்கு எதிராகக் கையில் கல்லை எடுத்ததன் மூலம், இந்தச் 'சட்டத்தின் ஆட்சியை' எதிர்கொள்ள வேண்டிய முறையை மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள் வழக்குரைஞர்கள். அதுவும், கைக்கெட்டும் தூரத்தில் நீதி கிடைக்கும் வாய்ப்பு இருந்த உயர்நீதி மன்ற வளாகத்திலிருந்து.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com




**ஐதராபாத்தைச் சேர்ந்த இப்ராஹிம் அலி ஜுனாயத், 26 வயதான யுனானி மருத்துவர். கடந்த 2007-ஆம் ஆண்டு மே மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஐதராபாத்தின் மெக்கா மசூதியிலும், லும்பினி பூங்காவிலும் நடந்த குண்டுவெடிப்புகளில் இவரைத் தொடர்புபடுத்தி, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஐந்து மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார். அப்போது மாணவராக இருந்த இவரைப் பிடித்துச் சென்ற போலீசார், சட்டவிரோதமாக அடைத்து வைத்ததுடன், வெடி குண்டு வைத்ததாக ஒப்புக்கொள்ளும்படி, தொடந்து 5 நாட்களுக்குச் சித்திரவதை செய்துள்ளனர். கடந்த டிசம்பர் 30, 2008 அன்று, மாவட்ட கீழமை நீதிமன்றம், நிரபராதி எனக் கூறி இவரை விடுவித்துள்ளது. இதையடுத்து தனக்கு 20 லட்ச ரூபாய் நட்ட ஈடு வழங்க வேண்டும் என ஜுனாயத் வழக்குத் தொடர்ந்துள்ளார். போலீசாரின் சித்திரவதைக்குள்ளான கொடுமையான அந்த ஐந்து நாட்களைப் பற்றி அவர் கூறுகிறார்:**

“அன்று செப்டம்பர் 3, 2007. நானும், நிஜாமியா அரசுக் கல்லூரி மற்றும் பொது மருத்துவமனையைச் சேர்ந்த மற்ற மாணவர்களும், புது டில்லிக்கு ஒரு கல்விச்சுற்றுலா சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். செகந்திராபாத் ரயில் நிலையத்தில் இறங்கிய நாங்கள், பழைய ஐதராபாத்தின் யாகுத்புராவிலிருந்த எங்களது கல்லூரி விடுதிக்கு உள்ளூர் ரயிலின் மூலம் வந்து சேர்ந்தோம். அங்கு சென்றவுடன் எனது சகோதரனைப் பொதுத் தொலைபேசி மூலமாக அழைத்து, நான் வந்து சேர்ந்துவிட்டதைத் தெரிவித்தேன். பேசி முடித்துவிட்டு வெளியே வந்த மறுகணமே, சாதாரண உடையிலிருந்த நான்கு போலீசார் என்னைப் பிடித்து மூட்டையாகக் கட்டி ஒரு சுமோ காரில் ஏற்றினார்கள். அப்போது காலை 11 மணி.

விக்டரி விளையாட்டு மைதானம் வரை அந்த வாகனம் விரைந்து சென்றது. அதற்குப் பிறகு என் கண்கள் கட்டப்பட்டன. பிறகு, ஒரு மணி நேரம் எங்கேயும் நிற்காமல் வாகனம் சென்றது. வண்டியின் ஓட்டுனர் வாய்தவறிக் கூறியதிலிருந்து நான் காந்திப்பேட்டையில் (25 கி.மீ தொலைவில்) இருப்பதை உணர்ந்தேன். நான் ஒரு அறைக்குக் கொண்டு செல்லப்பட்டு உள்ளாடைகளுடன் தரையில் தள்ளப்பட்டேன். என்னைப் போன்றே இன்னும் சிலரையும் அங்கே அடைத்து வைத்திருந்ததை அவர்களது அலறலிலிருந்து என்னால் உணரமுடிந்தது. என்னுடைய பணப்பை, அடையாள அட்டை, டெலிபோன் டைரி ஆகியவற்றைப் போலீசார் பறித்துக் கொண்டனர்.

எனது கைகள் பின்னால் கட்டப்பட்டன. நான் குற்றமற்றவன் என்றும், என் மீது இரக்கம் காட்டும்படியும் நான் கெஞ்சியபோதும் கூட, என் மீது மூன்று பேர் பாய்ந்தனர். குப்புறத் தள்ளி, இருவர் எனது கால்களை அழுத்திப் பிடித்து அமர்ந்து கொள்ள ஒருவர் எனது தோள் மீது ஏறி நின்றார். ஒருவர் எனது பாதங்களை தோல் பெல்ட்டால் அடிக்க, மற்ற இருவரும் என் உடம்பு முழுக்க அடித்துத் துவைத்தனர். வலியோ தாங்கவே முடியாததாக இருந்தது. முடிவில் நான் மயக்கமடைந்து விழுந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் கண்விழித்தவுடன், என்னை மற்றொரு அறைக்கு இழுத்துச் சென்றனர். அங்கே ஒருவர் பூட்ஸ் காலால் என் உடல் முழுவதும் ஏறி மிதித்தார், எட்டி உதைத்தார், எனது கை, கால் விரல்களை நசுக்கினார்; எனது உடலில் இரத்த ஓட்டமே நின்றுவிட்டதைப் போன்று மரத்துப் போனது. மிகக் கடுமையான வலியால் நான் துடித்துப் போனேன். மெக்கா மசூதி, லும்பினி பூங்கா, மற்றும் கோகுல் சாட் சென்டர் ஆகிய இடங்களில் நடந்த குண்டுவெடிப்புகளில் எனது பங்கு என்ன என்று கேட்டுத் தொடர்ந்து என்னைச் சித்திரவதை செய்தனர். நான் குற்றமற்றவன் என்றும் என் மீது இரக்கம் காட்டும்படியும் அவர்களிடம் கெஞ்சினேன். ஆனால் அவர்கள், என்னை நம்ப மறுத்துவிட்டனர். நான் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என அவர்கள் நினைத்தனர். ஆனால் ஒப்புக்கொள்வதற்கு என்னிடம் ஒன்றுமில்லை.

இது என்னை விசாரித்தவர்களுக்கு மேலும் எரிச்சலூட்டியது. சித்திரவதை அதிகமாகியது. எனது காது மடல்கள், மார்பு, உதடு, பிறப்புறுப்பு என எல்லா இடங்களிலும் மின்சாரத்தைப் பாய்ச்சினார்கள். காலையில் தொடங்கி இரவு வரை நீண்ட இத்தகைய சித்திர்வதைகள் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்தன. பல நாட்களுக்கு சிறுநீருடன் இரத்தம் செல்லுமளவுக்கு எனது பிறப்புறுப்பு காயமடைந்திருந்தது. எனது உடலின் பல பகுதிகளில் அந்தக் காயங்களின் தழும்புகள் இன்னமும் உள்ளன.

மனித உரிமை ஆர்வலர்களும், மூத்த பத்திரிகையாளர்களும் தலையிட்ட பின்னர்தான், என்னை, செப்டம்பர் 8, 2007 அன்று, மாநகர நீதிபதியின் முன் நிறுத்தினர். என்னை செப்டம்பர் 3-ஆம் தேதியே கைது செய்துவிட்டபோதும், செப்டம்பர் 8-இல் தான் கைது செய்தது போல் காட்டினார்கள்.

நான் ஏன் இதற்குப் பலியானேன்? மே 18, 2007, மெக்கா மசூதியில் குண்டு வெடித்த அன்று நான் அங்கே தொழுவதற்காகச் சென்றிருந்தேன். பின்னர், குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உதவ, நான்


படிப்பகம்

www.padippakam.com

" நான் படித்த முஸ்லீமாக இருந்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த துரதிருஷ்ட நாளன்று நான் அந்த மசூதியில் வேறு இருந்தேன். "

மசூதிக்குத் திரும்பவும் சென்றேன். இது தான் நான் செய்த குற்றம். அதேவேளை யில் இந்த விசாரணைகள் எனக்கு ஒன்றை உணர்த்தின. போலீசாருக்கு வழக்கில் ஏதாவதொரு முன்னேற்றத் தைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருந் தது. இந்த சமுதாயத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் தவறுதலாக வழிகாட்டப் பட்டு ஜிகாத்துக்குத் திருப்படுகிறார்கள் என்ற வரையறைக்குப் பொருந்துவது போல, நான் வேறு படித்த முஸ்லீமாக இருந்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த துரதிருஷ்ட நாளன்று நான் அந்த மசூதியில் வேறு இருந்தேன்.''

**இக்கொடுமை மோடியின் இந்து வெறி பயங்கரவாத ஆட்சி நடக்கும் குஜராத்தில் நிகழவில்லை. மதச்சார் பின்மை பேசும் காங்கிரசு ஆளும் ஆந்திராவில் தான் நடந்துள்ளது. மசூ திகள்-முஸ்லீம் குடியிருப்புப் பகுதி களில் குண்டு வைப்புகளை நடத்தி வரும் இந்துவெறி பயங்கரவாதிகள் ஒருபுறம்; இக்குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியதாக அப்பாவி முஸ்லீம்கள் மீதே பழிபோட்டு வதைக்கும் அரசு பயங்கரவாதம் மறுபுறம் என இரு வகை பயங்கரவாதிகளிடம் சிக்கி நாடெங்கிலுமுள்ள முஸ்லீம்கள் வதைபடுகிறார்கள். சாமானிய முஸ் லீம்கள் மட்டுமல்ல; அல்லாவின் பெயரால் புனிதப்போர் தொடுப்பதற் காக படித்த இளைஞர்களை இஸ்லா மிய பயங்கரவாதிகள் அணிதிரட்டி வருகிறார்கள் என்ற ஊகத்தின் அடிப் படையில், படித்த-நடுத்தர வர்க்க இஸ்லாமிய இளைஞர்களையும் அரசு பயங்கரவாதம் மிருகத்தனமாக வதைக்கிறது. இதற்கு இன்னுமொரு சாட்சியம்தான், இப்ராஹிம் அலி ஜுனாயத்.**

• அழகு

## எஸ்.சி.-எஸ்.டி. இடஒதுக்கீட்டுக்குக் குழிபறிப்பு:

# பார்ப்பன-பாசிஸ்டுகளின் கொல்லைப்புறச் சதிகள்

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, ஐந்தாண்டுகளுக்கு முன் தனியார் துறை யில் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என்றும், இதற்காக இட ஒதுக்கீட்டுச் சட்டம் திருத்தப்படும் என்றும் தனது பொது வேலைத்திட்டத்தில் சொல்லியி ருந்தது. இப்போது அடுத்த தேர்தலும் நெருங்கி விட்டது. தனியார் துறை இட ஒதுக்கீட்டுக்காக ஐ.மு.கூட்டணி அரசு சிறு துரும்பைக்கூட அசைக்காதது மட்டு மன்றி, ஏற்கெனவே சட்டப்பூர்வமாக இருந்துவந்த இட ஒதுக்கீட்டையும் ஒழித் துக்கட்டும் அயோக்கியத்தனத்தில் இறங்கி உள்ளது.

கடந்த டிசம்பர் 23-ஆம் நாள் மத்திய அரசின் ''அலுவலர்கள் மற்றும் பயிற்சித் துறை'' கொண்டுவந்த ''தாழ்த்தப்பட்டோ ருக்கும் பழங்குடியினருக்கும் பணியிடங் களில் இட ஒதுக்கீடு மசோதா 2008'' மாநிலங்கள் அவையில் எந்த விவாத மும் இன்றி இரண்டே நிமிட அவகாசத் தில் நிறைவேறி உள்ளது. நடப்புக் கூட்டத் தொடரில் அதே மசோதாவை மக்களவையிலும் விவாதத்திற்கு வைக்கும் சடங்கு செய்யப்பட்டு நிறை வேற்றப்பட வாய்ப்புள்ளது.

மத்திய அரசு ''இடஒதுக்கீட்டுக்கு சட்டரீதியான தகுதி வழங்கவும், தாழ்த் தப்பட்டோரிடையேயும் பழங்குடியினரி டையேயும் தன்னம்பிக்கையை வலுப் படுத்தவும்'' இம்மசோதாவைக் கொண்டு வந்துள்ளதாகச் சொல்கிறது. ஆனால் இம்மசோதாவின் உள்ளடக் கமோ, அரசுப் பணிகளில் பார்ப்பன-ஆதிக்க சாதியினரின் ஆதிக்கத்தைக் கேள்விக்கிடமின்றி நிலைநாட்டுவதை யும், ஏற்கெனவே சுருக்கப்பட்டுக் கொண் டிருக்கும் அரசு வேலைவாய்ப்பைக் கூட தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியினருக்கு மறுப்பதையும் நோக்கமாகக் கொண்டி ருக்கிறது.

45 நாட்களுக்குள் செய்து முடிக்கும் வேலைகளுக்கும், அவசர காலங்களில் ஏற்படும் பணி நியமனங்களுக்கும், அறி வியல்-தொழில்நுட்பம் சார்ந்த பதவி களில்-அதுவும் கடைமட்ட 'ஏ'பிரிவுக்கு மேலே வரும் அனைத்து வேலைகளுக் கும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 47 கல்வி நிறுவனங்களுக்கும் இடஒதுக்கீட்டை இம்மசோதா தடை செய்கிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறு வனங்களாக நாடெங்கிலும் உள்ள 7 ஐ.ஐ.டி.கள், 7 ஐ.ஐ.எம்.கள், 10 தேசிய தொழில்நுட்ப நிறுவனங்கள், புதுச்சேரி யின் ஜிப்மர், தில்லியில் உள்ள ஏ.ஐ.ஐ.எம்.எஸ்., அலிகர், அலகாபாத், தில்லி, விசுவபாரதி பல்கலைக் கழகங் கள், வாரணாசி இந்து பல்கலைக் கழகம் போன்றவற்றை இம்மசோதா பட்டியலிட் டுள்ளது. இந்நிறுவனங்களின் பட்டியலை அரசு விருப்பம் போல விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

அறிவியல்-தொழில்நுட்பம் சார்ந்த அனைத்து வேலைவாய்ப்புகளுக்கும் குறைந்தபட்சக் கல்வித்தகுதியான பி.எஸ்.சி., எம்.எஸ்.சி., பி.டெக், எம்.டெக் போன்ற பட்டங்களைப் படித்து வரும் அனைத்து தாழ்த்தப்பட்டோரும் பழங் குடியினரும் ஆதிக்கசாதி மேட்டுக்குடிப் பட்டதாரிகளுடன் பொதுப்போட்டியில் இனி போட்டியிட வேண்டும் என்கிறது இம்மசோதா.

இம்மசோதாவின் 18-ஆவது பிரிவு, ''தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக் கீட்டை நிராகரிக்கும் அதிகாரிகளுக்கு துறை மாற்றம் தவிர வேறு தண்டனை எதுவும் வழங்கக்கூடாது'' என்கிறது. அதி லும் இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டதில் 'உள்நோக்கம்' இருப்பது நிரூபிக்கப் பட்டால் மட்டுமே இந்த மாபெரும் தண்டனையும் தரப்படுமாம்.

உயர்கல்வி நிறுவனங்களில் பேராசி ரியர், விரிவுரையாளர் போன்ற வேலை களுக்கு இடஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்தப் போவதாக மனிதவள மேம் பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் தொடர்ச்சியாகப் பேசிவந்தார். ஆனால் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற நிறுவனங் களின் இயக்குநர்கள் இட ஒதுக்கீட்டினால் 'திறமை' பாதிக்கப்படும் எனத்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து ஊளையிட்டு வந்தனர். சில மாதங்களுக்கு முன்பு கௌகாத்தி ஐ.ஐ.டி.யில் நடைபெற்ற விழாவொன்றில் பேசிய மன்மோகன் சிங்கே 'இவர்களின் கவலையை அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும்' என்று சொல்லியிருந்தார். அரசு, அந்த வாக்குறுதியை இப்போது நிறைவேற்றியுள்ளது. இம்மசோதா மனிதவள மேம்பாட்டுத்துறைக்கோ, தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியினர் மேம்பாட்டுத்துறைக்கோ ஆலோசனை கேட்டு அனுப்பப்படவில்லை. இம்மசோதாவைத் தாழ்த்தப்பட்டோர் நலனுக்கான தேசிய கமிசனுக்கும் அரசு கொண்டு செல்லவில்லை.

இம்மசோதா வருவதற்கு முன்னர் ஒடுக்கப்பட்டோருக்கெல்லாம் ஏதோ பொற்காலம் இருந்ததாகக் கற்பனை செய்ய வேண்டாம். தில்லி பல்கலைக் கழகத்தை மட்டும் எடுத்துக் கொண்டால், அங்குள்ள மொத்த ஆசிரியர்கள் 6500. சட்டப்படி அதில் 1500 ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்டோர்-பழங்குடி வகுப்பைச் சேர்ந்தோராக இருந்திருக்க வேண்டும். ஆனால் 2001-ஆம் ஆண்டுக் கணக்குப்படி வெறும் 100 பேருக்கு மட்டுமே இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.

வாரணாசி இந்துப் பல்கலைகழகத்தில் ஒடுக்கப்பட்டோர் ஒருவர் கூட பேராசிரியராக இருந்ததில்லை. விரிவுரையாளரோ ஒருவர் மட்டுமே. தில்லி ஜவகர்லால் நேரு பல்கலையில் இருந்த 183 பேராசிரியர்களில் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் இரண்டே இரண்டு பேர்கள்தான். மேற்கு வங்கத்தின் விசுவ பாரதி பல்கலைகழகத்திலோ 148 பேரில் ஒருவர் மட்டுமே இப்பிரிவை சேர்ந்தவர். அலிகார் பல்கலைக்கழகத்தின் 521 விரிவுரையாளர்களில் ஒருவர் மட்டுமே ஒடுக்கப்பட்ட சாதியை சேர்ந்தவர். தில்லி ஜாமியா மில்லியா பல்கலைகழகத்தில் 216 பேருக்கு ஒருவர் மட்டுமே இப்பிரிவை சேர்ந்தவர். பழங்குடியினருக்கு நாடெங்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பணியிடங்கள் 75 ஆயிரம். அதில் பாதிகூட நிரப்பப்படவில்லை. மறு பாதியிலோ கணிசமானவர்கள் போலிச் சாதிச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு இடஒதுக்கீட்டையே ஏய்த்திருந்தனர்.

சட்டப்படி வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீடு, நடைமுறையில் பெயரளவுக்குக் கூடப் பின்பற்றப்படவில்லை. அதனையும் ஒழித்துக் கட்டி இடஒதுக்கீட்டைக் குழிதோண்டிப் புதைக்கத்தான் ஐ.மு.கூட்டணி இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்றது.



**பழங்குடியினருக்கு நாடெங்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பணியிடங்கள் 75 ஆயிரம். அதில் பாதிகூட நிரப்பப்படவில்லை. மறுபாதியிலோ கணிசமானவர்கள் போலி சாதிச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு இடஒதுக்கீட்டையே ஏய்த்திருந்தனர்.**

இட ஒதுக்கீடு ஒன்று மட்டுமே "சமூக நீதி" எனப்பேசி வரும் தி.மு.க., பா.ம.க., ராஷ்ட்ரீய ஜனதா தளம் போன்ற 'சமூக நீதிக் கட்சிகள்' எவையும் இம்மசோதாவுக்கு மாநிலங்களவையிலோ, அமைச்சரவையிலோ எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் 'கிரீமி லேயரை' அகற்றக்கோரி அவ்வப்போது போராடும் திராவிட இயக்கங்களும் இதைக் கண்டிக்கவில்லை. அப்படியானால் பிற்படுத்தப்பட்டோருக்காகப் போராடுவது மட்டும் தான் சமூகநீதியா?

தனியார்மய, தாராளமயக் கொள்கையின் விளைவாக பல பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்பட்டதாலும், அரசுத்துறைகளிலும் ஆட்குறைப்பு தொடர்ச்சியாக நடந்து வருவதாலும் இடஒதுக்கீட்டின் பயன் ஒன்றுமில்லாமல் ஆகிக் கொண்டிருக்கிறது. இந்த நாசகாரக் கொள்கைகளை எதிர்த்துப் போராடாமல், 'தனியார் துறையில் இடஒதுக்கீடு கேட்போம்' என்று தலித் அமைப்புகளும், 'இடஒதுக்கீடு-சமூகநீதி' பேசும் திராவிட இயக்கங்களும் பம்மாத்து பண்ணிக்கொண்டு இருக்கின்றன. இப்போதோ, இருக்கும் கொஞ்சநஞ்ச அரசு வேலைவாய்ப்பையும் மறுத்து சட்டம் போடுகின்றது அரசு. இதற்கும் 'சமூகநீதிக் காவலர்'களிடமிருந்து அடையாள எதிர்ப்பைத் தவிர வேறு எதுவுமில்லை. இந்த வாய்ச்சவடால் பேர்வழிகளை நம்பிக்கொண்டு சமூக நீதியைக் காப்பாற்ற முடியாது. அரசு வேலைவாய்ப்புகளை தாழ்த்தப்பட்டோருக்கு மறுக்கும் பார்ப்பனிய ஆதிக்கத்தை முறியடிக்க ஜனநாயக சக்திகள் அனைவரும் ஒன்றுதிரண்டு போராடுவதைத் தவிர, இனி வேறு வழியும் கிடையாது.

● கதிர்


"புதிய ஜனநாயகம்" உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை

3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்: இரா. சண்முகராசு,
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2009




படிப்பகம்

www.padippakam.com

# தில்லை நடராஜர் ஆலயம்:
# தீட்சிதர்களின் ஆதிக்கம் தகர்கிறது!

## நடராஜர் ஆலயத்தின் நிர்வாகத்தைத் தமிழக அரசு எடுத்துக் கொண்டுள்ள இடைக்கால வெற்றியைக் கொண்டாடுவோம்!

பிப்ரவரி 2, 2009 - தமிழகத்தின் வரலாற்றில் இதுவொரு முக்கியமான நாள் என்றால், அது மிகையானதல்ல. அன்று தான் சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயிலின் நிர்வாகத்தைத் தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் தீர்ப்பு வெளியானது.

தீட்சிதப் பார்ப்பனக் கும்பலுக்கு எதிராகத் தமிழக மக்கள் அடைந்த இந்த வெற்றி எளிதாகக் கிடைத்த ஒன்றல்ல. சிவனடியார் ஆறுமுகசாமியை முன்னிலைப்படுத்தி, மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நீதிமன்றங்களில் நடத்திய போராட்டங்கள்; மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளை ஒருங்கிணைத்து மனித உரிமை பாதுகாப்பு மையம் கடந்த ஐந்தாண்டுகளில் நடத்திய பல்வேறு விதமான தெருப் போராட்டங்கள்; இப்போராட்டங்களுக்கு மக்கள் கொடுத்த ஊக்கம்; விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க., உள்ளிட்ட பல்வேறு தமிழின அமைப்புகளும், முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் திரு.வீ.வீ.சாமிநாதன், பா.ம.க.வின் பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்கள் கொடுத்த ஆதரவு — ஆகியவற்றின் பின்னணியில்தான் இந்த வெற்றியைச் சாதிக்க முடிந்தது.

''எங்களின் கோயிலை நாங்கள் போனால் போகிறதென்று பக்தர்கள் வந்து வழிபடுவதற்கு அனுமதித்திருக்கிறோம்'' என்று தெனாவெட்டாகப் பேசித் திரிந்த தீட்சிதர்களின் திமிரை, நடராஜர் கோயிலில் உண்டியல் வைக்கக்கூட அனுமதிக்காமல், இத்தனை ஆண்டுகளாகப் பக்தர்கள் கொடுத்த காணிக்கை அனைத்தையும் சுருட்டிக் கொண்டிருந்த தீட்சிதர்களின் பகற்கொள்ளையை இப்புரட்சிகர அமைப்புகள் நடத்திய போராட்டம் தான் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

ஆனால், பெரும்பாலான வணிகப் பத்திரிகைகளோ இப்போராட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, குறிப்பாக நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளின் பங்கினை இருட்டடிப்பு செய்துவிட்டு, ''ஏதோ சென்னை உயர்நீதி மன்றம் எப்போது உத்தரவிடும் என்று தி.மு.க. அரசு காத்துக்கொண்டு இருந்ததை''ப் போல தில்லை நடராஜர் கோயில் நிர்வாகம் கைமாறிய கதையை எழுதுகின்றன.

•••

தில்லை நடராஜர் கோயிலின் நிர்வாகத்தைப் பொது தீட்சிதர்களின் பிடியில் இருந்து விடுவித்து அரசிடம் ஒப்படைக்கும் முயற்சிகள் நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டன. நடராஜர் ஆலயம் தீட்சிதர்களுக்குச் சொந்தமானதா என்பது குறித்து 1885-இல் அப்போதைய இந்து சமய வாரியம் மதராஸ் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், ''இந்தப் பழமையான ஆலயம் தீட்சிதர்களின் தனிச் சொத்து என்பதை நிரூபிப்பதற்கு ஒரு சிறு ஆதாரம்கூடக் கிடையாது,'' என முத்துசாமி அய்யர் மற்றும் ஜே.ஜே.ஷெப்பர்டு என்ற இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

1933-இல் மதராஸ் ராஜ்தானியைச் சேர்ந்த இந்து சமய அற வாரியம், தில்லை நடராஜர் ஆலயத்தை பொதுமக்களுக்குரிய இந்து வழிபாட்டுத் தலம் என வரையறுத்து, ''ஆலயத்தை நிர்வகிக்க மேலாளரை நியமிக்க வேண்டும்; காணிக்கைகளைப் போட உண்டியல் வைக்க வேண்டும்; அர்ச்சனை செய்வதற்குக் கட்டணங்கள் நிர்ணயிக்க வேண்டும்'' என 08.05.1933-இல் உத்தரவொன்றைப் போட்டது. இந்த உத்தரவை எதிர்த்து பொது தீட்சிதர்கள் கடலூர் மாவட்ட நீதிமன்றத்திலும், அதன் பின்னர் மதராஸ் உயர்நீதி மன்றத்திலும் மேல்முறையீடு செய்தனர். இந்த இரண்டு நீதிமன்றங்களுமே நடராஜர் ஆலயம் தீட்சிதர்களின் தனிச்சொத்து என்ற வாதத்தை மறுத்துவிட்ட அதே சமயம், அவ்வாலயத்தை நிர்வகிக்க அறிவிக்கப்பட்ட திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்தன. எனினும் 'சர்வ வல்லமை' பொருந்திய தீட்சிதர்கள் ஆலயத்தில் உண்டியலை வைக்கக்கூட விடவில்லை.

**தீர்ப்பு வெளியான அன்றே இரவோடு இரவாக நடராஜர் ஆலய நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்கும் கிருஷ்ணகுமார் (பொன்னாடை அணிந்திருப்பவர்). அவரது அருகே அறநிலையத் துறை இணை ஆணையர் திருமகள் மற்றும் அதிகாரிகள்.**





படிப்பகம்

www.padippakam.com

'சுதந்திரத்திற்கு'ப் பின் அப்போதைய மாநில அரசு நடராஜர் ஆலயத்தின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளும் அரசாணையொன்றை 28.08.1951 அன்று பிறப்பித்தது. இவ்வுத்தரவை எதிர்த்து தீட்சிதர்கள் தொடுத்த வழக்கில் அரசாணையை ரத்து செய்து உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மேலும், உயர்நீதி மன்றம் அத்தீர்ப்பில் தீட்சிதர்களைத் தனி மதக் குழுவாகவும் அங்கீகரித்தது. மாநில அரசு இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இதனிடையே என்ன மாயம் நடந்ததோ மாநில அரசு மேல்முறையீட்டு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டதோடு, ஆலய நிர்வாகத்தைக் கையகப்படுத்தும் அரசாணையையும் ரத்து செய்துவிட்டது. தீட்சிதர்கள் நடராஜர் ஆலயத்தைத் தங்களின் தனிச் சொத்தாகக் காட்டிக் கொண்டு ஆட்டம் போடுவதற்கு இத்தீர்ப்பைத்தான் இதுநாள் வரை பயன்படுத்தி வருகிறார்கள்.

இத்தீர்ப்பு வந்து முப்பது ஆண்டுகள் கழிந்த பிறகு 1982-இல் தமிழக அரசு ஆலயத்தின் நிர்வாகத்தில் நடந்துள்ள பல்வேறு முறைகேடுகளையும் மோசடிகளையும் குறிப்பிட்டு, ஆலயத்தை நிர்வகிக்க அரசு சார்பில் நிர்வாக அதிகாரியை நியமிக்கப் போவதாக நோட்டீஸ் அனுப்பியது. இதற்குத் தடை கோரி தீட்சிதர்கள் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், இதனை அரசாங்க உத்தரவாகக் கருதத் தேவையில்லை; ''ஷோகாஸ் நோட்டீஸாக '' க் கருதிக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்க வேண்டும் என 09.08.1983-இல் தீர்ப்பளிக்கப்பட்டது. பதில் அளிப்பது, விசாரணை என நான்கு ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்ட பிறகு, தமிழக அரசு 31.7.1987 அன்று நிர்வாக அதிகாரியை நியமிக்கும் உத்தரவைப் போட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து தீட்சிதர்கள் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் பத்தாண்டுகள் கழித்து, 11.02.1997 அன்று நிர்வாக அதிகாரியை நியமித்தது செல்லும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து தீட்சிதர்கள் மீண்டும் வழக்கு தொடர, அவ்வழக்கில் அரசிடம் முறையீடு செய்யுமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன்பின் ஒன்பது ஆண்டுகள் கழித்து 09.05.2006 அன்று தீட்சிதர்களின் முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்த தமிழக அரசு, நிர்வாக அதிகாரியை நியமித்து வெளியிடப்பட்ட உத்தரவை உறுதி செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து தீட்சிதர்கள் தொடுத்த வழக்கில்தான் சென்னை உயர்நீதி மன்றம் நடராஜர் ஆலயத்தின் நிர்வாகத்தைத் தமிழக அரசு எடுத்துக் கொள்வதை உறுதி செய்து 02.02.2009 அன்று தீர்ப்பளித்திருக்கிறது. இவ்வழக்கில் சிவனடியார் ஆறுமுகசாமியையும் சேர்த்துக்கொள்ள மனித உரிமை பாதுகாப்பு மையம் எடுத்த முயற்சியினால்தான், இவ்வழக்கில் மூன்று ஆண்டுகளுக்குள் சாதகமான தீர்ப்பைப் பெற முடிந்திருக்கிறது. இல்லையென்றால், இவ்வழக்கில் எப்படித் தீர்ப்பு வரும், எப்பொழுது தீர்ப்பு வரும் என்பது அந்த தில்லை ஆண்டவனுக்குக்கூடத் தெரிந்திருக்காது.

•••

சிம்மவர்மன் என்ற இரண்யவர்மன், ஆதித்ய சோழன், குலோத்துங்க சோழன் ஆகிய சோழ மன்னர்களால் தான் நடராஜர் கோயில் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது என்பதற்கும்; சிதம்பரத்தில் வாழ்ந்து வரும் சோழ பரம்பரையைச் சேர்ந்த பிச்சாவரம் ஜமீன் சிதம்பரநாத சூரப்ப சோழகனார் குடும்பத்தாரின் கட்டுப்பாட்டில்தான், (98 ஆண்டுகளுக்கு முன்பு வரை) நடராஜர் கோயில் இருந்து வந்ததற்கும்; தீட்சிதர்கள் சூழ்ச்சி செய்து, சிதம்பரநாத சூரப்ப சோழகனாரின் பாட்டனார் தில்லைக்கண்ணு சூரப்ப சோழகனாரிடமிருந்து கோயிலைப் பறித்துக் கொண்டனர் என்பதற்கும் பல்வேறு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

பொதுக்காரியத்திற்காக ஏழைக் குடியானவனிடமிருந்து அவனது நிலத்தைப் பறிக்கச் சற்றும் தயக்கம் காட்டாத அரசாங்கம், இவ்வளவு ஆதாரங்கள் இருந்தும், தீட்சிதர்களிடமிருந்து முழுமையாகக் கோவிலைக் கைப்பற்ற முடியாமல் தடுமாறி நிற்பதன் இரகசியம் என்ன?

பார்ப்பன பாசிஸ்டுகள் உருவாக்கிய தடா, பொடா சட்டங்கள் தன்னை நிரபராதி என நிரூபிக்கும் பொறுப்பைக் குற்றம் சாட்டப்பட்டவனின் தலையில் சுமத்துகின்றன. அதுபோல, எவ்வித ஆதாரமும் காட்டாமல் கோயிலைச் சொந்தம் கொண்டாடிவரும் தீட்சிதர்கள், ''கோயில் எங்களுக்குச் சொந்தம் இல்லை என்பதை நீ நிரூபி'' என அடாவடித்தனமாக நடந்து கொள்கிறார்கள்.

சிதம்பரம் கோவிலில் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின் உண்டியல் வைக்கப்பட்டதை மறைமுகமாகக் கண்டித்து எழுதுகிறது, தினமணி. (11.02.2009). அரசு கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் பக்தர்கள் செலுத்தும் காணிக்கை ஆண்டவனுக்குப் (பார்ப்பானுக்கு?) போய்ச் சேராது என்பதுதான் தினமணியின் ஆதங்கமாம். தினமணி வக்காலத்து வாங்கும் தீட்சிதர்களின் யோக்கியதை என்ன தெரியுமா? உலகப் புகழ் பெற்ற சிதம்பரம் கோயிலுக்கு 2007-ஆம் ஆண்டு கிடைத்த மொத்த வருமானம் ரூ. 37,199 என்றும்; அதில் பல்வேறு இனங்களுக்காக 37,000 ரூபாய் செலவு செய்தது போக ரூ. 199/- கையிருப்பாக இருக்கிறது எனக் 'கணக்கு'க் காட்டியுள்ளனர், தீட்சிதர்கள்.

அதேசமயம், சிதம்பரம் கோயிலில் நிர்வாக அலுவலகம் திறக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள்ளாகப் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுத்த தொகை ரூ. 2,000/- எனக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. (தினமலர், 04.02.2009) குத்து மதிப்பாகப் போட்டால்கூட சிதம்பரம் கோயிலின் ஆண்டு வருமானம் 50 இலட்சத்தைத் தொடும் என்று கூறலாம். 37,199/- ரூபாய் போக, மீதி 49,62,801 ரூபாய் எந்த ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்தது என்பதை தினமணிதான் புலனாய்வு செய்து கண்டுபிடிக்க வேண்டும். சிதம்பரம் கோயில் தீட்சிதர்களின் பிடியில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது எனும் பொழுது கொள்ளையின் பிரம்மாண்டத்தைப் பக்தர்கள்தான் கணக்குப் போட்டுக் கொள்ள வேண்டும்.

இந்து ஆலய பாதுகாப்புக் குழு என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். கும்பல், ''திருச்செந்தூர் முருகன் கோவிலில் நடந்த வேல் திருட்டு உள்ளிட்டு, அரசு கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு கோவில்களில் நடைபெற்றுள்ள திருட்டு - மோசடிகளைப் பட்டியல் போட்டு, அரசு கட்டுப்பாட்டுக்குப் போனால் நடராஜர் சொத்தும் களவு போகும்'' என நோட்டீஸ் போட்டு பக்தர்களைப் பயமுறுத்தி வருகிறது.

தீட்சிதர்களின் கட்டுப்பாட்டில் நடராஜர் ஆலயம் இருந்த பொழுதுதான், தங்க ஓடு வேயப்பட்ட கோபுரத்தில் 9 கலசங்களின் மேல் இருந்த 30 பவுன் பெறுமான தங்கப் பூக்கள் களவு போனது உள்ளிட்டு, பல்வேறு நகை திருட்டு குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டன. 1994-ஆம் ஆண்டு சங்கர தீட்சிதர் என்பவர் நகை திருட்டுக்காக சக தீட்சிதர்கள் மீது கொடுத்த புகார் சிதம்பரம் போலீசு நிலையத்தில் (குற்ற எண்: 42/94) பதிவாகியிருக்கிறது.

சிதம்பரம் கோயிலுக்குச் சொந்தமான தங்க-வைர நகைகளை மதிப்பீடு செய்யும் ஆய்வு அரசால் நடத்தப்பட்ட பொழுது, தீட்சிதர்கள் கருவறைக்குள் 200 பவுன் நகையைத்


படிப்பகம்

www.padippakam.com

தங்கப் பாளங்களாகப் பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதனைப் பற்றி அதிகாரிகள் கேள்வி எழுப்பிய பொழுது, அது தங்களின் வீட்டு நகை என்றும்; திருட்டு பயத்தால் கருவறைக்குள் பத்திரமாக வைத்திருப்பதாகப் பதில் அளித்தார்கள், தீட்சிதர்கள். ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்!

சிதம்பரம் கோயிலுக்குத் தமிழக அரசு நிர்வாக அதிகாரியை நியமித்தது செல்லும் என 1997-ஆம் ஆண்டு தீர்ப்பளித்த சென்னை உயர்நீதி மன்றம், அந்த உத்தரவில், ''நகை திருட்டு போன்ற குற்றங்களைச் செய்த தீட்சிதர்கள் மீது கிரிமினல் வழக்குகள் ஏன் போடப்படவில்லை?'' எனக் கேட்டு அரசின் மெத்தனத்தைக் கண்டித்துள்ளது. எனவே, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் புலம்பல், ஈயத்தைப் பார்த்து இளிக்கும் பித்தளையின் கதை போன்றதுதான்.

அமெரிக்க வங்கிகளில், சத்யம் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் நடந்த முறைகேடுகளைப் பார்த்துவிட்டு, தனியார்துறையை அரசு கண்காணிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கியது தினமணி. தீட்சிதர்கள் விசயத்தில் அதைத்தான் அரசு செய்திருக்கிறது. ஆனால், தினமணியோ, கனமாக இருப்பது பார்ப்பனர்களின் மடி என்பதால் தட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டுகிறது.

''தீட்சிதர்கள் ஏதோ பாசுமதி அரிசியில் நடராஜனுக்கு உகந்த நைவேத்யங்கள் செய்து கொடுப்பது போலவும்; அரசின் கைகளுக்குப் போனால், நடராஜனுக்கு ரேசன் அரிசிதான் கிடைக்கும்'' என ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது மேல்சாதிக் கொழுப்பைக் கக்கியிருக்கிறது. கண்ணப்ப நாயனார் சிவனுக்குப் பச்சை 'மாம்சத்தை'ப் படையலாகக் கொடுத்ததையும்; விஷத்தை அருந்தியதால்தான் சிவனுக்குத் திருநீலகண்டன் என்ற திருநாமம் ஏற்பட்டதையும் புராணங்கள் பக்தர்களுக்குப் போதிக்கின்றன. விஷத்தையே விழுங்கிய சிவனால் ரேசன் அரிசியை விழுங்க முடியாதா? பூசாரியே தொன்னைக்கு அலையும்பொழுது, லிங்கம் பஞ்சாமிர்தம் கேட்டதாம் என்ற பழமொழியைப் பக்தர்கள் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு நினைவுபடுத்துவது நல்லது!

கோயிலில் உண்டியல் வைப்பது உள்பட, பணம், நகை, சொத்து விவகாரங்களைக் கையாளுவதை மத நடவடிக்கையாக வரையறுக்க முடியாது; அதில் சட்டத்திற்குப் புறம்பாக முறைகேடுகள் நடக்குமானால், தனி வகையறா கோவிலாக இருந்தாலும், அரசு தலையிட்டு அக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்கலாம் என உச்சநீதி மன்றம் பல்வேறு வழக்குகளில் தீர்ப்பளித்திருக்கிறது. இதன் அடிப்படையில்தான், சென்னை உயர்நீதி மன்றம் சிதம்பரம் கோயில் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்வது சரியானது என உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பும், தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையும் தீட்சிதர்களின் மத உரிமைகளில் - பூசை செய்வது போன்றவை - அரசு தலையிடாது என உத்தரவாதம் அளித்து, பார்ப்பனக் கும்பலின் மனதைக் குளிர வைத்துள்ளன. எனினும், ஆர்.எஸ்.எஸ். - தீட்சிதர் கும்பல், ''இனி நடராஜர் கோயிலில் ஆறுகால பூஜைகள் ஒழுங்காக நடக்காது'' என்ற அழுகுணித்தனமான பொய்யைப் பக்தர்கள் மத்தியில் பரப்ப முயலுகின்றன.

## அடக்கினோம் தீட்சிதத் திமிர்! அடுத்தது.. தெற்குவாயில் சுவர்!!
## — தில்லைப் பேரணியின் போர்முழக்கம்!

'தில்லையில் தீட்சிதரை வென்றாரில்லை' என்ற தீட்சிதர்களின் இறுமாப்பு தகர்க்கப்பட்டு விட்டது. உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி தில்லைக் கோயிலில் அறநிலையத்துறை அதிகாரி நியமிக்கப்பட்டுவிட்டார். மனித உரிமைப் பாதுகாப்பு மையம், ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு ஆகிய எமது அமைப்புகள் மக்கள் மன்றத்திலும் நீதிமன்றத்திலும் விடாப்பிடியாக நடத்திய போராட்டம் தீட்சிதர்களின் ஆதிக்கப் பிடியைத் தகர்த்திருக்கிறது. இந்த வெற்றியை அறிவிக்குமுகமாகவும், அடுத்த கட்டப் போராட்டத்துக்கான கோரிக்கைகளை வெளியிடுமுகமாகவும் எமது அமைப்புகளின் சார்பில் பிப்ரவரி 21-ஆம் தேதியன்று எழுச்சி மிகு பேரணியும் பொதுக்கூட்டமும் சிதம்பரத்தில் நடத்தப்பட்டன.

ஆடல் வல்லானைப் பணிய, ஆதிரைக்கும் ஆனித் திருமஞ்சனத்துக்கும் திரண்டு வரும் பக்தர்களை மட்டுமே ஆயிரக்கணக்கில் கண்டிருந்த தில்லை நகரம், அன்று ஆர்த்தெழுந்த மக்கள் ஆயிரக்கணக்கானோரின் அணிவகுப்பை முதன் முறையாகத் தரிசித்தது. பணிய மறுக்கும் போர்க்குணத்தின் நடனம் கண்டு பரவசம் கொண்டது.



மாலையில் வழக்குரைஞர் ராஜுவின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் அம்பிகாபதி-வி.வி.மு, தோழர் பாலு - பு.மா.இ.மு, தோழர் அனந்த குமார்-பு.ஜ.தொ.மு, திரு.காவியச் செல்வன்-விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, வழக்குரைஞர் செந்தில், தோழர் காளியப்பன் - ம.க.இ.க ஆகியோர் உரையாற்றினர். இந்தத் தீர்ப்பைப் பெறுவதற்கு தாங்கள் நடத்திய நீண்ட போராட்டத்தை விவரித்தார் ராஜு. திரு.வி.எம்.எஸ். சந்திரபாண்டியன் (பா.ம.க), கோயிலை அறநிலையத்துறை மேற்கொள்வதற்கு எதிராக, பக்தர்கள் என்ற போர்வையில் உண்ணாவிரதம் நடத்தியவர்களெல்லாம், தீட்சிதர்களுடன் கூட்டுச் சேர்ந்து கோயில் சொத்தைக் கொள்ளையடித்தவர்களே என்பதை ஆதாரங்களுடன் அம்பலமாக்கினார்.

''மக்களைப் பாதுகாக்கத்தான் கடவுளும் ஆலயங்களும் என்று கூறியவர்கள் இன்று ஆலயப் பாதுகாப்புக்கு கமிட்டி போடுகிறார்கள். ஆலயத்தையே மனிதன் தான் பாதுகாக்க வேண்டும் என்பதிலிருந்தே ஆண்டவன் இல்லை என்பது அம்பலமாகவில்லையா?'' என்று கேள்வி எழுப்பி, பக்தியின் கண்மூடித்தனத்தைப் பகுத்தறிவால் கிழித்தார் பேராசிரியர் பெரியார்தாசன். தீட்சிதர்களின் வாதங்களை எள்ளி நகையாடிய தோழர் மருதையன், 'தில்லை-ஈழம்-உயர்நீதிமன்ற தாக்குதல்' என்ற மூன்று பிரச்சினைகளையும் இணைக்கும் கண்ணியை அடையாளம் காட்டினார்.

''அரசாணை மூலம் கோயிலை முற்றாக அறநிலையத்துறை எடுக்க வேண்டும்; கொலை, கொள்ளை முதலான கிரிமினல் குற்றங்கள் புரிந்த தீட்சிதர்களை உடனே கைது செய்ய வேண்டும்; நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்திருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்க்கவேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து, போராட்டத்தைத் தொடர அறைகூவல் விடுத்தார். •



படிப்பகம்

www.padippakam.com




தில்லை நடராஜர் ஆலயத்தை அறநிலையத்துறையின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரத் தனி அரசாணை பிறப்பிக்கக் கோரி, சென்னை - உயர்நீதி மன்ற வளாகத்தில் சிவனடியார் ஆறுமுகசாமியும், மனித உரிமை பாதுகாப்பு மையத்தினரும் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அரசிற்கு தீட்சிதர்களை எதிர்த்து நிற்கும் வீரம் எங்கிருந்து வந்தது?

இதற்குக் காரணம், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளும், மனித உரிமை பாதுகாப்பு மையமும் இணைந்து, ''தில்லை நடராஜர் கோயிலின் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் மறைகள் ஒலிக்க வேண்டும்; தில்லை கோயிலை தீட்சிதர்களின் பிடியில் இருந்து விடுவித்து, பொதுமக்களின் உடைமையாக்க வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன் வைத்து, கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக நடத்திய தெருப் போராட்டங்கள்தான்! ''தில்லை கோயிலில் தீட்சிதர்கள் கடைபிடிக்கும் மொழித் தீண்டாமை ஒழியாதா? தீட்சிதர்கள் நடத்திவரும் கொள்ளை, கொலை, காம களியாட்டங்களை யாராவது தட்டிக் கேட்க மாட்டார்களா?'' என ஏங்கிக் கொண்டிருந்த தமிழின உணர்வாளர்களும், பக்தர்களும் இப்போராட்டங்களை முழு மனதோடு ஆதரித்து நின்றார்கள். புரட்சிகர அமைப்புகளின் கோரிக்கை, மக்கள் மத்தியில் பௌதீக சக்தியாக உருவெடுத்து நின்றுவிட்டது.

ஆனால், தற்பொழுது அக்கோயிலுக்குள் நடப்பது என்ன? சூடத் தட்டில் விழும் துட்டு குறைந்தவுடன், தீட்சிதர்கள் நடராஜருக்கு சூட ஆராதனையைக் கூட ஒழுங்காகக் காட்ட மறுக்கிறார்கள் என்ற புகாரைப் பக்தர்கள்தான் நிர்வாக அதிகாரியிடம் கூறியிருக்கிறார்கள்.

''அரசின் கட்டுப்பாட்டுக்குக் கோயில் போனால், நடராஜருக்கு 'நைவேத்யம்' கிடைக்காது; பக்தர்களுக்குத் தரிசனம் கிடைக்காது'' என நோட்டீஸ் அடித்து சிதம்பரம் நகருக்குள் கொடுத்து வரும் தீட்சிதர்கள், நீதிமன்றத்தில் இந்த மதப் பிரச்சினைகளைப் பற்றி, பக்தனைப் பற்றிப் பேசுவதில்லை. மாறாக, தனது சொத்துரிமைப் பற்றிப் பேசுகிறது. முதலாளித்துவத்தின் கீழ், மத உரிமையைக் காட்டிலும் சொத்துரிமை புனிதமான தல்லவா!

நடராஜர் ஆலயத்திற்குள் நந்தனை நுழையவிடாமல் தடுத்த நம்மால், உண்டியல் நுழைந்ததைத் தடுக்க முடியவில்லையே என்பதுதான் தீட்சிதர்களின் பிரச்சினை! திருச்சிற்றம்பல மேடையேறி நடராஜனைத் தரிசிக்க துண்டுச் சீட்டு எழுதிக் கொடுத்து பக்தர்களிடம் நடத்திய கொள்ளையை இனித் தொடர முடியாது என்பதுதான் தீட்சிதர்களின் பிரச்சினை! சிதம்பர நடராஜர் கோயில் வளாகத்தைத் தமது காமக் களியாட்டங்களுக்கான உல்லாச விடுதியாக இனி பயன்படுத்த முடியாதே என்ற ஆதங்கம்தான் தீட்சிதர்களின் பிரச்சினை! நடராஜரைத் தரிசிக்க வரும் பக்தர்களைக் கிள்ளுக்கீரைகளைப் போல எண்ணி அவமானப் படுத்தி வந்த தீட்சிதர்களின் கொட்டம் ஒடுக்கப்பட்டதுதான் பிரச்சினை!

•••

**செ**ன்னை உயர்நீதி மன்றம் இத்தீர்ப்பை வெளியிட்ட அன்றே (பிப்.2, 2009) இரவோடு இரவாக நடராஜர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமித்து, கோயில் நிர்வாகப் பொறுப்பைத் தனது கையில் எடுத்துக் கொண்டது, தி.மு.க. அரசு. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன், 1997-இல், அப்பொழுதும் தி.மு.க. ஆட்சி நடந்து வந்த சமயத்தில், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி வெங்கிடாசலம், நடராஜர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்க உத்தரவு போட்டார். அப்பொழுதும் முதலமைச்சராக இருந்த கருணாநிதி, இது போன்று ஏன் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை. இப்பொழுது, தி.மு.க.

இப்படிப்பட்ட நிலையில், தீர்ப்புக்குப் பிறகு நிர்வாக அதிகாரியை உடனடியாக நியமிப்பதைத் தி.மு.க. அரசிற்கு வேறு வழியில்லாமல் போய் விட்டது. தி.மு.க. அரசு இரவோடு இரவாக நடவடிக்கை எடுக்காமல் சுணக்கம் காட்டியிருந்தால், தீட்சிதர்கள் அதிகார வர்க்கம் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, தீர்ப்புக்குத் தடையுத்தரவு வாங்கியிருப்பார்கள். பொதுமக்கள் தி.மு.க. அரசு மீது காறி உமிழ்ந்திருப்பார்கள்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையும்; உயர்நீதி மன்றத் தீர்ப்பும் கோயில் நிர்வாக விசயத்தில்கூட, தீட்சிதர்களின் ஆதிக்கத்தை முற்றாக ஒழித்து விடவில்லை. வரவு-செலவு கணக்குகள் விசயத்தில் பொது தீட்சிதர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதால், இந்த ஆணை நிர்வாக அதிகாரியை தீட்சிதர்களின் கணக்குப் பிள்ளையாக மாற்றுகிறது என மனித உரிமை பாதுகாப்பு மையம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

எனவே, ''அரசாணை பிறப்பித்து தில்லைக் கோயிலை அறநிலையத் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வா! நகைக் களவு உள்ளிட்ட கிரிமினல் குற்றங்கள் புரிந்த தீட்சிதர்களைக் கைது செய்! நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்திருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறி!'' என்ற முழக்கங்களை முன்வைத்து, மனித உரிமை பாதுகாப்பு மையமும், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளும் அடுத்த கட்ட போராட்டத்தை நடத்தத் தொடங்கிவிட்டன. இதனின் தொடக்கமாக, இக்கோரிக்கைகளை வலியுறுத்தி சிதம்பரம் நகரில் 21.02.09 அன்று ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டன.

இந்த இடைக்கால வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் கூட, இப்படிப்பட்ட தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவது அவசியமானது, தவிர்க்க முடியாதது என்பதை தமிழக மக்கள் உணர வேண்டும். இல்லையென்றால் தீட்சிதர்கள் மாமி, சாமி போன்ற பார்ப்பன அரசியல் புரோக்கர்கள் மூலம், நடராஜர் கோயிலைத் தங்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கடத்திக் கொண்டு போய் விடுவார்கள்.

**—மனித உரிமைப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.**



படிப்பகம்

www.padippakam.com

## லாவலின் ஊழல்:

# சி.பி.எம்.-இன் உத்தமர் வேடம் கலைகிறது!

### முதலாளித்துவ ஓட்டுக்கட்சிகளைப் போல சி.பி.எம். கட்சியும் ஊழலில் சிக்கிச் சீரழிந்து நிற்கிறது!

கொள்கை - சித்தாந்தம் அனைத்தையும் கை கழுவி விட்டு, தனியார்மயம் - தாராளமயத்துக்குக் காவடி தூக்கி, சிங்கூர் - நந்திகிராமத்தில் போராடும் மக்களை மிருகத்தனமாக ஒடுக்கிய சி.பி.எம். கட்சி, இப்போது லாவலின் ஊழல் விவகாரத்தால் எஞ்சியிருந்த ஒட்டுக் கோவணத்தையும் இழந்து அம்மணமாகி நிற்கிறது. சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைக்குழு உறுப்பினரும், கேரள மாநிலச் செயலாளருமான பினாரயி விஜயன் மீது, ரூ. 390 கோடி லாவலின் ஊழல் வழக்கில் மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ள நிலையில், ஊழல் கறை படியாத கட்சி என்ற மாய பிம்பத்தையும் அது தகர்த்தெறிந்து விட்டது.

ஒவ்வொரு முறையும் சர்ச்சைக்குரிய வழக்குகள் வரும் போதெல்லாம், "மையப் புலனாய்வுத் துறை விசாரணை நடத்த வேண்டும்" என்று கூப்பாடு போட்டு வந்த சி.பி.எம். கட்சி, இப்போது "தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக மைய அரசு பயன்படுத்தும் இன்னொரு ஆயுதம்தான் சி.பி.ஐ." என்று புதிய விளக்கம் கொடுக்கிறது. அக்கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் மீது ஊழல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதுதான், இந்தத் திடீர் "பல்டி"க்குக் காரணம்.

"1996 முதல் 2001 வரை கேரளாவில் முதல்வர் ஈ.கே. நாயனார் தலைமையிலான இடது முன்னணி ஆட்சியில், பினாரயி விஜயன் மின்துறை அமைச்சராக இருந்தபோது, கனடா நாட்டைச் சேர்ந்த எஸ்.என்.சி. லாவலின் என்ற நிறுவனத்துடன் மூன்று நீர்மின் திட்டங்களுக்கான ஒப்பந்தம் போட்டார். இதில் ஊழல் நடந்துள்ளதாகக் கேரள காங்கிரசார் குற்றம் சாட்டி 2001 முதல் 2006 வரையிலான தமது ஆட்சிக் காலத்தில் ஒரு கமிட்டியை நிறுவி விசாரணை நடத்தினர். அதில், அவர்கள் எதிர்பார்த்தபடி எந்த ஊழல் - முறைகேட்டையும் கண்டறிய முடியவில்லை. தமது ஆட்சியின் கடைசி நேரத்தில் - அதாவது, 2006 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, அன்றைய காங்கிரசு முதல்வர் உம்மன் சாண்டி இந்த ஊழலை மையப் புலனாய்வுத் துறை விசாரிக்கக் கோரி நடவடிக்கை எடுத்தார். இதன் மூலம் சட்டமன்றத் தேர்தலில் சி.பி.எம். கட்சியை ஊழல் கறை படிந்ததாகக் காட்டி ஆதாயமடைய காங்கிரசு முயற்சித்தது.

ஆனால், 2006-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில், கேரள மக்கள், காங்கிரசைத் தோற்கடித்து இடது முன்னணியை வெற்றி பெறச் செய்தனர். காங்கிரசின் அவதூறுக்கு பதிலடி கொடுத்து மக்கள் தீர்ப்பளித்த போதிலும், தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், மைய அரசின் அதிகாரத்தைக் கொண்டு மீண்டும் இந்த வழக்கைக் கிளறி ஆதாயமடையத் துடிக்கிறது, காங்கிரசு. எனவேதான், இந்த ஊழல் வழக்கும் மையப் புலனாய்வுத் துறையின் நடவடிக்கையும் அரசியல் உள்நோக்கம் கொண்டது" என்று நியாயவாதங்களை அடுக்குகிறது, சி.பி.எம். தலைமை.

ஆனால், ஒப்பந்தப்படி லாவலின் நிறுவனம் செயல்படாததால் மாநில அரசும் மின் வாரியமும் ரூ. 390 கோடி நட்டமடைந்துள்ளதாகக் குற்றம் சாட்டுகிறது, மையப் புலனாய்வுத் துறை. ஒப்பந்தத்தில், மலபாரிலுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கு ரூ. 98 கோடி நிதியுதவி செய்வதாக லாவலின் நிறுவனம் வாக்குறுதியளித்துள்ளது. ஆனால், அந்நிறுவனம் ரூ. 8.98 கோடி மட்டுமே கொடுத்துள்ளது. எஞ்சிய தொகை இதுவரை தரப்படவில்லை. பினாரயி விஜயன் கனடா நாட்டுக்குச் சென்ற போதிலும், லாவலின் நிறுவனத்திடமிருந்து அத்தொகையைப் பெற எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

லாவலின் நிறுவனம் அத்தொகையை வழங்கியிருக்கக் கூடும் என்றும், அத்தொகையை பினாரயி விஜயனும் சி.பி.எம். கட்சித் தலைமையும் அமுக்கி விட்டனர் என்றும் காங்கிரசு குற்றம் சாட்டுகிறது. லாவலின் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில், இத்தொகை பற்றி வெறும் வாக்குறுதியாக மட்டுமே உள்ளதே தவிர, தனியாக ஒப்பந்தம் எதுவும் போடப்படவில்லை. மேலும், அப்போது மின்துறை அமைச்சராக இருந்த பினாரயி விஜயன், புற்றுநோய் மருத்துவமனைக்கான லாவலின் நிறுவனத்தின் நிதியுதவி பற்றி அமைச்சரவைக்குத் தெரிவிக்கவில்லை.

மையப் புலனாய்வுத் துறை மற்றும் காங்கிரசுக் கட்சியின் அடுக்கடுக்கான

கேரள முதல்வர் அச்சுதானந்தனுடன் ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கேரள சி.பி.எம். செயலர் பினாரயி விஜயன்.






படிப்பகம்

www.padippakam.com

குற்றச்சாட்டுகளுக்கு பினாரயி விஜயனோ, சி.பி.எம். கட்சித் தலைமையோ இன்றுவரை விளக்கமளிக்கவில்லை. இவை அரசியல் உள்நோக்கமுடைய அவதூறுகள் என்று சி.பி.எம். கட்சித் தலைமை புறக்கணித்து வருகிறது. அவற்றை மட்டுமல்ல; சி.பி.எம். கட்சித் தோழர்களே ஊழல் நடந்ததற்கான முகாந்திரம் உள்ளதாக சந்தேகங்களை எழுப்பிய போதிலும், அவற்றை சி.பி.எம். கட்சித் தலைமை மூடிமறைத்து வருகிறது.

கேரள மாநில அரசின் கணக்கு - தணிக்கைத்துறை அதிகாரியின் அலுவலகம், இந்த ஒப்பந்தத்தின் மூலம் மாநில அரசுக்கு ரூ. 390 கோடி நட்டமேற்பட்டுள்ளதாக தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவரான பாலானந்தன் தலைமையில் நிறுவப்பட்ட கமிட்டியானது, மூன்று மின் திட்டங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த அரசுத்துறை நிறுவனமான பாரத மிகுமின் நிறுவனத்துடன் (''பெல்'') ஒப்பந்தம் போடுமாறும், அன்னிய தனியார் நிறுவனமான லாவலினைப் புறக்கணிக்குமாறும் பரிந்துரை செய்துள்ளது. ஆனாலும் இப்பரிந்துரைக்கு மாறாக பினாரயி விஜயன், லாவலின் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளார். மேலும், கேரள மாநில அரசின் ஊழல் தடுப்பு - கண்காணிப்புத் துறை, எட்டு உயரதிகாரிகள் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது.



**பினாரயி விஜயன் - அச்சுதானந்தன் கோஷ்டிச் சண்டையால் கேரள சி.பி.எம்.கட்சியே பிளவுப்பட்டுள்ள நிலையில் லாவலின் ஊழல் விவகாரம் அதை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும்.**

இந்த விவரங்களை இணைத்து 302 பக்க அறிக்கையாக கேரள சி.பி.எம். முதல்வரும் பினாரயி விஜயனுக்கு எதிரான கோஷ்டியின் தலைவருமான அச்சுதானந்தன், ஏற்கெனவே கட்சித் தலைமையிடம் புகாராகக் கொடுத்துள்ளார். அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான அச்சுதானந்தன் கொடுத்த இப்புகார் பற்றி கட்சிக்குள் கூட சி.பி.எம். தலைமை விசாரணை நடத்த முன்வரவில்லை.

தற்போது பினாரயி விஜயன் மீது மையப் புலனாய்வுத் துறை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததும், உடனடியாக விமானமேறி டெல்லிக்குச் சென்று சி.பி.எம். கட்சியின் பொதுச்செயலாளரான பிரகாஷ் காரத்தை அச்சுதானந்தன் சந்தித்தார். முதன் முறையாக கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஒருவர் ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால், வரும் பொதுத்தேர்தலில் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் என்றும், உடனடியாக கேரள மாநிலச் செயலர் பதவியிலிருந்து பினாரயி விஜயனை நீக்குமாறும் கோரியுள்ளார்.

மையப் புலனாய்வுத்துறையும் காங்கிரசும் அரசியல் உள்நோக்கத்தோடு அவதூறு செய்கின்றன என்றால், கேரள முதல்வரும் அரசியல் தலைமைக் குழு உறுப்பினருமான அச்சுதானந்தன், பினாரயி விஜயன் மீது புகார் கொடுப்பதிருப்பதும் கூட வெறும் அவதூறுதானா என்று சி.பி.எம். கட்சிக்குள் கேள்விகள் எழத்தொடங்கின. ஏற்கெனவே பினாரயி விஜயன் கோஷ்டிக்கும் அச்சுதானந்தன் கோஷ்டிக்கும் இடையிலான நாய்ச் சண்டையால் கேரள சி.பி.எம். கட்சியே பிளவுபட்டுக் கிடக்கும் நிலையில், விஜயன் மீது நடவடிக்கை எடுத்தால் கேரளாவில் கட்சியே உடைந்து சிதறிவிடும் என்று சி.பி.எம். தலைமை அஞ்சியது.

மறுபுறம், மாநில ஆளுநரின் அனுமதி பெற்று மையப் புலனாய்வுத் துறை விஜயன் மீது விசாரணை நடத்த முற்பட்டால், சட்டப்படி இவ்வழக்கில் மாநில அரசின் நிலை பற்றி அமைச்சரவையில் விவாதிக்க நேரிடும். அப்போது முதல்வர் அச்சுதானந்தன், பினாரயி விஜயனைப் பழிவாங்க நடவடிக்கை எடுத்தால், அது கட்சிப் பிளவைத் தீவிரமாக்கிவிடும் என்றும் கட்சித் தலைமை அஞ்சுகிறது. அல்லது, அச்சுதானந்தனை முதல்வர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு இந்தச் சிக்கலிலிருந்து மீள கட்சித் தலைமை முயற்சித்தாலும், அச்சுதானந்தன் கோஷ்டி கலகத்தில் இறங்கி கட்சியைச் சிதறடித்துவிடும்.

என்ன செய்வதென்று புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்ட சி.பி.எம். தலைமை, பிப்ரவரி 14-ஆம் தேதியன்று அரசியல் தலைமைக்குழு கூட்டத்தைக் கூட்டி, விஜயனை ஆதரித்து, கட்சியைக் காப்பாற்ற சமரசமாகப் போகுமாறு அச்சுதானந்தன் கோஷ்டிக்கு உபதேசித்துள்ளது. இதன் மூலம் விஜயனின் ஊழல் - முறைகேடுகளை வெளிப்படையாக நியாயப்படுத்தியுள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான பினாரயி விஜயன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் மற்றும் மாநிலச் செயலாளர் ஆகிய பொறுப்புகளிலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை என்று கட்சித் தலைமை அறிவித்துள்ளதன் மூலம், இனி ஊழல் கறை படிந்தவர்களும் கட்சியில் தலைவராகலாம் என்ற புதிய மரபை சி.பி.எம். கட்சி உருவாக்கியுள்ளது. ''ஊழலை ஒழிப்போம்!'' என்று இனி அக்கட்சி போராட்டம் நடத்தக்கூட அருகதை இழந்து விட்டது.

கட்சித் தலைமையின் முடிவுக்குக் கட்டுப்படுவதாக அச்சுதானந்தன் தெரிவித்த போதிலும், அச்சு கோஷ்டியினர் பினாரயி விஜயனின் ஊழல் - மோசடிகளை அம்பலப்படுத்தி வருவதோடு, அவரது உருவப் படத்துக்கு ஆங்காங்கே செருப்பு மாலை போட்டுத் தொங்கவிடும் வேலையையும் செய்து வருகின்றனர். புழுத்து நாறும் இக்கோஷ்டிச் சண்டை நாடாளுமன்றத் தேர்தலின் போது நாய்ச் சண்டையாக முற்றும் என்பது நிச்சயமாகி விட்டது.

நாடாளுமன்ற சாக்கடையில் மூழ்கி ஓட்டுப் பொறுக்கி வந்த சி.பி.எம். கட்சி, இன்று ஊழல் முடைநாற்றம் வீசும் கட்சியாக புதிய பரிமாணத்தை எட்டிவிட்ட பிறகு, இனி அக்கட்சியைச் சீர்செய்து மாற்றியமைத்துவிட முடியாது. செங்கொடி காட்டி இன்னமும் ஏய்த்து வரும் அக்கட்சியை நாட்டு மக்களும் புரட்சியை நேசிக்கும் அக்கட்சி அணிகளும் புறக்கணித்து, தனிமைப்படுத்தி முடமாக்குவதைத் தவிர, இனி வேறு வழியும் கிடையாது.

● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

## அமைப்புசாராத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்புச் சட்டம்:

# கானல் நீர் தாகம் தீர்க்காது!

### தேர்தலைக் குறிவைத்து நிறைவேற்றப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சட்டத்தால் எந்தப் பயனும் இல்லை.

அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்காக ஏழை-கூலித் தொழிலாளர்கள் வேலை தேடி பெருநகரங்களை நோக்கி நகர்கின்றனர். மொழி, மாநில எல்லைகளை எல்லாம் கடந்து வாழ்க்கை அவர்களைப் பெயர்த்து எறிகின்றது. குறிப்பாக பீகார், ஒரிசா, உத்திரபிரதேசம் ஆந்திரா மாநிலங்களிலிருந்து சென்னை, திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களுக்குக் கூலி வேலை செய்ய வருகிறார்கள். இதேபோல தமிழகத்தில் இருந்தும் புலம் பெயர்ந்து பெங்களூரு, மும்பை, கேரளம் போன்ற இடங்களுக்குப் போகிறார்கள். அமைப்பு சாராத தொழிலாளர்களாக வகைப்படுத்தப்படும் இவர்களுக்குக் கிடைக்கும் வேலையோ நிரந்தரம் இல்லாதது.

இந்தியாவில் அமைப்புசாராத் தொழிலாளர்களாக கிட்டத்தட்ட 43.30 கோடி பேர் உள்ளனர். முக்கியத் தொழில்துறையான சுரங்கம், இரும்பு, மின் உற்பத்தி, துணி உற்பத்தி போன்றவை அமைப்பு சார்ந்த தொழில்கள் என்றாலும், அத்துறைகளிலும் ஒப்பந்த மற்றும் தினக்கூலிகளாக கோடிக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களும் அமைப்புசாராத தொழிலாளர்கள்தான்.

இரத்தம் சிந்திப் போராடி, சட்டப் பாதுகாப்புடன் பணியாற்றிவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980-களுக்குப் பின் படிப்படியாகக் குறைந்து வருகிறது. பணி நிரந்தரமான தொழிலாளர்களை நீக்கி விட்டு அவ்வேலைகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிக்கும் வழக்கம், பொதுத்துறை நிறுவனங்களிலும், மத்திய-மாநில அரசுகளின் அரசுத் துறையிலும் புகுத்தப்படுகிறது.

1980-ஆம் ஆண்டு இருபது சதவீதத் தொழிலாளர்கள் சட்ட மற்றும் சமூகப் பாதுகாப்புடன் பணிபுரிந்தார்கள். ஆனால் 2009-ஆம் ஆண்டில் வெறும் மூன்று சதவீதத் தொழிலாளர்களுக்கு மட்டுமே சமூகப் பாதுகாப்பு உள்ளது.

2005-ஆம் ஆண்டு இந்தியாவின் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை 45.97 கோடி. அதில் வாழ்வதற்கான ஊதியம், சட்ட மற்றும் சமூக பாதுகாப்புடன் உழைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெறும் 2.67 கோடிமட்டுமே.

பெரும் நிறுவனங்களைத் தவிர்த்துப் பார்த்தால், சுமைதூக்குபவர்கள், முடி திருத்துபவர்கள், செக்யூரிட்டி தொழிலாளர்கள், சமையல்காரர்கள், மருத்துவமனை, தனியார் கல்வி நிறுவனங்கள், ஆடை தயாரிப்பு நிறுவனங்கள், எந்திர பணிமனைகள், கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வீடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள், ஆடு-மாடு வளர்ப்பவர்கள் என எண்ணற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கோடிக்கணக்கான உழைப்பாளர்களுக்கு சமூகப் பாதுகாப்போ, பணி நிரந்தரமோ, சட்டரீதியான பாதுகாப்போ கிடையாது.

அமைப்பு சாராத தொழிலில் ஈடுபடுபவரின் வாழ்நிலை எவ்வாறு உள்ளது? கட்டுமானத் தொழிலை எடுத்துக் கொண்டால் அதில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்தான் பணியில் அமர்த்தப்படுகின்றனர். கட்டுமான இடங்களில் தகரக் கொட்டகைகளில் தங்க வைக்கப்படும் இவர்களுக்குச் சுத்தமான குடிநீரோ, கழிப்பிட வசதியோ, இவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்போ கிடையாது. மருத்துவ வசதி கிடையாது. தினமும் ரூ. 80 கொடுத்து 10 மணி முதல் 16 மணி நேரம் வரை வேலை வாங்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு சங்கம் அமைக்கும் உரிமை இல்லை. பணிசெய்யும் இடத்தில் பாதுகாப்பு இல்லாததால், ஆடு-மாடுகளைப் போல செத்து மடிகிறார்கள். தொழிலாளர் நலச் சட்டப்படி இவர்களுக்கு எந்தச் சலுகைகளும் உரிமைகளும் கிடையாது.



முறையான ஊதியம், முழுமையான சமூக பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக் கோரி அமைப்பு சாரா தொழிலாளர்கள் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

கல்லுடைக்கும் தொழிலாளர்களின் நிலைமையோ இன்னமும் கொடுமையானது. கற்குவாரிகள் அனைத்தும் மாஃபியாக்களின் பிடியிலுள்ளது. குவாரிகளில் தொழிலாளர்கள் ஒப்பந்த முறையில் பணியில் அமர்த்தப்பட்டு கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர். எந்தப் பாதுகாப்பு சாதனங்களும் இல்லாமல் வெறும் கையில் சுத்தியலைப் பிடித்துக் கல்லுடைக்கிறார்கள். இவர்கள் ரத்தம் சிந்தாத நாளே கிடையாது. பார்க்கின்சன், சிலிகோசிஸ் போன்ற நோய்களால் தாக்கப்பட்டு 45 அல்லது



படிப்பகம்

www.padippakam.com

50 வயதுகளில் ரத்தம் கக்குகிறார்கள். இவர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டப்படி எந்தச் சலுகைகளும் உரிமைகளும் கிடையாது.

சட்டப்படியான எல்லா உரிமைகளையும் இவர்கள் பெற வேண்டுமானால் இவர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் தொழிலாளர் நலச்சட்டம் இத்தொழிலாளர்களுக்குப் பொருந்தும். ஆனால் ஒப்பந்தத் தொழிலாளர்களையும் அமைப்பு சாராத் தொழிலாளர்களையும் பாதுகாக்க இந்திய நாடாளுமன்றம் இன்னமும் எந்த சட்டத்தையும் நிறைவேற்றவில்லை. எந்த விவாதமும் அங்கு நடைபெற்றதில்லை.



அமைப்பு சாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் அரசாணைச் சட்டத்தில் 122-ஆவது பிரிவை நீக்கக் கோரி, ஜனநாயகக் கட்டுமான தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில் சென்னையில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டம்.

நமது நாட்டில் உலகமயமாக்கம் நடைமுறைக்கு வந்த பின்னர், சிவப்புக்கம்பளம் விரித்து இந்திய அரசு பன்னாட்டு - அந்நிய நிறுவனங்களை வரவழைத்தது. கொஞ்ச நஞ்ச உரிமைகளையாவது தொழிலாளர்களுக்கு வழங்கிய தொழிலாளர் நலச்சட்டங்கள் திருத்தப்பட்டன. உச்சநீதிமன்றமும் தொழிலாளர்களுக்கு எதிராகத்தான் தீர்ப்பு தந்தது.

உச்சநீதிமன்றம் 2001-ஆம் ஆண்டு ''கோல் இந்தியா'' (நிலக்கரி நிறுவனம்) வழக்கையொட்டி வழங்கிய தீர்ப்பில் ''கான்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தர வேலையில் அமர்த்தலாம். நிரந்தர வேலை கேட்கும் உரிமை கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு இல்லை'' எனச் சொல்லி விட்டது. என்வே நீதிமன்றத்தின் மூலமும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெறவோ பாதுகாக்கவோ முடியாது.

ஆறாண்டு கால பா.ஜ.க. கூட்டணி அரசு, தனது ஆட்சி முடியும் தருவாயில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக மருத்துவக் காப்பீடு, ஓய்வூதியம் போன்றவற்றை அறிமுகப்படுத்தியது. காங்கிரசு கூட்டணி அரசும் தனது பங்கிற்கு கடந்த டிசம்பர் 17-ஆம் நாள் அமைப்பு சாரா தொழிலாளருக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் சட்டம் ஒன்றை விவாதம் ஏதுமின்றி நிறைவேற்றியுள்ளது. வரும் தேர்தலில் இதனைச்சொல்லி ஓட்டுப் பொறுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தில், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான தேசிய கமிசன் ஏற்கெனவே பரிந்துரைத்தவை எவையுமே இடம் பெறவில்லை. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் முன்னர், தொழிலாளர் நலனுக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு இச்சட்டம் போனபோது, சில திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன. மத்திய அமைச்சரவைக்கு மூன்று முறை அப்பரிந்துரைகள் மீண்டும் மீண்டும் அனுப்பப்பட்ட பின்னர்தான் சட்டத்தில் அவை சேர்க்கப்பட்டன.

இச்சட்டப்படி 6 கோடி தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவக் காப்பீடு, ஓய்வூதியம் உட்பட 10 சமூகநலத் திட்டங்களின் பலன்கள் கிட்டும். மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் 34 பேர் கொண்ட தேசிய ஆலோசனை வாரியம் ஒன்று அமைக்கப்படும். இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், தேவையான தகவல்களை அளிக்கவும், தொழிலாளர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கவும் இந்தவாரியம் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு மாநில் அரசும் இதே போன்ற வாரியம் ஒன்றைத் தங்கள் மாநிலங்களில் நிறுவி, மாற்று வழிமுறைகள் மூலம் தொழிலாளர் நலத்திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் இச்சட்டம் கூறுகிறது.

இச்சட்டத்தை நிறைவேற்றிவிட்டதால் 43 கோடி மக்களுக்கும் விடிவுகாலம் நெருங்கிவிட்டதாக யாரும் மனப்பால் குடிக்க முடியாது. ஏனென்றால், இச்சட்டமே எல்லோருக்கும் பளிச்சென்று தெரியுமாறு மாபெரும் ஓட்டைகளுடன்தான் உள்ளது. இச்சட்டம் சமூகப் பாதுகாப்பிற்கு எவ்விதக் குறைந்தபட்ச உரிமையையும், காலவரையறையையும் தரவில்லை. சமூகப் பாதுகாப்பும், திட்டநடைமுறைகளுடன் இணைக்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, நலத்திட்டங்களுக்கான நிதி ஆதாரத்தைப் பற்றி இச்சட்டம் மூச்சே காட்டவில்லை. இதற்கான நிதி ஆதாரங்களாக செஸ் வரி விதிப்பு, அரசின் நிதி நல்கை மற்றும் கடனுதவி மூலமும், தொழில் நிறுவனங்களும் தொழிலாளர்களும் மாதந்தோறும் தரும் சந்தாத் தொகை (சேம நல நிதி - பி.எஃப்.போல) மூலமும் திரட்டிக் கொள்ளுமாறு நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்திருந்தது. ஆனால் சட்டத்தில் இது இடம் பெறவில்லை. மேலும் தொழிலாளர் நலத் திட்டங்களைக் கண்காணிக்கும் அமைப்புக்கு சட்டப்பூர்வ அதிகாரம் எதுவுமே இல்லை.

இந்தக் காகித சட்டத்தை வைத்துக் கொண்டு அமைப்புசாரா தொழிலாளர்களின் நிலைமையில் கடுகளவேனும் மாற்றத்தை ஏற்படுத்தி விடமுடியாது. சட்டத்தையோ, நீதிமன்றத்தையோ நம்பிப்பயன் ஏதும் இல்லை என்பது மிகத்.தெளிவாகத் தெரிந்த பின்னரும் தொழிலாளர்கள் என்ன செய்யலாம்? நமது உரிமைகளுக்காக பெரும் திரளாக அணிதிரள்வது, ஆலை உற்பத்தியை முடக்குவது, ஆலை வாயிலை முற்றுகையிடுவது, தெருவில் சண்டை போடுவது, அடித்தால் திருப்பி அடிப்பது, நிர்வாக அதிகாரிகள் மீது மலத்தைக் கரைத்துக் கொட்டுவது என்று போராட்டத்தை கூர்மைபடுத்துவதோடு, போராட்டக் களத்திலேயே பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண வேண்டும். அத்தகைய தீர்வு நிலைபெறுவதற்குத் தொழிலாளர்களை அரசியல்படுத்தி, அதிகாரத்தை பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாற்றுவதுதான் நிரந்தரத் தீர்வாக அமையும்.

***(வழக்குரைஞர் சி.பாலன், சென்னையில் ஜன. 25, 2009 அன்று, பு.ஜ.தொ.மு. நடத்திய முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில் ஆற்றிய உரையை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.)***


படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க ஏகாதிபத்தியம் காகிதப் புலிதான்!

## கொல்லைப்புற வழியாக சோமாலியாவை ஆக்கிரமிக்க அமெரிக்கா நடத்திய போர் படுதோல்வியில் முடிந்துவிட்டது.

**சோ**மாலியா என்றவுடனேயே நமது நினைவுக்கு வருவது, அந்நாட்டைப் பிடித்தாட்டும் பஞ்சமும், பட்டினியால் எலும்பும் தோலுமாகிப் போன அந்நாட்டு மக்களும்தான். இப்படிபட்ட பஞ்சப் பரதேசியான நாடும் அதன் மக்களும், தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்கா நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போருக்கு ஒரு மரண அடி கொடுத்திருப்பது உங்களுக்குத் தெரியுமா?

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா நடத்தி வரும் ''தீவிரவாதத்துக்கு எதிரான போர்'' வெளியே தெரிந்த அளவிற்கு, சோமாலியா நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து வந்த போர் பொதுமக்களின் கவனத்துக்கு வரவில்லை. இதற்குக் காரணம், அமெரிக்கா, ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் தனது படைகளை இறக்கி, அந்நாடுகளை ஆக்கிரமித்திருப்பதைப் போல் சோமாலியாவில் ஆக்கிரமிப்புப் போரை நேரடியாக நடத்தவில்லை. மாறாக, ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள தனது பிராந்திய அடியாளான எத்தியோப்பியப் படைகளின் மூலம் ஆக்கிரமிப்புப் போரை நடத்தியது. இதன் காரணமாக பெரும்பாலான முதலாளித்துவப் பத்திரிகைகளால் சோமாலியாவில் நடந்து வந்த இந்தப் போர், சோமாலியாவுக்கும் எத்தியோப்பியாவுக்கும் நடக்கும் அண்டை நாட்டுச் சண்டையாகப் புறக்கணிக்கப்பட்டது.


அமெரிக்கா, ஏழை நாடான சோமாலியா மீது தொடுத்த இந்த ஆக்கிரமிப்புப் போரை, தீவிரவாதத்துக்கு எதிரான போரின் மூன்றாவது போர் முனையாகக் குறிப்பிட்டு வந்தது. சோமாலியா மக்கள் கடுமையான பஞ்சத்துக்கு இடையிலும் போராடி, எத்தியோப்பியப் படைகளைத் தோற்கடித்து, இந்த மூன்றாவது போர் முனையில் அமெரிக்காவின் மூக்கை அறுத்திருக்கிறார்கள்.

•••

**சோ**மாலியா, ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக்கு முனையில் இந்தியப் பெருங்கடலையொட்டி அமைந்துள்ளது. மேலும், சூயஸ் கால்வாயின் தென்பகுதி, ஏடன் வளைகுடாவையொட்டி சோமாலியா அமைந்திருப்பதாலும்; உலகில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெயில் ஏறத்தாழ 30 சதவீதம் இக்கடல் பகுதி வழியாகத்தான் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுவதாலும் 'பனிப்போர்' காலந்தொட்டே சோமாலியாவைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர மேல்நிலை வல்லரசுகள் முயன்று வந்தன.

அமெரிக்காவுக்கும் சோவியத் சமூக ஏகாதிபத்திய ரசியாவிற்கும் இடையே பனிப்போர் நடந்து வந்த காலத்தில், அவை, சோமாலியாவையும் அதன் அண்டை நாடான எத்தியோப்பியாவையும் மோதவிட்டுப் பதிலிப் போரை நடத்தின. ''ஓகாடேன் போர்'' என்றழைக்கப்பட்ட இப்பதிலிப் போரில், சோமாலியாவை அமெரிக்காவும், எத்தியோப்பியாவை ரசியாவும் ஆதரித்தன. இப்போரில் சோமாலியா மிகவும் அவமானகரமான தோல்வியைச் சந்தித்தது.

இப்போரினையடுத்து, சோமாலியாவில் வசித்துவந்த இனக்குழுக்கள், அமெரிக்கா தயவுடன் அந்நாட்டை ஆண்டு வந்த அதிபர் சியாத் பார்ரே-க்கு எதிராகக் கலகம் செய்தன. இந்த உள்நாட்டுக் கலகத்தால் அதிபர் சியாத் பார்ரே




1990-களின் ஆரம்பத்தில் பதவியை விட்டு ஓடினான். அதிகாரத்தை யார் கைப்பற்றிக் கொள்வது என்ற போட்டி ஏற்பட்டதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அமெரிக்கா, ஐ.நா.வின் மூலம் உதவி-நிவாரணம் என்ற பெயரில், ஏறத்தாழ 30,000 துருப்புகளை சோமாலியாவில் கொண்டு வந்து இறக்கியது. எனினும், சோமாலிய மக்களின் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களின் காரணமாக, அமெரிக்கா 1995-இல் தனது படைகளை சோமாலியாவில் இருந்து விலக்கிக்கொண்டது.

அதன்பிறகு சோமாலியா, ஏறத்தாழ பத்து ஆண்டுகள், தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் எனும் வகையில், யுத்தப் பிரபுக்களின் கைகளில் சிக்கிக் கொண்டது. யுத்தப் பிரபுக்களுக்கு இடையே அதிகாரத்துக்கு நடைபெற்று வந்த நாய்ச்சண்டை, மற்றும் பஞ்சம், பட்டினிக்குள் சிக்கிக் கொண்டு, சோமாலியா சிதைந்து சின்னாபின்னமானது.

இந்நிலையில், சோமாலியாவைச் சேர்ந்த மிதவாத முசுலீம் அமைப்புகளும், தேசியவாத அமைப்புகளும் இணைந்து, ''இசுலாமிய ஐக்கியக் கவுன்சில்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி, பதவிவெறி கொண்ட யுத்தப் பிரபுக்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கின. இவ்வமைப்பு, 2006-ஆம் ஆண்டு, யுத்தபிரபுக்களை முற்றிலுமாகத் தோற்கடித்து, சோமாலியா நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

இவ்வமைப்பின் கீழ் சிதறுண்டு கிடந்த நாடு ஒன்றுபடுத்தப்பட்டு, மைய அரசு ஏற்படுத்தப்பட்டது; விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்ற பொருளாதாரக் கண்ணிகளும், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற மக்கள் நலன் சார்ந்த உறுப்புகளும் தொடர்ந்து இயங்கும் வண்ணம் சோமாலியா புனரமைக்கப்பட்டது; ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே குறைந்த கட்டணத்தில் கைபேசி சேவை அளிக்கும் வண்ணம் சோமாலியாவில் ''பொருளாதார வளர்ச்சியும்'' ஏற்படத் தொடங்கியது. இதனைக் கண்டு



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கக் கழுகுக்கும் மூக்கு வியர்க்கத் தொடங்கியது.

சோமாலியா மீது படையெடுக்க வேண்டும் என்றால், உலக நாடுகளின் முன் ஒரு காரணத்தை முன்வைக்க வேண்டும். அதற்காக ஒரு புளுகு மூட்டையைத் தயாரித்தது, அமெரிக்கா. சோமாலியாவை ஆளும் இசுலாமிய ஐக்கியக் கவுன்சில், அல்-காயிதாவுடன் தொடர்புடைய அமைப்பு என்றும்; 1998 -ஆம் ஆண்டு நைரோபியிலும், தர்-இஸ்-சலாமிலும் அமெரிக்கத் தூதரகங்களுக்குக் குண்டு வைத்த அல்-காயிதா பயங்கரவாதிகளுக்கு, இசுலாமிய ஐக்கிய கவுன்சில் சோமாலியாவில் அடைக்கலம் கொடுத்திருப்பதாக ஒரு கோயபல்சு பிரச்சாரத்தை நடத்தத் தொடங்கியது, அமெரிக்க அரசு.



எத்தியோப்பிய படையை விரட்டி விட்டுப் புது அரசாங்கம் பதவியேற்றதைத் தலைநகர் மொகாதிஷுவில் கொண்டாடும் சோமாலிய மக்கள்.

'பனிப்போர்' காலத்தில், சோவியத் ரசியாவின் அடியாளாக இருந்த எத்தியோப்பியா, 2000-இல், ஆப்பிரிக்கக் கண்டத்தில் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியாக மாறியது. சோமாலியாவுக்கும், எத்தியோப்பியாவுக்கும் இடையே பல பத்தாண்டுகளாக இருந்துவரும் பகையைத் தனது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டது, அமெரிக்கா. இசுலாமிய ஐக்கியக் கவுன்சிலால் தோற்கடிக்கப்பட்ட சோமாலியாவின் யுத்தப் பிரபுக்களின் தலைமையில் ஒரு பொம்மை அரசை நிறுவும் திட்டமும் அமெரிக்காவில் தயாரானது.

இசுலாமிய ஐக்கியக் கவுன்சில் யுத்தப் பிரபுக்களோடு அதிகாரப் பகிர்வு செய்து கொள்ள முன் வந்து போரைத் தவிர்க்க முயன்றது. ஆனால், அமெரிக்காவோ, எத்தியோப்பியா எல்லையோரம் தலைமறைவாகத் திரிந்த சோமாலியாவின் யுத்தப் பிரபுக்களுக்கு சி.ஐ.ஏ.மூலம் இரகசியமான வழிகளில் ஆயுத உதவி அளித்து, போர் ஏற்பாடுகளை முடுக்கி விட்டது. அமெரிக்காவின் மத்தியப் படையணியின் தளபதி ஜான் அபிஸெய்த் எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவுக்கு நவம்பர் 2006-இல் "விஜயம்" செய்தார். அதற்கு அடுத்த மாதம் எத்தியோப்பியப் படைகள், சோமாலியாவுக்குள் நுழைந்து, அமெரிக்காவின் ஆசையை நிறைவேற்றி வைத்தன.

"அல்-காயிதா பயங்கரவாதிகளை அழித்தொழிப்பது" என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த ஆக்கிரமிப்புப் போரினால், கடந்த இரண்டே ஆண்டுகளுக்குள் 16,000-க்கும் மேற்பட்ட சோமாலிய மக்கள் மாண்டு போனார்கள். ஒரு கட்டத்தில், இராணுவத் தாக்குதல்களால் அன்றாடம் சாகும் பொதுமக்களின் எண்ணிக்கை, ஈராக்கைவிட சோமாலியாவில் அதிகமானது.

எத்தியோப்பியப் படைகளுக்குத் துணையாக, சோமாலியாவையொட்டிய சர்வதேசக் கடல் பரப்பில் இருந்து அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், ஆடு மேய்க்கும் அப்பாவிகள் 130 பேர் கொல்லப்பட்டனர். அடேன் ஹஷி ஆய்ரோ என்ற "பயங்கரவாதியை"க் கொல்ல அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலிலும் பல சாமானிய மக்கள் கொல்லப்பட்டனர்.

**ஆப்பிரிக்காவின் எண்ணெய் வளத்தையும்; வைர, யுரேனிய மூலவளங்களையும் கைப்பற்றிக் கொள்வதுதான், அமெரிக்க மேலாதிக்கத்தின் நோக்கம்.**

எத்தியோப்பிய இராணுவச் சிப்பாய்கள், சோமாலியப் பெண்களைக் கும்பல் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்துவதும்; அப்பாவி மக்களைத் தொண்டையை அறுத்துக் கொலை செய்வதும் அன்றாட நிகழ்வுகளாகிப் போனது. இப்பயங்கரவாதப் படுகொலைகள் ஒருபுறமிருக்க, தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களால், சோமாலியத் தலைநகர் மொகாதிஷு ஆள் அரவமற்ற சுடுகாடாகிப் போனது. தட்டுத்தடுமாறி எழுந்து கொண்டிருந்த சோமாலியப் பொருளாதாரம், மீண்டும் செயற்கையான பஞ்சத்தை சோமாலியாவின் மீது திணித்தது. இராணுவத் தாக்குதல்கள் மற்றும் பஞ்சம், பட்டினியில் இருந்து தப்பிக்க ஏறத்தாழ 25 இலட்சம் சோமாலியர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக அலையத் தொடங்கினர்.

பஞ்சத்தைக் காட்டி, நிவாரண உதவி என்ற பெயரில் ஐ.நா. மூக்கை நுழைத்தது. ஐ.நா.வின் இந்த "உதவியை" பட்டினிக்குள் தள்ளப்பட்ட சோமாலிய மக்களுக்குக் கிடைக்காமல், அமெரிக்காவால் கொம்பு சீவிவிடப்பட்ட யுத்தப் பிரபுக்கள் தட்டிப் பறித்துக் கொண்டனர். மேலும், சோமாலியாவில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் ஐ.நா. ஆதரவு பெற்ற அமைதிப் படையும் இறக்கிவிடப்பட்டது. அமைதிப் படையோ, அமெரிக்கா திணித்த பொம்மை அரசைக் காக்கும் பணியைத் திறம்படச் செய்தது. சோமாலியா கடற்பரப்பில் நடக்கும் கடற்கொள்ளையைத் தடுப்பது என்ற பெயரில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் தங்கள் கடற்படையை சோமாலியா கடற்பரப்பில் நிறுத்திக் கொள்ளும் அனுமதியும் ஐ.நா. வால் வழங்கப்பட்டது, இப்படியாக, ஐ.நா.வின் ஆசியோடு, சோமாலியாவை அடிமைப்படுத்தும் அமெரிக்காவின் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து வந்தது.


படிப்பகம்

www.padippakam.com

எனினும், அமெரிக்காவின் ஆதிக்கக் கனவு முழுமையாகக் கைகூடவில்லை. பட்டினி போட்டும், ஏவுகணைத் தாக்குதல்களால் பயமுறுத்தியும் சோமாலியாவை அடிமைப்படுத்திவிடலாம் என்ற அமெரிக்காவின் திட்டத்தை, சோமாலியா மக்களின் ஆயுதப் போராட்டம் முறியடித்துவிட்டது. ஜார்ஜ் புஷ், அமெரிக்க அதிபர் பதவியில் இருந்து இறங்கிய அதே சமயத்தில், எத்தியோப்பியப் படைகள் சோமாலியாவில் இருந்து புறமுதுகிட்டு ஓடிப் போயின.

ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற அமெரிக்காவின் மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதிதான் சோமாலியா ஆக்கிரமிப்பு. எத்தியோப்பியப் படைகள் சோமாலியாவை விட்டு விலகிவிட்டாலும், அமெரிக்கா சி.ஐ.ஏ. மூலம் சோமாலியா யுத்தப் பிரபுக்களுக்கு இரகசியமாக ஆயுத உதவி செய்வதை நிறுத்தவில்லை என முதலாளித்துவப் பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்றன.

சோமாலியா, சூடான், எரிட்ரீயா ஆகிய நாடுகளைக் கண்காணிக்க ஆப்பிரிக்காவின் கிழக்கு முனையில் ஏற்கெனவே 1,800 அமெரிக்கச் சிப்பாய்களோடு இராணுவத்தளம் அமைத்து இயக்கி வரும் அமெரிக்கா, தற்பொழுது ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதிலும் தனது ஆதிக்கத்தை விரிவாக்க, ''ஆப்ரிகாம்'' என்ற பெயரில் புதிய படை அணியொன்றையே உருவாக்கியிருக்கிறது. ஆப்பிரிக்காவின் எண்ணெய் வளத்தையும்; வைரம், யுரேனியம் போன்ற மூல வளங்களையும் கைப்பற்றிக் கொள்வதுதான், அமெரிக்க மேலாதிக்கத்தின் நோக்கம்.

சோமாலியாவில் இருந்து எத்தியோப்பியப் படைகள் விலகிய பிறகு, அந்நாட்டில் மீண்டும் இசுலாமிய ஐக்கியக் கவுன்சிலின் ஆட்சி அமைந்துள்ளது. எனினும், அமெரிக்காவின் இராணுவ முற்றுகையை எதிர்த்து ஆயுதந்தாங்கிப் போராடிய இசுலாமிய ஐக்கியக் கவுன்சிலின் ஆயுதப்படையான அல்-ஷாபாபில் முசுலீம் தீவிரவாதிகளின் செல்வாக்கு ஓங்கிவிட்டதாகவும், அவ்வமைப்பு சோமாலியாவில் தனக்குச் செல்வாக்கு உள்ள பகுதிகளில் ஷாரியத் சட்டத்தை அமல்படுத்திவருவதாகவும் முதலாளித்துவப் பத்திரிக்கைகள் புலம்புகின்றன. இப்போக்குக் கவலைக்குரிய விசயம்தான் என்றாலும், வினை விதைத்து விட்டு தினை அறுக்க அமெரிக்க ஆதரவாளர்கள் ஆசைப்படலாமா?

• ரஹீம்

## இந்துக் கலாச்சாரம்—''பப்'' கலாச்சாரம்

# இந்தியப் பெண்களைக் கவ்வும் இரட்டை அபாயம்!

அயோத்தியை ஆண்ட ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி, மதியம் வரை மத ஆச்சாரங்களில் மூழ்கி விட்டு, அந்தி சாய்ந்த பிறகு அழகிகளுடன் கூத்தடித்து மதுவில் மூழ்குவான் என்றும், தான் குடிப்பதுடன் இல்லாமல் சீதைக்கும் ஊற்றிக் கொடுத்து களியாட்டம் போடுவான் என்றும் குறிப்பிடுகிறது வால்மீகி இராமாயணம். இவ்வாறு, குடித்துக் கூத்தடிக்கும் ''பப்'' கலாச்சாரத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த ஸ்ரீமான் ராமனின் நாமகரணத்தையே தனது திருப்பெயராக சூட்டிக்கொண்ட அமைப்புதான் கருநாடக மாநிலத்தை சேர்ந்த ''ஸ்ரீராமசேனை''. இவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் அண்மையில் மங்களூரில் ஒரு கேளிக்கை மதுவிடுதிக்குள் (பப்) நுழைந்து அங்கிருந்த பெண்களைக் கடுமையாகத் தாக்கி, அவர்களை மானபங்கப்படுத்தினர்.

இந்திய கலாச்சாரத்தையும், 'இந்து'ப் பெண்களையும் மேற்கத்திய கலாச்சார சீரழிவிலிருந்து காப்பதற்காகவே அவதாரமெடுத்துள்ளதாக சொல்லுகிறான், ஸ்ரீராம சேனையின் தலைவன் பிரமோத் முத்தலிக். ''இந்துப் பெண்களை கலாசார முன்னேற்றம் என்ற பெயரில் சீரழிக்கும் அயல்நாட்டு அரக்கனிடமிருந்து காக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்'' என்று கூறும் இவர்கள், அயல்நாட்டு அரக்கனிடமிருந்து பெண்களை காப்பதெல்லாம் இருக்கட்டும்; உள்ளூர் சாமியார்களிடமிருந்தும், சங்கராச்சாரிகளிடமிருந்தும் பெண்களை யார் காப்பாற்றுவது?

கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் எனக் காட்டுக் கூச்சல் போடும் சங்கப் பரிவாரங்களின் 'நல்லொழுக்க' நடவடிக்கைகளைப் பட்டியலிட்டால் கூவம் கூடக் காத தூரம் ஓடிவிடும்.

இளம்பெண்களுக்கு சினிமா ஆசை காட்டி, பாலியல் இச்சைக்கு பயன்படுத்திக் கொண்டதுடன் விபச்சாரமும் செய்ய வைத்து மாட்டிக் கொண்ட பிருதிவிராஜ் சவான், சிவசேனாவின் திரைத்துறை அணியின் தளபதி. உட்கட்சிப் பூசலில் கேவலமாக நாறிப்போன நீலப்படப் புகழ் சஞ்சய் ஜோஷி, பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர். காசுக்காக அடுத்தவன் மனைவியைத் தன் மனைவி எனக் கூறி வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல முயன்று மாட்டிக்கொண்ட பாபுபாய் கத்தாரா, பா.ஜ.க.வின் எம்.பி. கிலோ கணக்கில் போதைப் பொருளோடு பிடிபட்ட ராகுல் மகாஜன், மாண்டுபோன பா.ஜ.க. தலைவர் பிரமோத் மகாஜனின் வாரிசு. வருடத்திற்கு இரண்டு தரம் செக்ஸ் சர்வே போடும் ''இந்தியாடுடே'' ஆர்.எஸ்.எஸ்.சின் குடும்பப் பத்திரிகை. காமக்களியாட்டம் நடத்தும் கொலைகார ஜெயேந்திரன்தான் இவர்களின் லோக குரு. இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இந்த 'நல்லொழுக்க' சீலர்கள்தான் பெண்களுக்கு 'ஒழுக்கம்' பற்றி வகுப்பெடுக்கிறார்கள். சாராய விடுதிக்குப் போய் இந்துப் பெண்களின் மானம் காக்க முயன்றவர்கள், அனுராதா ரமணன் முதல் ஸ்ரீரங்கம் உஷா வரை காமகோடி சங்கராச்சாரியின் மன்மதபாணத்துக்கு இரையானபோது, அவற்றைக் 'கிருஷ்ண லீலை' எனக் கருதிக் கன்னத்தில் போட்டுக் கொண்டார்களா என்ன?

சென்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது 'தேசிய நாயகன்' ஸ்ரீராமனைக் கைவிட்டு, 'ஆக்ஷன் நாயகி' விஜயசாந்தியையும், 'கனவுக் கன்னி' சௌந்தர்யா


**இந்துவெறி பாசிச ஸ்ரீராம் சேனையின் நிறுவனர் பிரமோத் முத்தலிக்.**





படிப்பகம்

www.padippakam.com



**கர்நாடகா மாநிலம் - மங்களூரில் உள்ள அம்னீஷியா ''பப்''பிற்குள் நுழைந்து, தாக்குதல் நடத்தும் ஸ்ரீராம் சேனை குண்டர்கள்.**

வையும், முன்னாள் 'கவர்ச்சிப்புயல்' ஹேமமாலினியையும் நம்பிப் பிரச்சாரம் செய்து 'இந்து'க் கலாச்சாரப் பெருமையைப் பா.ஜ.க. நிலைநாட்டியது. பெண்கள் குடிப்பதற்கு எதிராக இப்போது கொம்பு சுழற்றுபவர்கள், சென்ற ஆண்டு கருநாடகச் சட்டமன்றத் தேர்தலில், எல்லோருக்கும் பட்டை சாராயம் வழங்கியதை எந்தக் கலாச்சாரத்தில் சேர்ப்பது? இவர்கள் கொடுத்த கள்ளச்சாராயத்தைக் குடித்துச் செத்துப்போன 400பேர்களில் பெண்களும் இருந்தார்களே!

இவர்களுக்குக் குடிப்பதுதான் பிரச்சினை என்றால் கருநாடகத்தில் இருக்கும் எல்லா சாராயக் கடைகளையும் மூடக்கோரி போராடலாம். ஆனால், சாராய முதலாளி மல்லையாவிடம் அடுத்த தேர்தலுக்குக் கைநீட்ட முடியாதே! நட்சத்திர விடுதி ''பார்''களில், எப்படிச் சாராயம் ஊற்றித் தருவது எனப் பெண்களுக்குப் பட்டயப் படிப்பாகச் சொல்லித் தருவதையாவது எதிர்க்கலாம் என்றால், அந்த நட்சத்திர விடுதிகளில் பாதி இவர்களது கட்சிக்காரர்களுடையதாயிற்றே! சரி, பெண்களைக் குடிக்கத் தூண்டிய கேளிக்கை விடுதியையாவது தாக்கினார்களா என்றால், அதுவும் இல்லை. மாறாக, அங்கே இருந்த பெண்களை மட்டும் குறிவைத்துத் தாக்கியிருக்கின்றனர்.

கேளிக்கைவிடுதியில் வீரம் காட்டிவிட்டு அடுத்ததாகக் காதலர் தினத்தன்று, வெளியே சுற்றும் காதல் ஜோடிகளுக்குக் கட்டாயத் திருமணம் செய்துவைப்பதாகப் பேட்டியெல்லாம் கொடுத்தனர், இப்பார்ப்பன பாசிஸ்டுகள். சங்கிலியோடு தெரு நாய்களைப் பிடிக்க வருபவர்களைப்போல, சில இடங்களில் கையில் மஞ்சள் கயிற்றுடன் இவர்கள் திரிந்தனர். ஆனால், இந்த வேலையை இவர்கள் பத்தாண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்திருந்தால் உமாபாரதி பா.ஜ.க.வை விட்டு போயிருக்கவே மாட்டார். அவர் விரட்டி விரட்டிக் காதலித்த கோவிந்தாச்சார்யாவையே உமாபாரதிக்கு கட்டி வைத்திருந்திருந்தால், கட்சிப் பிளவையாவது தடுத்திருந்திருக்கலாம்.

எல்லா மனித உணர்வுகளையும் விற்பனைச் சரக்காக்கி வணிகமயமாக்கும் முதலாளித்துவம்தான், காதலர்களின் உணர்வுகளை சந்தைப்படுத்திக் காதலர் தினத்தை மக்களிடம் பிரபலப்படுத்தி வருகிறது. வணிக நோக்கம் கொண்ட காதலர் தினத்தைப் பரப்பும் வணிக நிறுவனங்கள்-ஊடகங்களைத் தட்டிக் கேட்காமல், இந்த நுகர்வு கலாச்சாரத்தின் பலிகடாக்களான பெண்களைக் கோழைத்தனமாகத் தாக்குகிறது, ராம்சேனா.

மேற்கத்திய கழிசடை கலாச்சாரத்தைப் பயங்கரமாக எதிர்ப்பது போல பம்மாத்துக் காட்டும் இவர்கள், அதனை உருவாக்கும் தாராளமயப் பொருளாதாரத்தை, தலையில் வைத்து தாங்குகிறார்கள். அந்நிய மூலதனம் வேண்டும்; அடிமைச் சேவகம் வேண்டும்; ஆனால் அது பரப்பும் கலாச்சாரம்-மட்டும் வேண்டாம் என்றால் எப்படி? பேய்க்கு வாக்கப்பட்டுவிட்டுப் பிணம் மட்டும் தின்ன மாட்டேனென்றால் எப்படி?

கேளிக்கை விடுதி மீது இக்கும்பலின் தாக்குதல் மற்றும் காதலர் தினத்துக்கு மிரட்டல் விடப்பட்டது போன்றவை இந்தியா முழுதும் அதிர்ச்சி அலையை உருவாக்கியது. உடனடியாக ''ராம் சேனாவுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை'' என்று பா.ஜ.க. பசப்பியது. எதைச் செய்தாவது தனது திட்டங்களை நடைமுறைப்படுத்த, பல்வேறு பினாமி அமைப்புகளின் பெயரில் செயல்படுவது ஆர்.எஸ்.எஸ்.சின் வழக்கமான தந்திரமாகும். மற்ற மாநிலங்களில் இந்து முன்னணி, விவேகானந்த கேந்திரா மற்றும் அபினவ் பாரத் போன்ற பினாமி அமைப்புகளை உருவாக்கிச் செயல்படுவதைப் போல, கர்நாடகத்திற்காக இவர்கள் உருவாக்கி இருப்பதுதான் ராம் சேனா. ஆர்.எஸ்.எஸ்.சின் முன்னாள் முழு நேர ஊழியரான முத்தலிக் மீதிருந்த 50-க்கும் அதிகமான கிரிமினல் வழக்குகளை, முதல்வராகப் பதவியேற்றவுடன் எடியூரப்பா திரும்ப பெற்றதில் இருந்தே இது தெளிவாகத் தெரிகிறது.

**இந்து பயங்கரவாதக் கும்பல் தாராளமயத்தை ஆதரித்துக் கொண்டே அது உருவாக்கும் கலாச்சாரச் சீர்கேட்டை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளுகிறது. மாறாக, தாராளவாதக் கும்பலோ அந்த சீர்கேட்டையே பெண்ணுரிமையாக முன்னிறுத்துகிறது.**

www.padippakam.com



ஒரிசா மாநிலம் ரூர்கேலாவில் காதலர் தினத்தைக் கொண்டாடச் சென்ற காதல் ஜோடியை வழிமறித்து மிரட்டி, காதலனின் கையில் ராக்கி கயிறு கட்ட வைக்கும் பஜ்ரங் தள் குண்டர்கள். (இடது) ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் காதலர்களைத் தடுத்து நிறுத்தித் தோப்புக் கரணம் போட வைக்கும் ஸ்ரீராம் சேனை கும்பல்.

உலகமய பண்பாட்டின் விளைவாக இந்தியாவெங்கும் ''பப்''கள் கொடி கட்டி பறக்கும் போது, கர்நாடகத்திலிருக்கும் ''பப்''பில் மட்டும் காவிக் கும்பல் புகுந்து தாக்க வேண்டிய அவசியமென்ன? இம்மாநிலத்தில்தான் இந்தியாவின் சிலிக்கான் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் பெங்களூருவும், உலகமய கலாச்சார சீர்கேடுகள் உச்சத்தில் இருக்கும் மங்களூர் போன்ற நகரங்களும் உள்ளன. இந்த கலாச்சார மாற்றங்களை நடுத்தர வர்க்கத்தால் சீரணித்துக் கொள்ள முடிவதில்லை. இந்த வர்க்கத்தின் கலாச்சார தடுமாற்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை நிலைநிறுத்திக் கொள்வதே இந்துத்துவ பயங்கரவாதிகளின் நோக்கம்.

பார்ப்பன பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அதையே தேசிய பெருமிதமாக முன்னிறுத்தி குஜராத்தில் வெற்றி பெற்றார்கள். ஒரிசாவில் கிறித்துவ தலித்களுக்கும் பழங்குடியினருக்கும் இடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்திக் காலூன்றினார்கள். ஏற்கெனவே கர்நாடகா சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு ஒகேனக்கல் பிரச்சினையில் கன்னட இனவெறியைத் தூண்டிவிட்டு தம்மை முன்னிலைப்படுத்திக் கொண்டார்கள். தற்போது இனவெறியோடு ''பப்'' கலாச்சார எதிர்ப்பு கலந்த புதிய சோதனையை அங்கே நடைமுறைப் படுத்தி வருகின்றனர். இதேபோல தமிழகத்தில், தன்னெழுச்சியாகத் தோன்றியுள்ள ஈழ ஆதரவு உணர்ச்சியைக் கூட பயன்படுத்திக் கொள்ளும் புதிய சோதனையை இந்துத்துவ நரிகள் செயல்படுத்தி வருகின்றனர்.

ராம்சேனாவின் பாசிச நடவடிக்கையை எதிர்க்க கிளம்பிய மேட்டுக்குடி கும்பலொன்று இன்னொரு ஆபாசக் கூத்தை அரங்கேற்றியது. காதலர் தினத்தன்று பெண்கள் அணியும் உள்ளாடையை முத்தலிக்குக்கு அனுப்பும் போராட்டத்திற்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர். உழைக்கும் பெண்கள் வேலை செய்யும் இடத்திலும், குடும்பத்திலும், சமூகத்திலும் சந்திக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் சுரண்டலுக்கும் மத்தியில், குடிப்பதற்கும் கூத்தாடுவதற்குமான உரிமையையே பெண் விடுதலையின் உச்சம் என்று இவர்கள் பேசுவது மிகவும் ஆபத்தானது. ராம்சேனாவின் நிலப்பிரபுத்துவ பெண்ணடிமைத்தனத்தை எதிர்ப்பதாக கிளம்பியுள்ள இவர்கள், அதற்குப் பதில் ஏகாதிபத்தியத்தின் மேட்டுக்குடிப் பெண்ணடிமைத்தனத்தைப் புகட்டுகிறார்கள்.

இன்று இந்து பயங்கரவாதிகள் மதுவிடுதிகளிலும் காதலர் தினத்திலும் நடத்தியிருக்கும் வன்முறையானது, தங்களது கூத்தடிக்கும் உரிமையைப் பறிக்கிறதென்று எதிர்போராட்டம் நடத்தும் இந்த மேட்டுக்குடி தாராளமயதாசர்கள், இதே கர்நாடகாவில் முஸ்லீம், கிறித்துவ மக்கள் மீது தாக்குதல் நடத்தி அம்மக்களின் கருத்துரிமையை மட்டுமல்ல, வாழும் உரிமையைக் கூட இந்து பயங்கரவாதிகள் பறித்த போது ஒன்றுமே நடக்காதது போல மவுனமாக இருந்தனர். இன்றைக்கு தமது நுகர்வு வெறிக்கு குறுக்கே இந்துத்துவ பயங்கரவாதிகள் வருவதால் மட்டுமே தங்கள் சுதந்திரம் பறி போய் விட்டதாக ஒப்பாரி வைக்கின்றனர். இதையே ஏதோ கருத்துரிமைக்கான போராட்டம் போலவும், பெண் உரிமைக்கான புரட்சி போலவும் பிரமிப்பூட்டுகின்றனர். கர்நாடகத்தில் முஸ்லீம்கள், கிறித்துவர்கள் மீதான தாக்குதல்; ஓவியர்கள் மீதான தாக்குதல் முதலான இந்துவெறி பயங்கரவாத வெறியாட்டத்தை, கண நேரச் செய்தியாக வெளியிட்டுவிட்டு ஓய்ந்து போன ஊடகங்கள், இந்த அப்பட்டமான சுயநலம் கலந்த அற்பத்தனத்தையே முற்போக்கு ''ஜாக்கி'' கொண்டு தூக்கி நிறுத்துகின்றன.

இந்து பயங்கரவாதக் கும்பல், தனியார்மயத்தையும், தாராளமயத்தையும் ஆதரித்துக் கொண்டே அவை உருவாக்கும் கலாச்சாரச் சீர்கேட்டை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளுகிறது. மாறாக, தாராளவாதக் கும்பலோ அந்த சீர்கேட்டையே பெண்ணுரிமையாக முன்னிறுத்துகிறது. முஸ்லீம்கள், கிறித்துவர்கள் மீதான தாக்குதல்கள்; ஓவியர்கள் மீதான தாக்குதல்கள், கலாச்சார சீர்க்கேட்டை எதிர்த்து தாக்குதல், கன்னட இனவெறி — என இவையனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடைய பார்ப்பன பயங்கரவாதத்தின் வேறுபட்ட வடிவங்கள் என்பதை உணர்ந்து புரட்சிகர-ஜனநாயக சக்திகள் அணிதிரண்டு முறியடிக்க வேண்டிய தருணமிது. ஆனால், தாராளமய தாசர்களோ நாட்டைக் கவ்வியுள்ள இப்பேரபாயத்தை உணர மறுத்து, கோமாளித்தனமான எதிர்ப்போராட்டங்களால் கூத்தடித்துக் கொண்டிருக்கின்றனர்.

• முத்து



படிப்பகம்

www.padippakam.com

# சட்டிஸ்கர்:

# அரசு பயங்கரவாதிகள் நடத்திய நரவேட்டை

## அப்பாவி பழங்குடியினரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, அவர்களை நக்சல்பாரிகளாகக் காட்டும் மோசடி தொடர்கிறது.

ஆளரவமற்ற காடு; பகலிலும் கூட இருள் சூழ்ந்த சட்டிஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் பிராந்தியத்திலுள்ள அடர்ந்த காடு; பாறைகளில் தெறித்தோடும் நீரோடை, கிரீச்சிடும் பறவைகள், காற்றில் சருகுகள் எழுப்பும் சலசலப்பு; இவை தவிர வேறெந்த ஒலியுமற்ற அமைதியில் உறைந்த காடு. கடந்த ஜனவரி 8-ஆம் நாளன்று பட்டப் பகலில் அக்காட்டில் அப்பாவி பழங்குடியினர் 18 பேர் சல்வாஜூடும் என்ற போலீசு குண்டர் படையால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டின் பேரொலியால் பறவைகள் வானில் பறந்து கிரீச்சிட, அக்காடே அதிர்ந்து குலுங்கியது.

மறுநாள், சட்டிஸ்கர் மாநில உள்துறை அமைச்சரான நான்கிராம் கன்வர், ''வெற்றி! வெற்றி!!'' என்று எக்காளமிட்டுக் கொண்டு ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார். ''கொல்லப்பட்டவர்கள் அனைவரும் நக்சல்பாரி பயங்கரவாதிகள். நக்சல்பாரிகளைப் பூண்டோடு அழிக்கும் போர் தொடங்கி விட்டது. பல ஆண்டுகளாக அத்தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிக்குள் நாங்கள் நுழைந்து தாக்குதல் நடத்தி முன்னேறி வருகிறோம். இன்னும் சில நாட்களில் எங்களது நிலங்களை நாங்கள் கைப்பற்றி விடுவோம்'' என்று கொக்கரித்தார் அவர்.

இது அப்பட்டமான பொய்; கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பழங்குடி மக்கள்; அவர்களிடம் தற்காப்புக்கான ஆயுதங்களோ, காட்டு வேலைக்கான ஆயுதங்களோ கூட கிடையாது; இது சல்வாஜூடும் குண்டர் படையின் பயங்கரவாத வெறியாட்டம் என்று கொந்தளித்தார்கள் பஸ்தார் பழங்குடியின மக்கள். இப்பிராந்தியத்தில் மக்களின் நம்பிக்கையையும் செல்வாக்கையும் பெற்றுள்ள நக்சல்பாரிகள், இப்பயங்கரவாதப் படுகொலைக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள்-தட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, இப்பிராந்தியத்தின் ஐந்து மாவட்டங்களில் தொடர்ச்சியாகக் கடையடைப்புப் போராட்டத்தையும் நடத்தினர். மனித உரிமை அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

ஆனாலும், போலீசாருடன் நடந்த ஆயுத மோதலில்தான் நக்சல்பாரி பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்; இராணுவச் சீருடையுடன் துப்பாக்கி ஏந்தி போரிட்ட அவர்கள், அப்பாவி பழங்குடியினரே அல்ல என்று உறுதியாகக் கூறியது, சட்டிஸ்கர் மாநில அரசு. தண்டேவாடா மாவட்ட போலீசு தலைமைக் கண்காணிப்பாளரும் நக்சல் ஒழிப்புப் படையின் தலைவருமான ராகுல் சர்மா, ''ஒவ்வொரு முறையும் மோதலில் நக்சல்பாரி தீவிரவாதிகள் கொல்லப்படும் போதெல்லாம், இப்படித்தான் அவர்கள் போராட்டம் நடத்தி பொய்யைப் பரப்புகிறார்கள். மனித உரிமை அமைப்புகளும் சில பத்திரிகைகளும் இந்தப் பொய்யை ஊதிப் பெருக்குகின்றன. இது, நக்சல் தீவிரவாதிகளின் வழக்கமான பிரச்சார உத்தி. உண்மையில், நக்சல் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள காட்டுப் பகுதியில், சல்வாஜூடும் படையினருக்கும் ஆயுதமேந்திய நக்சல் படையினருக்குமிடையே நடந்த சண்டையில்தான் நக்சல் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் அப்பாவி பழங்குடியினரே அல்ல. நாங்கள் இப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்திய போதுதான் இந்த மோதல் நடந்தது. நக்சல்பாரிகளுக்கு எதிரான எங்கள் போர் ஓயாது. இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் இப்பிராந்தியத்திலிருந்து அவர்களை முற்றாக அழித்தொழிப்போம்!'' என்று சீறினார்.

சல்வாஜூடும் என்பது அரசும் பெருமுதலாளிகளும் சேர்ந்து கட்டியமைத்துள்ள போலீசின் குண்டர் படை. நக்சல்பாரிகளோ நீண்ட காலமாக இப்பகுதியில் பழங்குடியினரின் வாழ்வுரிமைக்காகப் போராடி வரும் புரட்சிப் படை. கனிம வளமிக்க இப்பிராந்தியத்தை தரகுப் பெருமுதலாளிகளின் சூறையாடலுக்குத் தாரை வார்த்து, பழங்குடியினரை அவர்களது சொந்த மண்ணிலிருந்தே வெளியேற்றத் துடிக்கும் மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் போராடி வருபவர்கள்தான் நக்சல்பாரிகள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

நக்சல்பாரிகள் மட்டுமின்றி, அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் மனித உரிமை இயக்கத்தினரும் அம்மாநிலத்தில் சிறையிடப்பட்டு வதைக்கப்படுகின்றனர்.இப்பிராந்தியமோ, சல்வாஜூடும் குண்டர் படையின் தாக்குதலும் அதற்கெதிராக நக்சல்பாரிகளின் தாக்குதலுமாக அடிக்கடி ஆயுத மோதல்கள் நடக்கும் பகுதி. செய்தி சேகரிக்க இப்பகுதிக்குச் செல்வது, தமது உயிருக்கு ஆபத்தானது என்பதால் பத்திரிகையாளர்களும் இக்காட்டுப் பகுதிக்குள் செல்வதில்லை.

இந்நிலையில், கடந்த ஜனவரி 8-ஆம் தேதியன்று அங்கு நடந்தது என்ன? மோதலில் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி பழங்குடியினரா, அல்லது நக்சல்பாரி தீவிரவாதிகளா? போலீசும் அரசும் கூறுவது உண்மையா, அல்லது நக்சல்பாரிகளும் மனித உரிமை இயக்கத்தினரும் கூறுவது உண்மையா?

•••

**நக்சலைட்டுத் தலைவியாக போலீசாரால் சித்தரிக்கப்பட்டு போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட சீதக்கா.**





படிப்பகம்

www.padippakam.com

"ஜனவரி 8-ஆம் நாள், காலை 9 மணியளவில் ஏறத்தாழ 150-200 பேர் கொண்ட இராணுவச் சீருடையணிந்த சல்வாஜுடும் குண்டர் படையினர், எங்களது தண்டேஸ்புரா கிராமத்திற்கு துப்பாக்கி ஏந்தியபடி வந்தனர். ஊருக்குள் நுழைந்தவுடனேயே எங்கள் வீடுகளைத் தாக்கி, பாத்திரங்கள் - தட்டு முட்டுச் சாமான்களைத் தூக்கி வெளியே வீசியெறிந்தனர். எங்களை அடித்து இழுத்து வந்து வரிசையாக நிற்க வைத்தனர். எங்களில் 2 பெண்கள் உட்பட 9 பேரை மட்டும் அவர்கள் தெரிவு செய்து, அவர்கள் கொண்டு வந்த மூட்டைகளைத் தூக்கி வருமாறு கோரினர். எங்கள் கிராமத்திலிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவிலுள்ள போலீசு நிலையம் வரை இவற்றைச் சுமந்து வருமாறும், பின்னர் எங்களை திருப்பி அனுப்பி விடுவதாகவும் கூறினர். துப்பாக்கி முனையில் எங்களை இந்த வேலையைச் செய்யுமாறு கூறியதால், நாங்கள் 9 பேரும் அம்மூட்டைகளைச் சுமந்தபடி அவர்களுடன் நடக்கத் தொடங்கினோம்.



போலி மோதலின் பொழுது தப்பியோடி உயிர் பிழைத்தவர்கள், கொலை நடந்த இடத்தை அடையாளம் காட்டுகின்றனர்.

நண்பகலுக்கு முன்பாக, இக்காட்டுப் பகுதியிலுள்ள கொர்ருஸ்குடா என்ற கிராமத்தை நாங்கள் வந்தடைந்தோம். இங்கு ஒரு பெண் உட்பட 9 பேரை சல்வாஜுடும் படையினர் இழுத்து வந்து, அவர்களது மூட்டைகளைச் சுமந்து வரச் செய்தனர். மாலை 3 மணியளவில் நாங்கள் சிங்காராம் கிராமத்துக்கு வந்து சேர்ந்தோம். இங்கு சீதக்கா என்ற பெண் உள்ளிட்டு மேலும் 5 பேரைப் பிடித்து இழுத்து வந்து மூட்டைகளைச் சுமந்து வரச் செய்தனர்.

அங்கிருந்து ஏறத்தாழ 3 கி.மீ. தொலைவிலுள்ள நீரோடை அருகே வந்ததும், சல்வாஜுடும் படையினர் எங்களை சிறிது நேரம் ஓய்வெடுக்குமாறு கூறினர். நாங்கள் மூட்டைகளை இறக்கி வைத்தோம். பின்னர் அவர்கள் மூட்டைகளைப் பிரித்து, அவற்றிலிருந்து இராணுவச் சீருடைகளையும் ஆயுதங்களையும் வெளியே எடுத்து, எங்களில் 7-8 பேரிடம் கொடுத்து அச்சீருடைகளை அணியச் சொன்னார்கள். ஒரு பழங்குடியின இளைஞனுக்குச் சீருடையை அணிவித்ததோடு, தோளில் குண்டுகளைக் கொண்ட வார்ப்படையை மாட்டி கையிலே துப்பாக்கியையும் கொடுத்தனர். பின்னர் எங்களை மூன்று குழுவாகப் பிரித்தனர். 15 ஆண்களைக் கொண்ட குழு ஒரு திசையிலும், 4 பெண்களைக் கொண்ட குழு மற்றொரு திசையிலும் செல்லுமாறு எங்களை வழி நடத்தினர். ஒரு பெண் உள்ளிட்ட 4 பேரைக் கொண்ட குழு நீரோடை அருகிலேயே இருக்குமாறு கூறினர்.

4 பெண்களைக் கொண்ட குழு சென்ற திசையிலிருந்து "ஐயோ! அம்மா" என்ற அலறல்; அதைத் தொடர்ந்து துப்பாக்கியின் சடசடவென குண்டு வெடிக்கும் பேரொலி. நாங்கள் அதிர்ச்சியில் விக்கித்து நின்றோம். எங்கள் குழுவை துப்பாக்கி முனையில் வழிநடத்திய சல்வாஜுடும் படையினர் அத்திசை நோக்கி விரைந்தோடினர். இதுதான் சமயம் என்று நாங்கள் சுமந்து வந்த மூட்டைகளைப் போட்டுவிட்டு காட்டுக்குள் வேறு திசையில் தப்பியோடினோம்" என்று கூறுகிறார் எம்லா ஹர்மா. இவர், ஒரு பெண் உள்ளிட்ட 4 பேர் கொண்ட குழுவாக நீரோடை அருகே இருந்தவர். அந்தக் கொடூரத்தைச் சொல்லும்போதே அவரது உடல் நடுங்குகிறது. "அந்த நான்கு பெண்களும் சல்வாஜுடும் குண்டர் படையினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்" என்று விம்முகிறார் அவர். தனது சகோதரர் வேறு ஒரு குழுவாகப் பிரிக்கப்பட்டு கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதைச் சொல்லும்போது பெருங்குரலெடுத்து ஒப்பாரி வைக்கிறார் அவர்.

15 பேர் கொண்ட குழுவாகப் பிரிக்கப்பட்ட மற்றொரு குழுவை சல்வாஜுடும் குண்டர் படையினர், ஒரு மரத்தின் அருகே வரிசையாக நிற்க வைத்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர். "அவர்கள் எங்களை வரிசையாக நிற்க வைத்து, ஒவ்வொருவராகச் சுட்டுக் கொல்லத் தொடங்கியதும், கடைசியாக நின்ற நானும் மற்ற இருவரும் பீதியில் வெறிபிடித்தாற்போலத் தப்பியோடினோம்; எங்களைத் துரத்தியபடியே துப்பாக்கியால் சுட்டனர். அதில் என்னுடன் ஓடி வந்த இருவரும் குண்டடிபட்டு மாண்டனர். நான் மட்டும் அதிர்ஷ்டவசமாகத் தப்பினேன்" என்கிறார், உயிர் தப்பிய தண்டேஸ்புரா கிராமத்தைச் சேர்ந்த மத்கம் தேவா.

வழி தெரியாமல் காட்டில் அலைந்த இவர்கள், பின்னிரவில் தங்கள் கிராமத்துக்கு வந்து இப்பயங்கரவாதப் படுகொலையைத் தெரிவித்தனர். தகவலறிந்த நக்சல்பாரிகள், மறுநாள் ஆந்திராவிலிருந்து பத்திரிகையாளர்களை அழைத்து வந்து, படுகொலையின் கோரத்தையும் அரசு பயங்கரவாத அட்டூழியத்தையும் உலகறியச் செய்தனர். அதைத் தொடர்ந்து சட்டிஸ்கரில் இயங்கி வரும் "வனவாசி சேத்னா ஆசிரமம்" எனும் தன்னார்வக் குழுவின் மனித உரிமை இயக்கச் செயல்வீரரான கோபா கன்ஜம் என்பவர், படுகொலை செய்யப்பட்ட பழங்குடியினரின் உறவினர்கள் 20 பேரை அழைத்துக் கொண்டு, காட்டு வழியே ஏறத்தாழ 70 கி.மீ. தூரம் நடந்து வந்து, பின்னர் பேருந்து மூலம் பிலாஸ்பூர் நகரை அடைந்து, அங்கு நீதிமன்றத்தில் விசாரணை கோரி மனு கொடுக்க வைத்துள்ளார்.

அதைத் தொடர்ந்து பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின. எதிர்கட்சிகளான காங்கிரசும் வலது கம்யூனிஸ்டுகளும் இப்பயங்கரவாதப் படுகொலையைக் கண்டித்து சட்டமன்றத்தில் வெளிநடப்பு செய்தன. மனிஷ் கன்ஜம் என்ற வலது கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பழங்குடியினரைத் திரட்டி மிகப் பெரிய கண்டன ஊர்வலத்தை நடத்தினார். இவையனைத்தையும் தொடர்ந்து "தெகல்கா" வார ஏட்டின் செய்தியாளர், சட்டிஸ்காரின் பஸ்தார் பிராந்திய காட்டுப் பகுதிக்குச் சென்று, உயிர் தப்பியவர்களிடமும் கொல்லப்பட்டோரின் உறவினர்களிடமும் விசாரித்து, ஆதாரங்களுடன் அரசு பயங்கரவாதக் கொடுஞ்செயலை விரிவாக அம்பலப்படுத்தியுள்ளார்.

இத்தனைக்கும் நடுவிலும் சட்டிஸ்கர் மாநில அரசும் போலீசும் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பழங்குடியினத்தைச் சேர்ந்த நக்சல்பாரி தீவிரவாதிகள்தாம் என்று கூசாமல் புளுகிக் கொண்டிருந்தன. தண்டேவாடா மாவட்ட போலீசு தலைமைக் கண்காணிப்பாளரான ராகுல் சர்மா, நக்சல்பாரி தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்



படிப்பகம்

www.padippakam.com



உயர்நீதி மன்ற உத்தரவுப்படி, சவப் பரிசோதனைக்காகத் தோண்டியெடுக்கப்படும் சடலங்கள் .

கள் என்று கடைவிரித்து பரபரப்பாக பேட்டியளித்துக் கொண்டிருந்தார். ரோந்து சுற்றிக் கொண்டிருந்த இரு சல்வாஜூடும் படையணிகளுக்கிடையே ஆயுதமேந்திய நக்சல்பாரிகள் சிக்கிக் கொண்டதால், ஒரே நேரத்தில் அவர்கள் மோதலில் கொல்லப்பட்டதாகவும், அதிருஷ்டவசமாக சல்வாஜூடும் படையின் மூவருக்கு மட்டும் காயம் ஏற்பட்டதாகவும் சினிமா கதையை விளக்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், தண்டேவாடா மாவட்ட சல்வாஜூடும் குண்டர் படைத் தளபதிகளில் ஒருவரான கிச்சி நந்தா, நக்சல்பாரிகளுடன் மோதல் நடந்தபோது எங்கள் படையில் ஒருவருக்கு மட்டும் உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது என்கிறார். போலீசு தலைமைக் கண்காணிப்பாளரான ராகுல் சர்மா, 30 போலீசாரோடு 54 சல்வாஜூடும் படையினர் சேர்ந்து தாக்குதல் நடத்தியதாகக் கூறுகிறார். ஆனால் கிச்சி நந்தாவோ 74 சல்வாஜூடும் படையினரும் 5 போலீசாரும் 4 பழங்குடியினரும் சேர்ந்து தாக்குதல் நடத்தியதாகக் கூறுகிறார். முன்னுக்குப் பின் முரணான இவர்களின் உளறல்களே, இவர்களது கட்டுக் கதையை அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. இதுதவிர, ஆந்திராவிலிருந்து படுகொலை நடந்த இடத்திற்கு வந்த பத்திரிகையாளர்கள், ''சுட்டுக் கொல்லப்பட்ட 4 பெண்களும் ஆடைகள் கிழித்து அம்மணமான நிலையில் பிணமாகக் கிடந்ததைப் பார்க்கும்போது, அவர்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர் என்பதை நிரூபித்துக் காட்டுகிறது'' என்று நாளேடுகளில் படங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளனர்.

சல்வாஜூடும் குண்டர் படையின் பயங்கரவாதப் படுகொலைகள் தொடர்ந்து அம்பலமாகியுள்ள நிலையில், வேறு வழியின்றி சட்டிஸ்கர் மாநில அரசு நீதித்துறை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இதுதவிர, கொல்லப்பட்ட உறவினர்கள் விசாரணை கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் அம்மாநில உயர்நீதி மன்றம், படுகொலைக்குப் பிந்திய ஆய்வை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. இதன்படி, கடந்த பிப்ரவரி முதல் நாளன்று, தண்டேஸ்புரா கிராமத்தில் புதைக்கப்பட்ட 8 பழங்குடியினரின் உடல்கள் வெளியே எடுக்கப்பட்டு மருத்துவர்களால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

நக்சல்பாரிகளைக் கொன்றொழிப்பது மட்டுமின்றி, அப்பாவி பழங்குடி மக்களை ஏன் இப்படி தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி சல்வாஜூடும் குண்டர்படையினர் கொன்றொழிக்க வேண்டும்? சட்டிஸ்கர் அரசு ஏன் இத்தகைய கொலை வெறியாட்டங்களை நியாயப்படுத்தி, சல்வாஜூடும் குண்டர் படையை ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்? மைய, மாநில அரசுகளிடமிருந்து கோடிகோடியாய் தின்று கொழுக்கும் சல்வாஜூடும் குண்டர்படை, தனது வீரதீர சாதனையாகக் கணக்கு காட்டுவதற்காக செய்யப்பட்ட கொலையாக மட்டும் இதனைக் கருத முடியாது.

இப்படித்தான் பல நூற்றுக்கணக்கான அப்பாவி பழங்குடியினர் 'நக்சல் தீவிரவாதிகளுடனான மோதல்' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்கள் அவர்களின் கிராமங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டு அரசின் அகதி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கிராமங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. கனிம வளமிக்க பஸ்தார் பிராந்தியத்தில் எஃகு ஆலை நிறுவிச் சூறையாடக் கிளம்பியுள்ள டாடா, மிட்டல், எஸ்ஸார் முதலான தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கு விசுவாச சேவை செய்ய, பழங்குடியின மக்களை அவர்களின் மண்ணிலிருந்தே விரட்டியடிக்கும் நோக்கத்தோடுதான் சட்டிஸ்கர் அரசு சல்வாஜூடும் குண்டர்படையை ஏவி இத்தகைய பயங்கரவாத அட்டூழியங்களை நடத்தி வருகிறது.

பழங்குடியின மக்கள் காடுகளை விட்டு வெளியேறி விட வேண்டும் என்பதுதான் சட்டிஸ்கர் அரசின் எழுதப்படாத விதி. இதற்காகவே அரசும் போலீசும் பெருமுதலாளிகளும் இணைந்து பழங்குடியினர் சிலரை வைத்து உருவாக்கியுள்ள பயங்கவராதப் படைதான் சல்வாஜூடும். நக்சல்பாரிகளை அழித்தொழிப்பது என்ற பெயரில் பழங்குடியினரைத் தாக்கி, கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்தி அவர்களைக் காடுகளிலிருந்து விரட்டியடிக்கும் இக்கொலைகாரப் படை, இன்னமும் வெளியேறாத பழங்குடி மக்களை அச்சுறுத்தி எச்சரிக்கை விடுக்கும் நோக்கத்தோடுதான் அடுத்தடுத்து இத்தகையப் படுகொலைகளை நடத்தி வருகின்றது. ஜனவரி 8-ஆம் நாளன்று நடந்த இப்பயங்கரவாத படுகொலைகளைப் போலவே, பிஜாப்பூர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி 25-ஆம் தேதியன்று 5 பழங்குடியினரை அவர்களது வீடுகளிலிருந்து அடித்து இழுத்துச் சென்று காட்டுப்பகுதியில் சுட்டுக் கொன்றுள்ளது, இக்கொலைகாரப் படை.

அரசின் மறுகாலனியாக்கக் கொள்கைப்படி நடத்தப்படும் இப்பயங்கரவாத அட்டூழியங்களை நாட்டு மக்கள் வாய்மூடி அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் அவர்களும் நக்சல்பாரி தீவிரவாதிகள் என்கிறது சட்டீஸ்கர் அரசு. எனவேதான், சல்வாஜூடுமின் அட்டூழியங்களை எதிர்த்த குற்றத்திற்காக மனித உரிமைப் போராளியான மருத்துவர் பினாயக் சென் உள்ளிட்டு 40-க்கும் மேற்பட்ட மனித உரிமை இயக்கத்தினரும் பத்திரிகையாளர்களும் சமூக சேவகர்களும் அம்மாநில அரசால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

மறுகாலனியாக்கம் எனும் கொடிய போர் சட்டிஸ்கரில் தீவிரமடைந்து வருகிறது. மனிதாபிமானத்தாலோ நீதிமன்ற விசாரணை நாடகத்தாலோ இக்கொடிய போரை தடுத்து நிறுத்திட முடியாது. உள்நாட்டு - வெளிநாட்டுப் பெருமுதலாளிகளின் சூறையாடலுக்கான இப்பயங்கரவாதப் போரை, ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்குமான மக்கள் போரினால் மட்டுமே முறியடிக்க முடியும். அத்தகைய நீதியான விடுதலைப் போருக்கு அணிதிரள்வதே நாட்டு மக்களின் முன்னுள்ள முதன்மைக் கடமையாகியுள்ளது.

● குமார்

www.padippakam.com

# காஷ்மீர் சட்டமன்றத் தேர்தலும் இந்திய அரசின் பகற்கனவும்

**காஷ்மீர் மக்கள் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க முன்வந்ததை தேசிய ஒருமைப்பாட்டின் வெற்றியாகக் காட்டுவது அரைவேக்காட்டுத்தனமானது.**

காஷ்மீரில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல் இந்திய தேசியவாதிகளை ஆனந்தக் கூத்தாட வைத்துவிட்டது. அமர்நாத் பனிலிங்கக் கோயிலுக்கு நிலம் ஒதுக்கப்பட்ட விவகாரத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்குக் குலுங்கியதைக் கண்டு கிலி பிடித்துப் போயிருந்த இந்திய அரசு, அம்மாநிலத்தில் தேர்தலை நடத்தலாமா எனத் தடுமாறிக் கொண்டிருந்தது. தேர்தலை நடத்தினால், மக்கள் வாக்களிக்க வருவார்களா எனச் சந்தேகப்பட்டுக் கொண்டு இருந்தது.

ஆனால், யாருமே எதிர்பாராதவண்ணம் அம்மாநிலத்தில் கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த சட்டசபைத் தேர்தலில் 61.23 சதவீத வாக்குகள் பதிவாகின. அம்மாநிலத் தலைநகர் சிறீநகரில் 2002 -ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெறும் 5 சதவீத வாக்குகள்தான் பதிவாகின; இம்முறையோ அந்நகரைச் சேர்ந்த சட்டசபை தொகுதிகளில் 21.7 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. காஷ்மீரில் ஆயுதப் போராட்டம் தொடங்கிய பிறகு நடந்துள்ள தேர்தல்களில், இச்சட்டசபைத் தேர்தலில்தான் 1989-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தபடி அதிக வாக்குகள் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சட்டசபை தேர்தல்கள் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்துள்ளதைக் காட்டி, காஷ்மீர் மக்கள் ''தீவிரவாதத்தை''ப் புறக்கணித்துவிட்டதாகவும்; பிரிவினைவாதத்திற்கு டாட்டா காட்டிவிட்டதாகவும் இந்திய அரசு கூறி வருகிறது. நடுநிலையாளர்களோ, ''காஷ்மீர் மக்கள் தேர்தல் முறையில் நம்பிக்கை கொண்டு வாக்களித்திருப்பதால், இந்திய அரசு ஜனநாயக முறைப்படி காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்'' என ஆலோசனை சொல்கிறார்கள்.

காஷ்மீர் மக்களின் விடுதலை வேட்கை தணிந்துவிட்டதா எனப் பார்ப்பதற்கு முன், இந்திய அரசு காஷ்மீரில் தேர்தலை எந்த அளவிற்கு 'ஜனநாயக'ப்பூர்வமாக நடத்தியது என்பதைப் பார்ப்போம்.

காஷ்மீரில் வெறும் 800 தீவிரவாதிகள் தான் பதுங்கி இருப்பதாக இந்திய அரசு சமீபத்தில் கூறியிருக்கிறது. ஆனால், இந்த 800 தீவிரவாதிகளைப் பிடிக்கப் பல பத்தாயிரக்கணக்கான இராணுவச் சிப்பாய்களை காஷ்மீரில் குவித்திருக்கிறது, இந்திய அரசு. இதுவும் போதாதென்று தேர்தல் சமயத்தில் தேர்தலை அமைதியாக நடத்துவது என்ற பெயரில் பல்வேறு துணை இராணுவப் படைகளைச் சேர்ந்த சிப்பாய்கள் (மொத்தமாக 538 கம்பெனி) காஷ்மீரில் நிறுத்தப்பட்டனர். இவ்வளவு படைகளைக் குவித்த பிறகும் தேர்தலை ஒரே சமயத்தில் நடத்தாமல், ஏழு தவணைகளில் நடத்தியது தேர்தல் ஆணையம். காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஒரு இடத்தில் தேர்தல் நடந்தால், மற்ற இடங்களில் எல்லாம் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது. சட்டசபை தேர்தலைப் புறக்கணிக்கக் கோரிய ஹுரியத் மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் அனைவரும் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வீட்டுக் காவலிலோ சிறையிலோ அடைக்கப்பட்டனர்.

இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ததனால்தான் காஷ்மீரில் அமைதியாகத் தேர்தல் நடந்தது என்ற முடிவுக்கு வருவது அரைவேக்காட்டுத்தனமாகும். காஷ்மீரில் ஆயுதப் போராட்டம் நடத்தி வரும் பல்வேறு அமைப்புகளும் தேர்தலைச் சீர்குலைக்கும் வண்ணம் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என அறிவித்திருந்தது, தேர்தலை அமைதியாக - வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்குப் பெரும் பங்காற்றியது. இத்தேர்தலில் வாக்களித்தவர்களில் வெறும் 15 சதவீதப் பேர் தான் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஹுரியத் மாநாட்டுக் கட்சி அறிவித்திருந்ததைத் தவறு எனக் கூறியுள்ளனர். வாக்களித்தவர்களில் 54 சதவீதப் பேர் தேர்தல் புறக்கணிப்புக் கோரிக்கையை நியாயப்படுத்தியே கருத்துக் கூறியுள்ளனர். தேர்தலைப் புறக்கணித்தவர்களுள் பெரும்பாலோர் அரசியல் காரணங்களுக்காகவே தேர்தலைப் புறக்கணித்திருந்தார்களே தவிர, நடுத்தர வர்க்க விரக்தி மனப்பான்மையில் தேர்தலைப் புறக்கணிக்கவில்லை. அதே சமயம், வாக்களித்தவர்கள் (குறிப்பாக பள்ளத்தாக்கு முசுலீம் வாக்காளர்கள்) தேர்தல் மூலம் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்ற கனவிலும் மூழ்கிக் கிடக்கவில்லை.

''தேர்தலுக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் இடையே எவ்விதமான உறவும் கிடையாது. குடிநீர், சாலை வசதி, கல்வி

**சிறீநகர் அருகிலுள்ள மாகாம் வாக்குச் சாவடியில் துப்பாக்கி முனையின் கீழ் வாக்களிக்கக் காத்திருக்கும் பொது மக்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

போன்றவை எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மட்டும்தான் நாங்கள் ஓட்டுப் போடுகிறோம்.''

''ஆளுநர் ஆட்சியைவிட உள்ளூர் ஆட்கள் ஆட்சிக்கு வருவது மேல் என்பதால்தான் வாக்களிக்கிறோம்.''

''தேர்தல் என்பது உள்ளூர் அரசாங்கத்தை அமைப்பது என்பதோடு முடிந்துவிடுகிறது. நாங்கள் விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்; காஷ்மீரை விடுதலை செய்வதில் உறுதியாக நிற்போம்.'' -இவையெல்லாம் தேர்தலில் வாக்களித்தது குறித்து காஷ்மீர் மக்கள் பல்வேறு பத்திரிகையாளர்களிடம் கூறிய கருத்துகள்.



**பார்சூ வாக்குச்சாவடியில் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி குரல் கொடுத்தவர்களைத் துப்பாக்கியால் அடித்துத் துரத்தும் போலீசு.**

சட்டசபைக்கான தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஹிஸ்புல் முஜாஹிதீன் என்ற குழுவைச் சேர்ந்த தளபதிகளுள் ஒருவரான ராயீஸ் அகமது தர், டிசம்பர் 17 அன்று இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது இறுதி ஊர்வலத்தில் 10,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். காஷ்மீர் மக்கள் தேர்தலில் வாக்களித்தாலும் 'தீவிரவாதிகளை' அவர்கள் புறக்கணித்து விடவில்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

''பிரிவினைவாதிகள் விடுத்த தேர்தல் புறக்கணிப்பு கோரிக்கையை மீறி காஷ்மீர் மக்கள் வாக்களித்து விட்டதாகக் கூத்தாடும் இந்திய அரசு, தான் ஐ.நா. சபையில் ஒப்புக் கொண்டபடி காஷ்மீர் சுயநிர்ணய உரிமை குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திப் பார்க்கட்டுமே?'' எனச் சவால் விடுகிறார், ஹுரியத் மாநாட்டுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான சையத் அலி ஷா கிலானி. இந்தக் கோரிக்கை 'எல்லை' மீறியதாகக் கருதினால், ''இராணுவத்திற்கு வரம்பற்ற அதிகாரம் அளிக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்குவது; காஷ்மீர் பள்ளத்தாக்கைக் கலவரப் பகுதியாக அறிவித்திருப்பதை நீக்குவது; அரசியல் கைதிகளை விடுதலை செய்வது; விசாரணைக்காக 'அழைத்து'ச் செல்லப்படும் காஷ்மீர் முசுலீம்களை நாகரிகமாக நடத்துவது'' உள்ளிட்ட சில சாதாரண அரசியல் கோரிக்கைகளையாவது உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்வது வாக்களித்த மக்களுக்குத் திருப்பிச் செலுத்து நன்றிக்கடனாக அமையும்.

ஆனால், தேசிய மாநாட்டுக் கட்சி தலைமையில் அமைந்துள்ள கூட்டணி அரசோ,

**காஷ்மீர் மக்கள் வாக்களித்ததை கொண்டாடும் இந்திய அரசு, தான் ஐ.நா. சபையில் ஒப்புக் கொண்டபடி காஷ்மீர் சுயநிர்ணய உரிமை குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்துமா?**

காஷ்மீரில் இராணுவப் பாசறைகள் அமைக்கப்பட்டிருக்கும் தனியார் நிலங்களுக்கான வாடகையை உயர்த்திக் கொடுப்பதற்கே தில்லியில் உள்ள இராணுவத் தலைமையைக் கேட்க வேண்டும் என்று கையை விரிக்கிறது. அந்தளவிற்கு ஜனநாயகப் பூர்வமாக தேர்தல் நடந்து முடிந்துள்ள காஷ்மீரில் இராணுவத்தின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது.

இச்சட்டசபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தேர்தலில் எதிரும் புதிருமாகப் போட்டியிட்ட காங்கிரசும், தேசிய மாநாட்டுக் கட்சியும் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன. இத்தேர்தலில் காங்கிரசு கட்சிக்குக் கிடைத்த 16 இடங்களில் 3 இடங்கள்தான் பள்ளத்தாக்கு பகுதியைச் சேர்ந்தவை. மீதி 13 இடங்களும் ஜம்மு பகுதியைச் சேர்ந்தவை. ஜம்மு பகுதியில் இத்தொகுதிகளில் காங்கிரசு வெற்றி பெறுவதற்கு அமர்நாத் போராட்டத்தை ஜம்மு பகுதியில் நடத்திய இந்துவெறி அமைப்பான ''அமர்நாத் சங்கர்ஷ் சமிதி'' உதவியிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் ஜம்மு பகுதி இந்துக்களின் வாக்குகளை அள்ளிவிட வேண்டும் என்பதற்காகவே காங்கிரசு கட்சி, மென்மையான தீவிரவாதக் கட்சியாக அறியப்படும் (தனது முந்தைய கூட்டாளியான) மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் மீண்டும் கூட்டணி கட்டிக்கொள்ள மறுத்துவிட்டு, தேசிய ஒருமைப்பாட்டு பஜனையில் ஐக்கியமாகிவிட்ட தேசிய மாநாட்டுக் கட்சியுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் 2002-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெறும் ஒரேயொரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்ற பா.ஜ.க., இம்முறை அமர்நாத் நில விவகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்து மதவெறியைத் தூண்டிவிட்டதன் மூலம் 11 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஜம்மு-காஷ்மீரில் பிரிவினைவாதத்திற்கு எதிராகப் போராடுவதாகக் கூறிவரும் காங்கிரசும் பா.ஜ.க.வும் ஓட்டுப் பொறுக்குவதற்காக மதவெறியைத் தூண்டிவிட்டு மக்களைப் பிளந்துவரும் அயோக்கியதனத்தை என்னவென்பது?

காஷ்மீரின் விடுதலைக்கு ஆயுதந்தாங்கிப் போராடும் குழுக்களுக்கு இத்தேர்தல் உணர்த்தும் பாடம் என்னவென்பதும் பரிசிலனைக்குரியது. அமர்நாத் நில ஒதுக்கீடு விவகாரத்தின்பொழுது தன்னெழுச்சியாகத் திரண்டு எல்லையைக் கடக்கும் போராட்டத்தை உணர்வுபூர்வமாக நடத்திய மக்கள்,



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் ஏன் வாக்களித்தார்கள் என்ற விளக்கத்தை இந்த அமைப்புகளின் பல வீனத்தில்தான் தேட முடியும்.

காஷ்மீரில் ஆயுதந்தாங்கிப் போரா டும் குழுக்களில் பெரும்பாலானவை முசுலீம் மத அடிப்படைவாதத்தைத் தங்களின் சித்தாந்தமாகக் கொண் டுள்ளன. மேலும், இந்திய இராணுவத்தோடு மோதுவதை மட்டுமே ஒரே அரசியல் நடவடிக்கையாகக் கருதும் இக்குழுக்கள் மக்களின் அன்றாடப் பிரச் சினைகளுக்காகப் போராடுவதைத் திட் டமிட்டே புறக்கணிக்கின்றன. அமர்நாத் நில ஒதுக்கீடு போராட்டத்தின்பொழுது, பள்ளத்தாக்கில் விளைந்த ஆப்பிள் பழங் களை எல்லையைத் தாண்டி பாகிஸ்தா னுக்கு எடுத்துச் செல்வதன் மூலம், பள்ளத்தாக்கு முசுலீம் மக்கள் மீது ஜம்மு வைச் சேர்ந்த இந்துவெறி அமைப்புகள் திணித்த பொருளாதார முற்றுகையை முறியடிக்கும் போராட்டத்தைப் போராளி குழுக்கள் அறிவிக்கவில்லை. வர்த்தக சங்கங்களும், பொது மக்களும் தான் அறிவித்து நடத்தினார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இக்குழுக்கள் மக்களை வெறும் பார் வையாளராகவே வைத்திருக்கின்றன; அல்லது தங்களது கட்டளைக்குக் கீழ் படிய வேண்டிய பொம்மைகளாகப் பார்க்கின்றன. இப்படிப்பட்ட பெரிய அண் ணன் கண்ணோட்டத்திற்கு மத அடிப் படைவாதக் கண்ணோட்டம்தான் அடிப் படையாக அமைகிறது என்பதை நாம் இங்கு அழுத்தமாகப் பதிவு செய்ய வேண்டும். மேலும், இக்குழுக்கள் தங் களைத் திருத்திக் கொள்ளும் என்ற அதீத கற்பனையிலும் நாம் சிக்கிக் கொள்ள வேண்டியதில்லை.

காஷ்மீரின் விடுதலை பிரச்சினையை ஹுரியத் மாநாட்டுக் கட்சி தீர்த்து வைக் கும்; குடிநீர், சாலை வசதி போன்ற அன்றாட பிரச்சினைகளை ஓட்டுக் கட்சி கள் தீர்த்து வைக்கும் எனக் கருதிக் கொண்டிருக்கும் காஷ்மீர் மக்களின் அப் பாவித்தனத்தைக் களையெடுக்காத வரை; அவர்களை அரசியல்படுத்தி, அமைப்பாக்கி, அவர்களது முன்முயற்சி களைக் கட்டவிழ்த்துவிடாத வரை; இதனைச் செய்து முடிக்கும் வல்லமை கொண்ட புரட்சிகர-ஜனநாயக இயக்கங் கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத் தின் தலைமையைக் கைப்பற்றாத வரை, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சில சமயங் களில் தேர்தலை 'வெற்றிகரமாக' நடத்தி முடிப்பது வியப்பான விசயம் அல்ல!

• பச்சையப்பன்

# மோடித்துவாவின் புதிய பங்காளிகள்

இந்தியத் தரகு முதலாளிகளின் தளபதிகளாகக் கருதப்படும் ரத்தன் டாடா, அனில் அம்பானி, சுனில் மித்தல் (ஏர்-டெல் நிறுவனத் தலைவர்) ஆகி யோரின் மனம் கவர்ந்த நாயகனாகிவிட் டார், திருவாளர் நரேந்திர மோடி. குஜ ராத்தில் சமீபத்தில் நடந்த சர்வதேச முத லீட்டாளர்கள் மாநாட்டில் முதலாளிக ளின் கூட்டம் மோடியைப் புகழ்ந்து தள் ளியதைக் கேட்டால், தமிழ்நாட்டில் அம் மாவையும், தளபதிகளையும் புகழ்ந்து "கட்-அவுட்" வைக்கும் தொண்டன் கூடக் கூசிப் போயிருப்பான்.

ரத்தன் டாடா தனது நானோ கார் தொழிற்சாலையை குஜராத் மாநிலத் தில் அமைப்பதற்கு இரண்டே நாட் களில் ஒப்புதல் அளித்த மோடியின் தொழில் முனைவைக் கண்டு கிறுகிறுத் துப் போனதாகப் புகழ்ந்தார்.

"மோடி, ஒரு நிறுவனத்திற்குப் பதி லாக ஒரு மாநிலத்தையே ஆளும் மிகச் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரி" என் றார் ஏர்-டெல் நிறுவனத் தலைவர், சுனில் மித்தல்.

"கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே கனவு காணும் மோடியின் ஆற்றல்; குறிக்கோள்களை அடைவ தற்கு அவர் காட்டும் வேகம் ஆகிய வற்றை வைத்துப் பார்த்தால், மோடி தான் நமது நாட்டின் எதிர்காலத் தலை வர்" என்றார், அனில் அம்பானி.

"குஜராத்தை தொழில் முன்னேற் றம் அடைந்த மாநிலமாக மாற்றிக் காட் டியிருக்கும் நரேந்திர மோடி, இந்த நாட் டின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொழுது, இந்திய நாட்டின் முகமே மாறிப் போய்விடும்" என்றும் அனில் அம்பானி மோடியைத் தூக்கி வைத்துக் கொண்டாடினார்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில்; பா.ஜ.க.வின் பிரதம மந்திரி வேட்பாளராக அறிவிக்கப்பட் டுள்ள அத்வானிக்கு எதிராக, அக்கட்சி யின் மூத்தத் தலைவரும் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவருமான பைரோன்சிங் ஷெகாவத் போர்க் கொடி தூக்கிய நேரத்தில்; தரகு முதலாளிக ளின் தளபதிகள் நரேந்திர மோடியைப் புகழ்ந்து தள்ளியது பா.ஜ.க.விற்குள் ளேயே சலசலப்பை ஏற்படுத்தியது.

பரலோகம் போவதற்குள் இந்தியா வின் பிரதம மந்திரி நாற்காலியில் உட் கார்ந்து விடவேண்டும் எனப் பித்துப் பிடித்து அலையும் அத்வானி, "பா.ஜ.க., மைய ஆட்சியைப் பிடித் தால், மோடி பாணி பொருளாதார நடவ டிக்கைகளையே பின்பற்றும்" எனத் தரகு முதலாளிகளுக்கு உறுதிமொழி அளித்தார். நரேந்திர மோடியோ, "தான் பிரதமர் பதவிக்கான போட்டி யில் இல்லை" என அறிவித்து, தனது பணிவையும், விசுவாசத்தையும் காட்டிக் கொண்டார். இப்படியாக பா.ஜ.க.விற்குள் பிரதமர் பதவி நாற்கா லியைக் குறிவைத்து எழவிருந்த கோஷ் டிச் சண்டை தற்காலிகச் சமாதானத்துக்கு வந்தது.

•••

குஜராத்துக்கு வெளியே மோடி யின் செல்வாக்கு ஆர்.எஸ்.எஸ். அம்பி கள் என்ற வட்டத்துக்கு அப்பால் இருப் பதற்கான அறிகுறிகளே தென்படவில் லை. பா.ஜ.க.வின் செல்வாக்குமிக்க மாநிலங்களாகக் கருதப்படும் ராசஸ் தான், தில்லியில் கூட, மோடியின் தேர் தல் பிரச்சாரம், அக்கட்சிக்கு சட்டசபைத் தேர்தல்களில் வெற்றியைத் தேடித் தர வில்லை. மோடி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவதை, பா.ஜ.க.வில் இருக்கும் அருண்ஜெட்லி, சுஷ்மா சுவ ராஜ் போன்ற குட்டித் தலைவர்கள் கூட ஏற்றுக் கொள்வார்களா என்பதும் சந்தே கத்திற்குரியது. இவை அனைத்துக்கும் மேலாக 2002-இல் குஜராத்தில் நடந்த இந்துமதவெறிக் கலவரங்கள் காரண மாக, "இட்லருக்கு இணையான கொலைகாரன்" என்ற அவப்பெயரும் மோடிக்கு இருந்து வருகிறது. இந்த "நெருடல்களை" எல்லாம் தாண்டி, தரகு முதலாளிகளின் தளபதிகள் ஒரே



படிப்பகம்

www.padippakam.com



சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டின் தொடக்க விழாவில் (இடமிருந்து) குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, தரகு முதலாளிகள் முகேஷ் அம்பானி, ரத்தன் டாடா மற்றும் கென்யாவின் பிரதமர் அமோலோ ஒடிங்கா.

குரலில் மோடியை ஆதரிப்பதற்கான காரணம் எதுவாக இருக்க முடியும்?

தரகு முதலாளிகள் மோடிக்கு அளித்துள்ள இந்த ஆதரவைக் காரியவாதத் தொண்டன் தனது தலைவனைக் காக்கா பிடிப்பதைப் போன்ற ஒன்றாகச் சுருக்கி விட முடியாது. ''இவர் பிரதமரானால் நன்றாக இருக்கும்; இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நன்றாக இருக்கும்'' எனச் சாதாரண வாக்காளர் விரும்புவதைப் போலவும் தரகு முதலாளிகளின் விருப்பத்தை எளிதாக எடுத்துக் கொண்டு விட முடியாது. மேலும், தரகு முதலாளிகளின் தளபதிகள் சமீப காலத்தில் வேறெந்த அரசியல்வாதியையும் இப்படி வெளிப்படையாக ஆதரித்ததில்லை என்பதால், இப்பிரச்சினையைப் பற்றி பரிசீலிக்க வேண்டியது அவசியமாகி விடுகிறது.

ரத்தன் டாடா மோடியை ஆதரிப்பதற்குப் பின்வரும் காரணத்தைக் கூறுகிறார்: ''குஜராத்தில் நானோ கார் ஆலையை அமைப்பதற்கான ஒப்புதல் இரண்டு-மூன்று நாட்களில் கிடைத்து விட்டதாகவும்; பிற மாநிலங்களுக்குப் போயிருந்தால் இதற்கு 90 முதல் 180 நாட்கள் வரைக் காத்திருக்க வேண்டியிருந்திருக்கும்'' என்கிறார், அவர். டாடா மட்டுமல்ல, மோடியை ஆதரிக்கும் அனைவருமே குஜராத்தில தொழில் வளர்ச்சியில் அவர் பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருவதாகவும், பிற மாநில முதல்வர்கள் அவரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் அடித்துக் கூறி வருகிறார்கள்.

சமீபத்தில் நடந்த குஜராத் சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் 12 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டை குஜராத் பெறும் அளவிற்கு தொழில் வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் ஆச்சரியத்தோடு குறிப்பிட்டுள்ளன. இதற்கு முன் 2003, 2005, 2007-ஆம் ஆண்டுகளில் நடந்த முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் 6.34 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ஒப்பந்தங்களைப் பெற்று சாதனை படைத்த மோடி, 2009 மாநாட்டில் தனது முந்தைய சாதனையை தானே உடைத்துவிட்டதாகப் புகழப்படுகிறார்.

எனினும், மோடியின் இந்தச் சாதனை ''ஓவர் பில்ட்-அப்'' என ஆர்.எஸ்.எஸ்.இன் கொ.ப.செ. போலச் செயல்படும் ''தி இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளிதழே அம்பலப்படுத்தியிருக்கிறது. ''2003, 2005, 2007-இல் நடந்த குஜராத் சர்வதேச முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் 6.34 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான முதலீட்டை மோடி கவர்ந்து விட்டதாகக் கூறப்பட்டாலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் 1.30 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான முதலீடுகள் தான் குஜராத்திற்கு வந்திருப்பதாகவும்; 13,23,452 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் எனக் கூறப்பட்டதற்கு மாறாக, 1,62,784 வேலை வாய்ப்புகளை மட்டுமே உருவாக்கியிருப்பதாகவும்'' அந்நாளேடு மோடியின் சாதனைகளைக் கூறு போட்டுக் கிழித்து விட்டது.

மோடியைப் போல, ஒவ்வொரு மாநில முதல்வருமே தனது மாநிலத்தில் நுழையும் முதலீடுகள் பற்றியும்; அம்முதலீடுகள் உருவாக்கும் வேலை வாய்ப்புகள் பற்றியும் பொய்களையே புள்ளி விவரங்களாக வெளியிட்டு வருவதால், நாம் மோடியை மட்டும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டியதில்லை. ''தொழில் முன்னேற்றத்தில் மோடி காட்டும் அக்கறைக்காகத்தான் அவரை ஆதரிப்பதாக இந்திய முதலாளிகள் கூறினால், அவர்கள் பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமாரைத்தான் பாராட்ட வேண்டும். ஏனென்றால், குஜராத்தில் தொழில் முன்னேற்றத்திற்கான அடித்தளம் காங்கிரசு ஆட்சியின் பொழுதே உருவாக்கப்பட்டு விட்டது. ஆனால், நிதிஷ்குமாரோ ''பின்தங்கி தேங்கிப் போன பீகாரில் சாதனைகளைப் படைத்து வருவதாக'' முதலாளித்துவப் பத்திரிகையொன்று குறிப்பிடுகிறது. இந்த அளவுகோலின்படி பார்த்தால்; ரத்தன் டாடா போன்றோர் தொழில் முனைவுக்காக மோடியை ஆதரிப்பதாகக் கூறுவது ஊரை ஏய்க்கும் வாதம்தான்.


நானோ கார் ஆலையை குஜராத்தில் அமைப்பதற்காக நரேந்திர மோடி ரத்தன் டாடாவிற்கு 30,000 கோடி ரூபாய்க்கு மேலான சலுகைகளை வாரி வழங்கினார். அடானி குழுமத்தை நடத்தி வரும் கௌதம் அடானிக்கு ஒரு சதுர அடி ஐந்து பைசா என்ற விலையில் 33,000 ஏக்கர் நிலத்தை விற்றார், மோடி. அந்த நிலத்தை சதுர அடி 120 ரூபாய் என்ற விலையில் விற்று, 20,000 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியது, அடானி குழுமம்.

மோடி, இவை போன்ற சலுகைகளை வாரி வழங்குவதால்தான், அவரைத் தரகு முதலாளிகள் ஆதரிக்கிறார்கள் எனக் கூறினால், மோடியைப் போலவே அனைத்து ஓட்டுக் கட்சிகளையுமே தரகு முதலாளிகள் புகழ்ந்து தள்ளியிருக்க வேண்டும். நானோ கார் ஆலையைத் தங்கள் மாநிலத்தில் அமைக்க வேண்டி, தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநில முதல்வர்கள் டாடாவுக்குக் காவடி தூக்கிய வெட்கக்கேட்டை நாம் மறக்க முடியதே!



படிப்பகம்

www.padippakam.com



## மூலதனத்தின் நலனுக்காக ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகிய முகமூடிகளையெல்லாம் கழற்றிப் போட்டுவிட்டு, இந்து மதவெறி பாசிசத்தோடும் வெளிப்படையாகக் கைகோர்த்துக் கொள்ள தரகு முதலாளிகள் தயங்கமாட்டார்கள்.

அனைத்து மாநில முதல்வர்களும், அனைத்து ஓட்டுக் கட்சித் தலைவர்களும் தரகு முதலாளிகளுக்குச் சேவை செய்ய போட்டா போட்டி நடத்தும் பொழுது, ரத்தன் டாடா, அம்பானி போன்றோர் மோடியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதற்கு வேறென்ன சிறப்பான காரணம் இருந்துவிட முடியும்? மற்ற மாநில முதல்வர்களையும் மோடியையும் பிரித்துக் காட்டும் காரணி எது? என்ற கேள்விக்கான பதில்தான், தரகு முதலாளிகளுக்கும் மோடிக்கும் இடையே மலர்ந்துள்ள நெருக்கத்தைப் புரிய வைக்கும்.

•••

இந்து மதவெறி பாசிசம் என்ற அரசியல் காரணிதான் மோடியையும், தரகு முதலாளிகளின் தளபதிகளையும் நெருக்கமாகப் பிணைத்திருக்கிறது. ரத்தன் டாடா, அம்பானி போன்றோர் மோடியைப் போலப் பச்சையாக முசுலீம்களுக்கு எதிரான வெறுப்பைக் கக்குவதில்லை என்பது உண்மைதான். அதே சமயம் அவர்கள் ''பயங்கரவாதமும், தீவிரவாதமும்தான் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக'' நாகரீகமான முறையில் இந்துத்துவா அரசியலைப் பேசுகிறார்கள். குஜராத்தில் கடந்த ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலின்பொழுது, ''பாதுகாப்பில்லாமல் வளர்ச்சியில்லை'' என்றுதான் மோடி பிரச்சாரம் செய்தார்.

தற்பொழுது மோடித்துவம் எனக் கூறப்படும் இந்த இந்துமதவெறி அரசியல், முசுலீம்களுக்கு எதிரானது என்பது ஊரறிந்த உண்மை. அதேசமயம், அது அடித்தட்டு ''இந்துக்களையும்'' பாதுகாக்கவில்லை என்பதை குஜராத்தில் நடந்து வரும் விவசாயிகளின் தற்கொலைகளும்; செயற்கை வைரத்தைப் பட்டை தீட்டும் தொழிலாளர்களின் தற்கொலைகளும் நிரூபித்து வருகின்றன. குஜராத்தில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 47 சதவீதம் பேர் போதிய உணவு கிடைக்காமல், நோஞ்சானாகச் சூம்பிப் போய்க் கிடக்கின்றனர். இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகப் போராட வேண்டிய பெரும்பான்மை ''இந்து'' சமூகமோ, மோடிக்குப் பின்னால் நின்று கொண்டு, முசுலீம்களுக்கு எதிராகத் திரிசூலத்தைத் தூக்கிக் கொண்டு திரிகிறது. இந்தப் பிளவு, குஜராத்தில் ''தொழில் அமைதி''யைப் பாதுகாப்பதால், தரகு முதலாளிகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான்!

மற்ற மாநில முதல்வர்களும்கூட, ''தொழில் அமைதி''க்காக உழைக்கும் மக்களை ஒடுக்குவதில் சளைத்தவர்கள் இல்லையென்றாலும், மோடி உள்ளிட்ட இந்துமதவெறி பாசிஸ்டுகளோ மூலதனத்தின் நலனைப் பாதுகாப்பதைப் புனிதமான மதக் கடமையைப் போன்று கருதுகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரசு உள்ளிட்ட ஓட்டுக் கட்சிகள் பெயருக்காகவேனும் ''சோசலிசம்'' என வாய்ச் சவடால் அடித்து வந்த நாட்களில் கூட, பா.ஜ.க.வும், அதன் தாய் அமைப்பான ஜனசங்கமும் தனியார் முதலாளித்துவத்திற்குத்தான் ''ஜே'' போட்டு வந்தனர் என்ற உண்மை, மோடிக்கும் மற்ற அரசியல்வாதிகளுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள உதவும்.

மைய அரசு சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பே, குஜராத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக விவசாயிகளிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றுவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார், மோடி. உலக வங்கியின் கட்டளைக்கு இணங்க, விவசாயத்திற்கான மின் கட்டணத்தை மோடி உயர்த்திய பெழுது, அதனை ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த விவசாய சங்கமே எதிர்த்தது. எனினும், மோடி ''இந்து'' சகோதரர்கள் என்று கூட பாராமல், விசவாயிகளின் எதிர்ப்பை ஒடுக்கினார். மறுகாலனியாதிக்கம் எதை விரும்புகிறதோ, அதை ஈவு இரக்கமின்றி செயல்படுத்தும் அடியாளாகச் செயல்படுவதில் மோடி முன்னோடியாக இருந்து வருகிறார். இந்த மறுகாலனியாதிக்க அடிமைத்தனத்தை - அடியாள்தனத்தை ''குஜராத் இனப் பெருமை'' என்ற முகமூடிக்குள் போட்டு மறைப்பதிலும் அவர் வெற்றி பெற்றுவிட்டார்.

இவைதான் அம்பானி, டாடா, சுனில் மித்தல் ஆகிய தரகு முதலாளிகளை மோடிக்கு முடிசூட்டிவிடத் தூண்டுகிறது. இதன் பொருள், மற்றொரு ஆளும் வர்க்க பாசிசக் கட்சியான காங்கிரசைக் கைகழுவி விட்டார்கள் என்பதாகாது. மூலதனத்தின் நலனுக்காக, நாட்டை மீண்டும் காலனியாக்குவதற்காக, தரகு முதலாளிகள் ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகிய முகமூடிகளையெல்லாம் கழற்றிப் போட்டுவிட்டு இந்து மதவெறி பாசிசத்தோடும் வெளிப்படையாகக் கைகோர்த்துக் கொள்ளத் தயங்கமாட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

ரத்தன் டாடா, அனில் அம்பானி, சுனில் மித்தல் ஆகியோர் இந்து மதவெறி பாசிசத்தின் புரவலர்களாக மாறியிருக்கும் விசயம் விவாதத்திற்கு வந்தபொழுது, முதலாளித்துவப் பத்திரிகைகளோ, பிரச்சினையை மடை மாற்றிவிடத் தீவிரமாக முயன்றன. மறுகாலனியாதிக்கச் சூழலில், தரகு முதலாளிகளுக்கும் இந்துமதவெறி பாசிசத்திற்கும் இடையேயான சித்தாந்தபூர்வமான நெருக்கத்தை அம்பலப்படுத்தாத இப்பத்திரிகைகள், 'மோடிக்குச் சகிப்புத் தன்மை கிடையாது; மோடி, 2002 கலவரத்திற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்' என்ற வாதங்களை எடுத்துப் போட்டு, தரகு முதலாளிகளின் யோக்கியதையைக் காப்பாற்ற முயன்றன. மோடியோ, அம்முதலாளித்துவ அறிவு ஜீவிகளின் 'அறியாமையை' எண்ணிப் புன்னகைத்துக் கொண்டிருக்குகிறார்!

• செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and
...ted by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGAR AJ.

படிப்பகம்

www.padippakam.com







**2-ஆம் பக்கத் தொடர்ச்சி**

நெடுமாறன், திருமா, வைகோ, இராமதாசு முதல் இனவாதக் குழுக்கள் வரையிலான அனைவரும் தமிழீழத்தின் சுயநிர்ணய உரிமை குறித்த பிரச்சினையை, வெறும் மனிதாபிமான பிரச்சினையாக மாற்றியுள்ளனர். ''அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்து! போர் நிறுத்தம் செய்!'' என்ற கோரிக்கையுடன், இதற்காக இந்திய அரசு இலங்கையில் தலையிட வேண்டும் என்று கூறுவதன் மூலம், இந்திய அரசின் மேலாதிக்க நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தியாவின் மேலாதிக்கச் சதிகளை அம்பலப்படுத்தி சரியான அரசியல் முழக்கங்களுடன் போர்க்குணமிக்க முறையில் இவ்வமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் மக்களிடம் நிலவும் இந்திய தலையீடு குறித்த பிரமைகளை அகற்றியிருக்கின்றன.

பள்ளி-கல்லூரிகள் திறக்கப்பட்டவுடனேயே 12.02.09 அன்று திருச்சியில் பு.மா.இ.மு தோழர்கள், கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி திருச்சியிலுள்ள 117-வது பிரதேச இராணுவப்படை தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். உடுமலை, கோத்தகிரி, ஓசூர், கரூர், பென்னாகரம், சிவகங்கை, திருப்பூர், கோவில்பட்டி, நாமக்கல், மதுரை - என கடந்த பிப்ரவரி மாதம் முழுவதும் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களையும் பொதுக்கூட்டங்களையும் இவ்வமைப்புகள் நடத்தியுள்ளன.










இவை தவிர, காட்சி விளக்க புகைப் படங்கள், கேலிச்சித்திரங்கள், வீதி நாடகங்கள், துண்டுப்பிரசுரம்-தட்டிகள் மூலமாகவும், தொடர்ச்சியாக தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகவும் தமிழக மெங்கும் இவ்வமைப்புகள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

இலங்கையில் ஈழத் தமிழின அழிப்புப் போர் தீவிரமாகி வருகிறது. அநீதியான அப்போரையும் இந்திய மேலாதிக்கத்தையும் எதிர்த்தும், ஈழத்தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்தும் தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகளின் வீச்சான பிரச்சாரமும் போர்க்குணமிக்கப் போராட்டங்களும் தொடர்கின்றன.

**-பு.ஜ.செய்தியாளர்கள்.**








படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# தீட்சிதர் ஆதிக்கம் தகர்த்தோம்! தில்லைக் கோயிலை மீட்டோம்!

**புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் தொடர்போராட்டங்களின் விளைவாக, தில்லை நடராசர் கோவிலை இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர சென்னை உயர்நீதிமன்றம் பிப்.2, 2009 அன்று தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து.......**

- ★ **அரசாணை பிறப்பித்துத் தில்லைக் கோயிலை அறநிலையத் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவா!**
- ★ **நகை களவு, நிதி கையாடல், கோயில் நில விற்பனை, கொலை முதலான கிரிமினல் குற்றங்கள் புரிந்த தீட்சிதர்களைக் கைது செய்!**
- ★ **நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்திருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறி!**

**- ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து, 21.02.09 அன்று சிதம்பரம் நகரில் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளை ஒருங்கிணைத்து மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய பேரணி மற்றும் பொதுக்கூட்டம்.**










படிப்பகம்